**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 16-11-2011 Issued : 16-11-2011

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஆகஸ்ட் 11, 2011—தொகுதி 6—எண் 1**

**Thursday, the 11th August, 2011—Volume 6—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**11-8-2011**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| Governor and Council of Ministers | ix-xiii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiv-xvii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xviii-xxviii |

**1. இரங்கல் தீர்மானம்—**

தமிழக முன்னாள் ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் மறைவு .. .. .. 1-2

**2. வினாக்கள்—விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 2-38

**3. சிறப்புக் கவன ஈர்ப்பு—**

இலங்கைத் தமிழர்களுக்காக நிறைவேற்றப்பெற்ற தீர்மானத்தையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷே விமர்சித்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து .. .. .. .. 38-60

*திரு. ச. இராமச்சந்திரன் .. .. .. 39-45

திரு. அ. சவுந்தரராசன் .. .. .. 45-47

*திரு. சு. குணசேகரன் .. .. .. 47-50

டாக்டர் க. கிருஷ்ணசாமி .. .. 50-52

முனைவர் செ.கு. தமிழரசன் .. .. 53-56

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா .. .. 56-60

பக்கங்கள்

**4. விதி 110-ன்கீழ் அறிக்கை—**

காஞ்சிபுரம், திருவண்ணாமலை ,திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள நீர்வள அமைப்புகளை வலுப்படுத்தி, நீர் வழங்கு கால்வாய்களைப் புனரமைத்து நவீனப் படுத்துதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை .. .. 60-63

**5. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2011–2012–பொது விவாதம்**—தொடர்ச்சி 63-161

*திரு. சி.எச். சேகர் .. .. 64-74

*மாண்புமிகு திரு. பி. தங்கமணி .. .. 67-68, 121

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா .. 71-72, 99

*திரு. ம. முத்துராமலிங்கம் .. .. 74-85

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி .. .. 84, 122, 123-124, 126-129, 150

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி .. .. 86

செல்வி கே. பாலபாரதி .. .. 86-87

முனைவர் செ.கு. தமிழரசன் .. .. 87-99

*மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி .. 98, 152

*திரு. பி.வி. கதிரவன் .. .. 100-104

திரு. உ. தனியரசு .. .. 104-110

*திரு. ரா. சரத்குமார் .. .. 110-119

டாக்டர் க. கிருஷ்ணசாமி .. .. 119-126, 128-130, 146, 158

*முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா .. .. 130-139

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் .. .. 139-140, 152



பக்கங்கள்

**5. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2011–2012–பொது விவாதம்**—தொடர்ச்சி

*திரு. ம. கலை அரசு .. .. 140-145, 147-152

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் .. 142-143

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு .. 144-147

திரு. டி. இராமச்சந்திரன் .. .. 147

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி 151

*திரு. என்.ஆர். ரெங்கராஜன் .. .. 153-161

*திரு. க. பாலகிருஷ்ணன் .. .. 157-158

**6. அரசினர் தீர்மானம்—**

விதி 32–ஐத் தளர்த்துதல்.. .. .. 161

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. 162**

## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

   *பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் துறை, உள் துறை*

2. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

   *நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள்*

3. **வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு.கே.ஏ. செங்கோட்டையன்:**

   *வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு*

4. **மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:**

   *மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு*

5. **நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:**

   *நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்*

**6. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**7. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**8. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

வணிக வரிகள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**9. அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

–

**10. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல் மற்றும் அறிவியல்-தொழில்நுட்பவியல்

**11. பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல்பொருளியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்



**12. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

**13. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**14. நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

**15. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு

**16. பொதுப் பணித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

**17. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:**

தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

**18. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:**

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு

**19. சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

*தேர்தல் அறிக்கை அமலாக்கம் உள்ளிட்ட சிறப்புத் திட்டங்கள் அமலாக்கம்*

**20. வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**

*வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், எடைகள்—அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்*

**21. செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்:**

*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் இலஞ்ச ஒழிப்பு*

**22. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:**

*கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றம் கிராமதானம்*

**23. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:**

*சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*



**24. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:**

*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம்*

**25. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:**

*கைத்தறி மற்றும் துணித் தொழில்*

**26. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:**

*தகவல் தொழில்நுட்பம்*

**27. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:**

*ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*

**28. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:**

*போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம்*

**29. மீன் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:**

*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்*

30. உணவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. புத்திசந்திரன்:

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

31. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி.த.செல்லப்பாண்டியன்:

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு

32. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

33. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:

கால்நடை பராமரிப்பு, பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

34. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள் மற்றும் அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு) உள்ளிட்ட சிறுபான்மையினர் நலன்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home

2. **Minister for Finance** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

Finance, Planning, Legislative Assembly, Elections and Passports

3. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K.A. Sengottaiyan:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development

4. **Minister for Electricity & Prohibition and Excise** .. **The Hon. Thiru Natham R. Viswanathan:**

Electricity and Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses

5. **Minister for Municipal Administration & Rural Development** .. **The Hon. Thiru K.P. Munusamy:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**6. Minister for Rural Industries** .. **The Hon. Thiru C. Shanmugavelu:**

Rural Industries including Cottage Industries and Small Industries

**7. Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

**8. Minister for Commercial Taxes and Registration** .. **The Hon. Thiru Agri S.S. Krishnamoorthy:**

Commercial Taxes & Registration and Stamp Act

**9. Minister** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

-

**10. Minister for Higher Education** .. **The Hon. Thiru P. Palaniappan:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology

**11. Minister for School Education, Sports & Youth Welfare** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

School Education and Archaeology, Sports and Youth Welfare

**12. Minister for Co-operation** .. **The Hon. Thiru Sellur K. Raju:**

Co-operation, Statistics and Ex-Servicemen Welfare



**13. Minister for Forests** .. **The Hon. Thiru K.T. Patchaimal:**

Forests and Cinchona

**14. Minister for Highways & Minor Ports** .. **The Hon. Thiru Edappadi K. Palanisamy:**

Highways & Minor Ports

**15. Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru S.P. Shanmuganathan:**

Hindu Religious and Charitable Endowments (H.R. & C.E.) and Tamil Official Language & Tamil Culture

**16. Minister for Public Works** .. **The Hon. Thiru K.V. Ramalingam:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works

**17. Minister for Industries** .. **The Hon. Thiru S.P. Velumani:**

Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives

**18. Minister for Environment** .. **The Hon. Thiru T.K.M. Chinnayya:**

Environment and Pollution Control

**19. Minister for Special Programme Implementation** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Implementation of Special Programmes including implementation of the Election Manifesto

| | | |
|---|---|---|
| 20. Minister for Revenue | .. | **The Hon. Thiru P. Thangamani:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies |
| 21. Minister for Information, Law, Courts and Prisons | .. | **The Hon. Thiru G. Senthamizhan:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press, Law, Courts and Prisons, Personnel and Administrative Reforms and Prevention of Corruption |
| 22. Minister for Khadi and Village Industries | .. | **The Hon. Thiru P. Sendur Pandian:** Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan |
| 23. Minister for Tourism | .. | **The Hon. Tmt. S. Gokula Indira:** Tourism, Tourism Development Corporation |
| 24. Minister for Social Welfare | .. | **The Hon. Tmt. Selvi Ramajayam:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes, Welfare of the Differently abled and Social Reforms |
| 25. Minister for Handlooms and Textiles | .. | **The Hon. Thiru B.V. Ramanaa:** Handlooms & Textiles |
| 26. Minister for Information Technology | .. | **The Hon. Thiru R.B. Udhayakumar:** Information Technology |



| | | |
|---|---|---|
| 27. Minister for Adi Dravidar & Tribal Welfare | .. | **The Hon. Thiru N. Subramanian:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 28. Minister for Transport | .. | **The Hon. Thiru V. Senthil Balaji:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act |
| 29. Minister for Fisheries | .. | **The Hon. Thiru K.A. Jayapal:** Fisheries and Fisheries Development Corporation |
| 30. Minister for Food | .. | **The Hon. Thiru Budhichandhiran:** Food, Civil Supplies, Consumer Protection and Price Control |
| 31. Minister for Labour | .. | **The Hon. Thiru S.T. Chellapandian:** Labour, Population, Employment and Training, Newsprint Control, Census and Urban & Rural Employment |
| 32. Minister for Health | .. | **The Hon. Dr. V.S. Vijay:** Health, Medical Education and Family Welfare |
| 33. Minister for Animal Husbandry | .. | **The Hon. Thiru N.R. Sivapathi:** Animal Husbandry, Milk and Dairy Development |
| 34. Minister for Backward Classes and Minorities Welfare | .. | **The Hon. Thiru A. Mohammedjan:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees and Evacuees and Minorities Welfare including Wakf |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. ப. தனபால்*

## மாற்றுத் தலைவர்கள்#

*திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்*

*திரு. தங்க. தமிழ்ச்செல்வன்*

*திரு. செ. தாமோதரன்*

*திரு. எல். வெங்கடேசன்*

*திரு. ப. டில்லி பாபு*

*திரு. சு. குணசேகரன்*

## செயலாளர்

*திரு. அ.மு.பி. ஜமாலுதீன்*

---

# 7-6-2011 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சிறப்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம்., பி.ஜி.எல்., எம்.பி.ஏ. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., எம்.பி.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ம. பன்னீர் செல்வம், எம்.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ல. பத்மாவதி, பி.எஸ்சி., எஸ்.ஓ.ஜி.இ. | .. | குழு அலுவலர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. க. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பி.எட்., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |



| | | |
|---|---|---|
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. பூபதி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. சங்கர், பி.காம்., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி கோ.மு. வனஜா, எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திரு. வே. ரவிசங்கர், பி.எஸ்சி., எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. கி. சீனிவாசன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.ஜி.எல்., சி.எல்.ஐ.எஸ். | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. ந. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. சக்திவேலு, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. அ. வீரராஜேந்திரன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி க. செந்தாமரை, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. எம். கோபாலகிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இரா. கோபிநாத், பி.காம். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இராம.சோ. கிரிதரன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சி. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திருமதி அ. ராஜலெட்சுமி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இரா. விஜயகுமார், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ப. தேவபிரான், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| திரு. கு. தண்டபாணி, பி.காம். | .. | செயலாளரின் தனிச் செயலர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. | .. | கலசப்பாக்கம் |
| 2. | அசோக், திரு. எம்.கே. | .. | வேளச்சேரி |
| 3. | அண்ணாதுரை, திரு. இரா. | .. | மதுரை தெற்கு |
| 4. | அப்துல் ரஹீம், திரு. எஸ். | .. | ஆவடி |
| 5. | அரங்கநாதன், திரு. ஆ.க. | .. | கீழ்பெண்ணாத்தூர் |
| 6. | அருண் சுப்பிரமணியன், திரு. மு. | .. | திருத்தணி |
| 7. | அருண் பாண்டியன், திரு. செ. | .. | பேராவூரணி |
| 8. | அருள்செல்வன், திரு. ஆர். | .. | மயிலாடுதுறை |
| 9. | அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், திரு. | .. | சேலம் வடக்கு |
| 10. | அழகுவேலு, திருமதி க. | .. | கள்ளக்குறிச்சி (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. க. | .. | கும்பகோணம் |
| 13. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 14. | அன்பழகன், திரு. ஜெ. | .. | சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி |
| 15. | அஸ்லம் பாஷா, திரு. அ. | .. | ஆம்பூர் |
| 16. | ஆறுக்குட்டி, திரு. வி.சி. | .. | கவுண்டம்பாளையம் |
| 17. | ஆறுமுகம், திரு. எம். | .. | வால்பாறை (செ.வ.) |
| 18. | ஆனந்தன், திரு. மு.சு.மு. | .. | திருப்பூர் வடக்கு |
| 19. | இந்திராகாந்தி, திருமதி த. | .. | துறையூர் (செ.வ.) |

20. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்
21. இராமச்சந்திரன், திரு. ச. .. ஆலந்தூர்
22. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி
23. இராமலிங்கம், திரு. கே.வி. .. ஈரோடு மேற்கு
24. இராஜி, திரு. வி.எஸ். .. செய்யூர் (செ.வ.)
25. இராஜேந்திரன், திரு. இரா. .. குறிஞ்சிப்பாடி
26. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
27. உதயகுமார், திரு. ஆர்.பி. .. சாத்தூர்
28. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
29. எடப்பாடி கே. பழனிசாமி, திரு. .. எடப்பாடி
30. கடம்பூர் ராஜு, திரு. .. கோவில்பட்டி
31. கணிதா சம்பத், திருமதி எஸ். .. மதுராந்தகம் (செ.வ.)
32. கணேசன், திரு. பா. .. உத்திரமேரூர்
33. கணேஷ்குமார், திரு. அ. .. செஞ்சி
34. கதிரவன், திரு. பி.வி. .. உசிலம்பட்டி
35. கந்தன், திரு. கே.பி. .. சோழிங்கநல்லூர்
36. கருணாநிதி, திரு. மு. .. திருவாரூர்
37. கருப்பசாமி, திரு. ஏ.ஏ. .. அவினாசி (செ.வ.)
38. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரன்கோவில் (செ.வ.)
39. கருப்பையா, திரு. பழ. .. துறைமுகம்
40. கருப்பையா, திரு. மு.வீ. .. சோழவந்தான் (செ.வ.)
41. கலை அரசு, திரு. ம. .. அணைக்கட்டு
42. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்



43. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்
44. காமராஜ், திரு. என்.வி. .. வேதாரண்யம்
45. காமராஜ், திரு. செ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
46. கிட்டுசாமி, திரு. ஆர்.என். .. மொடக்குறிச்சி
47. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
48. கிருஷ்ணமூர்த்தி, திரு. கொ.எ. .. பர்கூர்
49. கிருஷ்ணன், திரு. கு.ப. .. ஆலங்குடி
50. கிருஷ்ணன், திரு. சி. .. ஓமலூர்
51. குணசீலன், திரு. வே. .. வந்தவாசி (செ.வ.)
52. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை
53. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)
54. குப்பன், திரு. கே. .. திருவொற்றியூர்
55. குமரகுரு, திரு. இரா. .. உளுந்தூர்பேட்டை
56. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஜெயங்கொண்டம்
57. கோகுல இந்திரா, திருமதி எஸ். .. அண்ணா நகர்
58. கோபால்சாமி, திரு. க. .. ராஜபாளையம்
59. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
60. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
61. சக்தி, திருமதி ம. .. சீர்காழி (செ.வ.)
62. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
63. சண்முகம், திரு. சி.வி. .. விழுப்புரம்
64. சண்முகவேலு, திரு. சி. .. மடத்துக்குளம்
65. சந்திரகுமார், திரு. வி.சி. .. ஈரோடு கிழக்கு

| | | |
|---|---|---|
| 66. | சந்திரசேகர், திரு. ஆர். | .. மணப்பாறை |
| 67. | சம்பத், திரு. எம்.சி. | .. கடலூர் |
| 68. | சம்பத்குமார், திரு. கோவி. | .. வாணியம்பாடி |
| 69. | சம்பத்குமார், திரு. ப. | .. திருச்செங்கோடு |
| 70. | சரத்குமார், திரு. ரா. | .. தென்காசி |
| 71. | சவுந்தரராசன், திரு. அ. | .. பெரம்பூர் |
| 72. | சாந்தி, திருமதி ஆர். | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 73. | சாமி, திரு. ஆர். | .. மேலூர் |
| 74. | சிவக்கொழுந்து, திரு. ப. | .. பண்ருட்டி |
| 75. | சிவசங்கர், திரு. எஸ்.எஸ். | .. குன்னம் |
| 76. | சிவசுப்பிரமணியன், திரு. எம்.பி.எஸ். | .. நெய்வேலி |
| 77. | சிவபதி, திரு. என்.ஆர். | .. முசிறி |
| 78. | சின்னசாமி, திரு. ஆர். | .. சிங்காநல்லூர் |
| 79. | சின்னராஜ், திரு. ஓ.கே. | .. மேட்டுப்பாளையம் |
| 80. | சின்னையா, திரு. டி.கே.எம். | .. தாம்பரம் |
| 81. | சீனிவாசன், திரு. ஆர். | .. ஆற்காடு |
| 82. | சுந்தரம், திரு. பி.எல். | .. பவானிசாகர் (செ.வ.) |
| 83. | சுந்தரராஜ், டாக்டர் ச. | .. பரமக்குடி (செ.வ.) |
| 84. | சுந்தர்ராஜன், திரு. ஆர். | .. மதுரை மத்தி |
| 85. | சுபா, திருமதி ர. | .. கெங்கவல்லி (செ.வ.) |
| 86. | சுப்பிரமணியன், திரு. ந. | .. செய்யாறு |
| 87. | சுப்பையா, திரு. இ. | .. அம்பாசமுத்திரம் |
| 88. | சுப்ரமணியன், திரு. ந. | .. கந்தர்வகோட்டை (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 89. | சுரேஷ்குமார், திரு. டி | .. செங்கம் (செ.வ.) |
| 90. | செங்குட்டுவன், திரு. டி. | .. வேப்பனஹள்ளி |
| 91. | செங்கோட்டையன், திரு. கே.ஏ. | .. கோபிசெட்டிப்பாளையம் |
| 92. | செந்தமிழன், திரு. ஞா. | .. சைதாப்பேட்டை |
| 93. | செந்தில்குமார், திரு. எஸ். | .. திருவெறும்பூர் |
| 94. | செந்தில் பாலாஜி, திரு. வி. | .. கரூர் |
| 95. | செந்தூர் பாண்டியன், திரு. பூ. | .. கடையநல்லூர் |
| 96. | செல்லப்பாண்டியன், திரு. சி.த. | .. தூத்துக்குடி |
| 97. | செல்லூர் கா. ராஜு, திரு. | .. மதுரை மேற்கு |
| 98. | செல்வம், திரு. எஸ்.கே. | .. வீரபாண்டி |
| 99. | செல்வராஜு, திரு. எம்.கே. | .. சேலம் தெற்கு |
| 100. | செல்வி ராமஜெயம், திருமதி | .. புவனகிரி |
| 101. | செழியன், திரு. கோவி. | .. திருவிடைமருதூர் (செ.வ.) |
| 102. | சேகர், திரு. சி.எச். | .. கும்மிடிப்பூண்டி |
| 103. | சோமசுந்தரம், திரு. வி. | .. காஞ்சிபுரம் |
| 104. | சோழன் சித. பழனிச்சாமி, திரு. | .. காரைக்குடி |
| 105. | சௌந்தரபாண்டியன், திரு. அ. | .. லால்குடி |
| 106. | டில்லி பாபு, திரு. ப. | .. அரூர் (செ.வ.) |
| 107. | தங்கமணி, திரு. பி. | .. குமாரபாளையம் |
| 108. | தங்கம் தென்னரசு, திரு. | .. திருச்சுழி |
| 109. | தங்கவேலன், திரு. சுப. | .. திருவாடனை |
| 110. | தங்கவேல், திரு. கே. | .. திருப்பூர் தெற்கு |
| 111. | தமிழரசன், திரு. கா. | .. மதுரை கிழக்கு |

112. தமிழரசன், முனைவர் செ.கு. .. கீழ்வைத்தினான்குப்பம் (செ.வ.)
113. தமிழழகன், திரு. க. .. திட்டக்குடி (செ.வ.)
114. தமிழ்ச்செல்வன், திரு. இரா. .. பெரம்பலூர் (செ.வ.)
115. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி
116. தனபால், திரு. ப. .. ராசிபுரம் (செ.வ.)
117. தனியரசு, திரு. உ. .. பரமத்தி வேலூர்
118. தன்சிங், திரு. ப. .. பல்லாவரம்
119. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
120. திராவிடமணி, திரு. மு. .. கூடலூர் (செ.வ.)
121. தினகரன், திரு. க. .. சூலூர்
122. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்
123. துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை, திரு. ரா. .. கோயம்புத்தூர் தெற்கு
124. துரைமுருகன், திரு. .. காட்பாடி
125. துரையப்பா, டாக்டர் ச. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
126. நஞ்சப்பன், திரு. ந. .. பெண்ணாகரம்
127. நடராஜ், திரு. என்.எஸ்.என். .. காங்கேயம்
128. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்
129. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
130. நல்லதம்பி, திரு. கு. .. எழும்பூர் (செ.வ.)
131. நாகராஜன், திரு. கே.பி. .. மயிலம்
132. நாஞ்சில் முருகேசன், திரு. அ. .. நாகர்கோவில்
133. நாராயணன், திரு. ஆ. .. நாங்குநேரி
134. நாராயணன், திரு. பி.ஜி. .. பவானி



135. நீலகண்டன், திரு. வ. .. திரு. வி.க. நகர் (செ.வ.)
136. பச்சைமால், திரு. கே.டி. .. கன்னியாகுமரி
137. பரமசிவம், திரு. கே.பி. .. பல்லடம்
138. பவுன்ராஜ், திரு. சு. .. பூம்புகார்
139. பழனிசாமி, திரு. கே.சி. .. அரவக்குறிச்சி
140. பழனிச்சாமி, திரு. ச. .. வேடசந்தூர்
141. பழனியப்பன், திரு. பி. .. பாப்பிரெட்டிப்பட்டி
142. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்
143. பாண்டியராஜன், திரு. க. .. விருதுநகர்
144. பாபு முருகவேல், திரு. ர.ம. .. ஆரணி
145. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
146. பார்த்தசாரதி, திரு. ப. .. விருகம்பாக்கம்
147. பார்த்திபன், திரு. எஸ்.ஆர். .. மேட்டூர்
148. பாலகிருஷ்ணன், திரு. க. .. சிதம்பரம்
149. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்
150. பாஸ்கர், திரு. அ. .. தருமபுரி
151. பாஸ்கர், திரு. கே.பி.பி. .. நாமக்கல்
152. பிரபாகர், திரு. ஜே.சி.டி. .. வில்லிவாக்கம்
153. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்
154. பீம்ராவ், திரு. க. .. மதுரவாயல்
155. புத்திசந்திரன், திரு. .. உதகமண்டலம்
156. புஷ்ப லீலா ஆல்பன், டாக்டர் (திருமதி) .. பத்மநாபபுரம்
157. பூனாட்சி, திரு. தோ.பெ. .. மணச்சநல்லூர்

158. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்

159. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

160. பெருமாள், திரு. இரா. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

161. பெருமாள், திரு. செ. .. ஏற்காடு (ஆ.வா.)

162. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. உடுமலைப்பேட்டை

163. பொன்னுசாமி, திரு. கே. .. தாராபுரம் (செ.வ.)

164. பொன்னுப்பாண்டி, திரு. வெ. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)

165. போஸ், திரு. ஏ.கே. .. மதுரை வடக்கு

166. மகாலிங்கம், திரு. பெ. .. கீழ்வேளூர் (செ.வ.)

167. மணிமாறன், திரு. இரா. .. பூந்தமல்லி (செ.வ.)

168. மணிவேல், திரு. துரை. .. அரியலூர்

169. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் வடக்கு

170. மனோகரன், திரு. ஆர். .. திருச்சிராப்பள்ளி கிழக்கு

171. மனோகரன், திரு. க. .. திருப்போரூர்

172. மனோகர், திரு. பி.ஆர். .. சோளிங்கர்

173. மனோரஞ்சிதம், திருமதி .. ஊத்தங்கரை (செ.வ.)

174. மாதேஸ்வரன், திரு. சு. .. ஆத்தூர் (செ.வ.)

175. மார்க்கண்டேயன், திரு. கு.வ. .. விளாத்திகுளம்

176. முத்துகருப்பண்ணசாமி, திரு. எம்.கே. .. பொள்ளாச்சி

177. முத்துக்குமரன், திரு. எஸ்.பி. .. புதுக்கோட்டை

178. முத்துக்குமார், திரு. வி. .. விருத்தாசலம்

179. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்



180. முருகன், திரு. மு. .. முதுகுளத்தூர்

181. முருகுமாறன், திரு. என். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

182. முருகேசன், திரு. து. .. செங்கல்பட்டு

183. முனுசாமி, திரு. கே.பி. .. கிருஷ்ணகிரி

184. முஹம்மத்ஜான், திரு. அ. .. இராணிப்பேட்டை

185. மூர்த்தி, திரு. வி. .. மாதவரம்

186. மைக்கேல் ராயப்பன், திரு. சி. .. ராதாபுரம்

187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

188. மோகன், திரு. ப. .. சங்கராபுரம்

189. ரமணா, திரு. பி.வி. .. திருவள்ளூர்

190. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. அந்தியூர்

191. ரமேஷ், திரு. கா.கோ. .. திருப்பத்தூர்

192. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)

193. ராமசாமி, திரு. ஆ. .. நிலக்கோட்டை (செ.வ.)

194. ராமச்சந்திரன், திரு. கா. .. குன்னூர்

195. ராமமூர்த்தி, திரு. ஆர். .. விக்கிரவாண்டி

196. ராஜநாயகம், திரு. மு. .. அறந்தாங்கி

197. ராஜலட்சுமி, திருமதி ஆர். .. மயிலாப்பூர்

198. ராஜா, திரு. ஏ.கே.டி. .. திருப்பரங்குன்றம்

199. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி

200. ராஜா, திரு. பொன். .. பொன்னேரி (செ.வ.)

201. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. .. சிவகாசி

202. ரெங்கசாமி, திரு. எம். .. தஞ்சாவூர்

203. ரெங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை

204. ரெத்தினசாமி, திரு. மு. .. திருவையாறு

205. லாசர், திரு. ஏ. .. பெரியகுளம் (செ.வ.)

206. லிங்கமுத்து, திரு. கு. .. குடியாத்தம் (செ.வ.)

207. வளர்மதி, திருமதி பா. .. ஆயிரம் விளக்கு

208. விஜயகாந்த், திரு. .. ரிஷிவந்தியம்

209. விஜயதரணி, திருமதி எஸ். .. விளவங்கோடு

210. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை

211. விஜயலட்சுமி பழனிசாமி, திருமதி ப. .. சங்கரி

212. விஜய், டாக்டர் வி.எஸ். .. வேலூர்

213. வீரமணி, திரு. கே.சி. .. ஜோலார்பேட்டை

214. வெங்கடாச்சலம், திரு. என்.டி. .. பெருந்துறை

215. வெங்கடாஜலம், திரு. கோ. .. சேலம் மேற்கு

216. வெங்கடேசன், திரு. எல். .. திருக்கோவிலூர்

217. வெற்றிவேல், திரு. பு. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

218. வேணுகோபாலு, திரு. கே.எஸ்.என். .. பழனி

219. வேதாச்சலம், திரு. எஸ். .. அம்பத்தூர்

220. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை

221. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்

222. வைகைச்செல்வன், டாக்டர் .. அருப்புக்கோட்டை

223. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு

224. வைரமுத்து, திரு. பி.கே. .. திருமயம்



225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. இராமநாதபுரம்

226. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்

227. ஜானகிராமன், திரு. ஐ. .. வானூர் (செ.வ.)

228. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

229. ஜெயசுதா, திருமதி எல். .. போளூர்

230. ஜெயபால், திரு. கே.ஏ. .. நாகப்பட்டினம்

231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஸ்ரீரங்கம்

232. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்

233. ஹரிதாஸ், டாக்டர் த. .. திண்டிவனம் (செ.வ.)

234. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் .. நியமனம்

235. (வெற்றிடம்) .. திருச்சிராப்பள்ளி மேற்கு

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஏ. நவநீதகிருஷ்ணன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆடி 26, 2011
## ஆகஸ்ட் 11, வியாழக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.”

பொருள் வரும் வழிகளை உண்டாக்குதல், பெற்ற பொருள்களைச் சேர்த்தல், சேர்த்தவற்றைக் காத்தல், பகிர்ந்து கொடுத்தல் ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்வதே உயர்ந்த அரசாகும்.

### 1. இரங்கல் தீர்மானம்

### தமிழக முன்னாள் ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழக முன்னாள் ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்.

*“தமிழ்நாட்டின் ஆளுநராக 17–2–1988 முதல் 24–5–1990 வரை பணியாற்றிய டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் 10–8–2011 அன்று தனது 90–வது வயதில் இயற்கை எய்தியது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொண்ணா துயரமும் கொள்கிறது.*

*1948ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணி அதிகாரியாக தம் பணியைத் துவக்கிய டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் மத்திய அரசின் செயலாளராகவும், முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் முதன்மைச் செயலாளராகவும், இங்கிலாந்து நாட்டிற்கான இந்தியத் தூதுவராகவும், மகாராஷ்டிரா மாநில ஆளுநராகவும், மாநிலங்களவை உறுப்பினராகவும் சிறப்புற பணியாற்றியவர். அவர் தமிழ்நாட்டில் ஆளுநராகப் பணியாற்றிய காலத்தில், குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டபோது,*

[2011 ஆகஸ்ட் *11*

*திறம்பட நிர்வாகத்தை நடத்தியவர் ஆவார். அவர் பல்வேறு புத்தகங்களையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.*

*அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."*

*இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும்முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)*

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**24—**

### கட்டட வசதி

*__1458—திரு. கே. உலகநாதன்:__ *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் காவல் நிலையம் அரசுக்குச் சொந்தமான சமுதாயநலக் கூடக் கட்டடத்தில் தற்போது இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக 40 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, 23–9–2010இல் அரசாணை வழங்கப்பட்டது. 24–12–2010இல்*



2011 ஆகஸ்ட் *11*] [திரு. ஒகே. சின்னராஜ்]

*ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. தற்போது 7–6–2011இல் ஒப்பந்ததாரருடன் பணி ஒப்பந்தம், அதாவது* Work Agreement *போடப்பட்டு புதிய காவல் நிலையம் கட்டுவதற்கான பணிகள் 1–8–2011 அன்று துவங்கப்பட்டுள்ளன. கோட்டூர் காவல் நிலையம் விரைவில் சொந்தக் கட்டடத்தில் இயங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்..*

**திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சொன்னதுபோல, காவலர் குடியிருப்பில் ஒரு சமுதாயக் கூடத்தில் இயங்கி வருகிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதுபோல, உடனடியாகத் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என் சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

**திரு. ஏ. லாசர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதியில் இதேபோல் பெரியகுளம் நகரத்தில் தென்கரைப் பகுதியில் வாடகைக் கட்டடத்தில் காவல் நிலையம் செயல்பட்டு வருகிறது. பெரியகுளம் நகரத்தில் இருக்கக்கூடிய மாவட்டக் கண்காணிப்பாளர் அலுவலகமும் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அரசு, இந்த இரண்டுக்கும் சொந்தக் கட்டடத்தை உருவாக்கித் தருமா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்புதான், இதே பேரவையில், "அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும்" என்று குறிப்பிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2011 ஆகஸ்ட் 11

“மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது; அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படுமா?” என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். தற்போது திருத்துறைப்பூண்டி தொகுதி பற்றிய குறிப்புகள்தான் என்னிடத்தில் உள்ளன. தனி வினா எழுப்பினால், பின்னர் பதில் சொல்ல ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், “வாடகைக் கட்டடங்களிலே இயங்கும் காவல் நிலையங்களுக்கெல்லாம் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும்” என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவித்திருக்கின்றார்கள். அதேபோல், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடம் கேட்டு அறிய விரும்புவது, ஆங்கிலேயர் காலத்திலிருந்து ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற சில காவல் நிலையங்களுக்கும், அம்மா அவர்களுடைய ஆட்சியில் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. லாசர் அவர்களுக்கு மேலும் ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். உங்கள் மாவட்டத்தில், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் ஏற்கெனவே சொந்தக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் D.S.P. அலுவலகம்தான் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது கேட்ட கேள்விக்குத் தனி வினா எழுப்பினால் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் சொந்த இடத்தில் செயல்பட்டு வரும் தெற்கு வாசல் காவல் நிலையக் கட்டடம் பழுதடைந்துள்ளது.



2011 ஆகஸ்ட் 11]

அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களின்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை சம்பந்தப்பட்ட கட்டடங்கள் மட்டுமல்ல; தமிழ்நாடு முழுவதும் அரசு சம்பந்தப்பட்ட கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் இருந்தால், அவற்றைப் புனரமைத்துக் கட்டித் தர வேண்டுமென்பதுதான் இந்த அரசின் நோக்கமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அது படிப்படியாகச் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**25—**

## சொட்டுநீர்ப் பாசனம்

***1155—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, புதுவயல் பேரூராட்சியில் மானிய விலையில் சொட்டுநீர்ப் பாசனத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சொட்டுநீர்ப் பாசனத் திட்டம், சிவகங்கை மாவட்டத்தில் அனைத்து மாவட்டப் பகுதிகளிலும் 2007–2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதுவயல் பேரூராட்சிப் பகுதியில், தேவைப்படும் விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் தோட்டக் கலைத் துறை அலுவலர்களைத் தொடர்பு கொண்டால், அரசு மானிய விலையில் சொட்டுநீர்ப் பாசனத்தை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்.

[2011 ஆகஸ்ட் *11*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், எங்களையெல்லாம் வாழ வைத்துக் கொண்டிருக்கக்கூடிய எங்கள் இதய தெய்வம், பாரியின் கரங்கள் போல வாரி, வாரி ஏழைகளுக்கு வழங்கும் சிங்க நிகர்த் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். கடைக்கோடி தொண்டனாக இருந்த என்னை, அம்மா அவர்களுடைய ரசிகர் மன்றமாகவே இருந்து வளர்ந்த என்னை, அரசியலிலே கிளைச் செயலாளராக, ஒன்றியப் பேரவைச் செயலாளராக, ஒன்றியத் துணைச் செயலாளராக, ஒன்றியக் கழகச் செயலாளராக, மாவட்டப் பேரவையினுடைய இணைச் செயலாளராக, மாவட்டக் குழு உறுப்பினராக, மாவட்டக் கழகத்தினுடைய செயலாளராக, கழகத்தினுடைய விவசாயப் பிரிவினுடைய செயலாளராக, இன்றைக்குச் சட்டமன்றத்திலே வாய்ப்பைக் கொடுத்து, 50 ஆண்டுக் காலம் ஒரே குடும்பத்தினுடைய கட்டுப்பாட்டில் இருந்த அந்தத் தொகுதியினை, இன்றைக்குப் புரட்சித் தலைவியினுடைய செல்வாக்கால் அதை மீட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குப் புரட்சித் தலைவியின் ஆட்சியில் சட்டமன்றப் பேரவையிலே அங்கம் வகிக்கின்ற ஒரு உறுப்பினராக இருக்க எனக்கு வாய்ப்புத் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*எனது புதுவயல் பேரூராட்சிப் பகுதியில் சொட்டுநீர்ப் பாசனத் திட்டம் அமைப்பது குறித்து இங்கே பதில் சொல்லியிருக்கிறார்கள். புதுவயல் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மல்லிகைப் பூச் செடிகள் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. அங்கு நிலத்தடி நீர் இருந்தாலும், சொட்டுநீர்ப் பாசனமாக இருந்தால், ஏழையெளிய மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே இருக்கும் என்ற காரணத்தினால், அந்த சொட்டுநீர்ப் பாசானத்தை அமைத்துத் தர வேண்டுமென்று இங்கே கோரியிருந்தேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைத்துப் பகுதிகளுக்கும் சொட்டுநீர்ப் பாசானம் அமைப்பதற்கு....*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சொட்டுநீர்ப் "பாசானம்" அல்ல; "பாசனம்".*



2011 ஆகஸ்ட் *11*]

*முற்பகல் 10–10*

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *சொட்டுநீர்ப் பாசனம் நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதை எங்கள் பகுதியிலும் ஏற்பாடு செய்து தருவதாகவும் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் இந்த மைக்கை உயர்த்தி சிரமம் இல்லாமல் பேசுவதற்கு ஏற்பாடு செய்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆலோசனையை வழங்கி, இதற்கு ஏற்பாடு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) முதலில் என்னுடைய நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*கடந்த ஆட்சியில், இந்த சொட்டுநீர் மற்றும் நுண்ணீர்ப் பாசனம் வழங்குவதற்கு வழங்கப்பட்ட மானியத்தில் ஏராளமான முறைகேடுகள் நடந்துள்ளன. அதாவது, உண்மையான பொருளுக்கு, அங்கு வழங்குகிற குழாய்களுக்கு என்ன மதிப்போ அதை இரட்டிப்பாக்கி, இரட்டிப்பிலே ஒரு பகுதியை அவர்கள் கமிஷன் பெற்றுக்கொண்டு, ஒரு பகுதியை மட்டும் அந்தக் கம்பெனிக்கு கொடுத்துவிட்டு, உண்மையிலேயே, அதனால் பயனடைந்தவர்கள் அந்தக் கம்பெனிகளும், அன்றைக்கு ஆட்சியிலே இருந்தவர்களும்தான். இன்னும் சொல்லப்போனால், அந்தக் கம்பெனிகள் அனைத்தும் அன்றைக்கு வேளாண்மைத் துறை அமைச்சருடைய பினாமியாகவே செயல்பட்ட விவரங்களெல்லாம் இருக்கின்றன. இன்றைக்கு இந்த மானியத்தை, இந்த அரசு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமாகவும், மற்றவர்களுக்கு 75 சதவீதமாகவும் உயர்த்தி இருப்பது பாராட்டுக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதேநேரத்தில், அங்கு வழங்கப்படுகின்ற பொருட்கள் தரமான பொருட்களாக வழங்குவதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன்.*

[2011 ஆகஸ்ட் *11*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணைக் கடலாக இருந்து, இந்த வேளாண்மைத் துறையை உயர்த்துவதற்காகத் திட்டங்களை நிறைவேற்றித் தந்திருக்கிற ஆற்றல் மிக்க முதலமைச்சராக இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு ஆலோசனைகளை, அறிவுரைகளை சொட்டுநீர்ப் பாசன விவசாயிகளுக்கு, எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று வழங்கியிருக்கிறார்கள். அதற்கு ஒரு குழுவை அமைத்து முறைப்படுத்தி சிந்தாமல், சிதறாமல் விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

**திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம் ஒரு வறட்சியான மாவட்டம். சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மக்கள் அனைவரும் விவசாயத்தை முதன்மைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்ற நேரத்தில், சிவகங்கை மாவட்டத்தின் இயற்கைச்சூழலின் காரணமாக மழை பெய்யக்கூடிய வாய்ப்புகள் குறைந்து கொண்டிருக்கிற இந்த வேளையில், நிலத்தடி நீரும் குறைந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில், நதிநீர் வருவதும் பற்றாக்குறையாக இருக்கின்ற இந்த நேரத்தில், விவசாயத்தை நம்பி இருக்கின்ற சிவகங்கை மாவட்டத்தினுடைய மக்கள், விவசாயத்தைச் செய்ய முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிற இந்த வேளையில், வரலாற்று முதலமைச்சர், நம்முடைய இதய தெய்வம் அம்மா அவர்கள் இன்றைக்குத் தமிழகத்தில் ஒரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்ற இந்த நேரத்தில், சிவகங்கை மாவட்டத்தை முன்னுரிமை மாவட்டமாக எடுத்து, அங்கே இருக்கின்ற சிறு, குறு விவசாயிகளுக்கு இலவசமாக சொட்டுநீர்ப் பாசன வசதி செய்து கொடுத்திட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்காலத்திலேதான் "மழைநீர் சேகரிப்பு" என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து உலக வரலாற்றில் இருக்கின்ற அத்தனைத் தலைவர்களின் பாராட்டுக்களைப் பெறுகின்ற அளவிற்கு அன்றைக்கு நிறைவேற்றித் தந்தார்கள். நிலத்தடி நீர் குறைந்து கொண்டிருக்கிறது என்ற அடிப்படையிலேதான், அவர்கள் அந்தத் திட்டத்தை 2003 ஆம் ஆண்டு நிறைவேற்றித் தந்தார்கள். அதே அடிப்படையில்தான் இந்த சொட்டுநீர்ப் பாசனம் என்பது விவசாயிகளுக்குப் பயனளிக்க வேண்டும். நிலத்தடி நீர் குறைந்து கொண்டிருக்கிறது என்ற அடிப்படையில், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எந்தெந்தப் பகுதிகள் வறட்சியானப் பகுதிகளாக இருக்கின்றன என்பதைத் தேர்வு செய்து, அந்தப் பகுதிகளுக்கு வழங்குவதற்கு இந்தத் துறை முயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2011 ஆகஸ்ட் *11*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தவரையிலே, மானிய விலையிலே சொட்டுநீர்ப் பாசனத்திற்கான உபகரணங்களைக் கொடுப்பதாகக் கூறியிருப்பது வரவேற்கத்தக்கதாக இருக்கக்கூடிய அதேநேரத்தில், தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக விளையக்கூடிய தென்னைக்கு, அங்கு நாங்கள் எவ்வாறு பாசனம் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், சொட்டுநீர்ப் பாசனத்தைவிட, ஒவ்வொரு இடத்திற்கும் பைப்லைன்கள் அமைத்து 20 மரங்களுக்கு ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்திலே, இந்த பைப்லைனைக் கொண்டு சென்றுவிட்டு அதன்மூலமாக அந்த 20 மரங்கள் தண்ணீர் பெற்றவுடன், உடனடியாக அதைக் கழற்றி, வேறு 20 மரங்களுக்குப் பாத்தி கட்டி அந்த இடத்திலே தண்ணீர் பாய்ச்சுவதை தஞ்சை மாவட்டத்திலே வழக்கமாக செய்துகொண்டிருக்கிறோம். குறிப்பாக, 90 சதவிகித தண்ணீர்ப் பாசனம் இவ்வாறுதான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. எனவே, எவ்வாறு சொட்டு நீர்ப் பாசனத்திற்கு மானியம் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்களோ, அதற்கு ஏதுவாக 2 இஞ்ச் பைப்கள், பிளாஸ்டிக் பைப்புகள்* Finolex *போன்று நன்றாக இருக்கக்கூடிய தரமான பைப்புகள் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2011 ஆகஸ்ட் *11*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குழாயின்மூலமாக தண்ணீரை எடுத்துச் சென்று, 20, 25 தென்னை மரங்களை இணைத்து, பாசனப் பகுதியைச் செலுத்திவிட்டு, பிறகு அதை மற்றொரு இடத்திற்கு மாற்றுவதாக இங்கே குறிப்பிட்டார்கள். தென்னை மரங்களுக்குப் பயிர்ப் பாதுகாப்புச் செய்கின்றபோது சொட்டு நீர்ப் பாசனத்தைப் பொறுத்தவரையிலும் தண்ணீர் குறைவாகத்தான் செலவாகிறது. ஆகவே, இந்தத் துறை இதனை ஆய்வு செய்யும். இந்திய நாட்டின் வரலாற்றில் 100 சதவிகிதம் மானியத்தை வழங்கியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, விவசாயிகள் என்னென்ன கோரிக்கைகளை வைக்கிறார்களோ, அவற்றைக் கவனமாக இந்தக் குழு பரிசீலனை செய்து அதற்கேற்ற நடவடிக்கை துறையின்மூலமாக எடுக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசன முறையில் பல வகைகளில் இன்றைக்குத் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அந்தவகையில் சொட்டுநீர்ப் பாசனம் என்று சொல்கிற நேரத்தில், பூமிக்கு மேலே சொட்டு நீர்ப் பாசனமும், பூமிக்குக் கீழே பைப் பதித்து சொட்டு நீர்ப் பாசனமும் செய்கிறார்கள். கரும்பு விவசாயிகளுக்குப் பெரும்பாலும் பூமிக்குக் கீழே சொட்டு நீர்ப் பாசனத்தைப் பதிக்கிற நேரத்திலேதான் அவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். மரங்களை வைத்திருப்பவர்களுக்கு, மற்ற பயிர்களை விவசாயம் செய்பவர்களுக்குப் பூமிக்கு மேலே சொட்டு நீர்ப் பாசனம் செய்வது வசதியாக இருக்கும். எனவே, அரசு சொட்டு நீர்ப் பாசனம் என்பதை ஏதாவது ஒரு வகையில் மட்டும் தேர்ந்தெடுத்துவிடாமல், அந்தந்தப் பகுதி விவசாயிகள் எந்த வகையில், சொட்டு நீர்ப் பாசனத்தைப் பயன்படுத்த விரும்புகிறார்களோ, அந்த வகையில், அவர்கள் பயனடையத்தக்க வகையில் திட்டத்தை அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான பதிலை உங்கள் மூலமாக நான் மாண்புமிகு அமைச்சரிடம் எதிர்பார்க்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*



2011 ஆகஸ்ட் *11*]

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமாக விவசாயத்தை மேற்கொள்கிறார்கள். கரும்பை ஒரு வகையிலே பயிர் செய்கிறார்கள், தென்னை மரங்களை ஒரு வகையிலே பயிர் செய்கிறார்கள், காய்கறி வகைகளை ஒவ்வொரு வகையாகப் பயிர் செய்துகொண்டிருக்கிறார்கள். எந்தெந்த முறைகளிலே பயிர்களுக்குச் சொட்டு நீர்ப் பாசனங்கள் நடைபெறுகின்றனவோ அதற்கேற்ப எங்களுடைய நிபுணர்களை வைத்துக்கொண்டு சொட்டு நீர்ப் பாசன வசதிகளை விரிவுபடுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. கு.ப. கிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பாரும், மிக்காரும் இல்லாத இந்தியத் துணைக் கண்டத்தினுடைய அரசியல் தலைவராக இருக்கக்கூடிய அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சொட்டு நீர்ப் பாசனம் என்பது நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, நிலத்தடி நீரை மின்சாரத்தின் துணை கொண்டு வெளியே கொண்டுவருகின்றபோது, மின்சாரம் பயன்படுத்துகின்ற அளவையும் குறைப்பதற்காகத் தான் இந்த சொட்டு நீர்ப் பாசனம் அறிமுகம் செய்யப்பட்டது. அதுமட்டுமல்லாமல், உற்பத்தி, உற்பத்தித் திறன் இவற்றை அதிகப்படுத்துவதற்கு இந்த சொட்டு நீர்ப் பாசனம் பயன்படுகிறது. உரச் செலவைக் குறைப்பதற்கும் பயன்படுகிறது. ஆனால், கடந்த கால ஆட்சியிலே இந்த சொட்டு நீர்ப் பாசனத்தைப் பயன்படுத்தக்கூடியவர்கள், சொட்டு நீர்ப் பாசனம் என்ற பெயரில் அவர்கள் அரசினுடைய மானியத்தைப் பெற்று, பைப் லைனை மட்டுமே பயன்படுத்தி, அதிலே இருக்கக்கூடிய* Micro tube*–ஐயோ, அல்லது சொட்டு நீரையோ பயன்படுத்தாமல் முறைகேடாக அந்த மானியத்தைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். அதற்கு அன்றைய அரசும் துணை போய் இருக்கிறது. எனவே, அன்றைக்கு இருந்த கம்பெனிகள், கம்பெனிகளாக இல்லாமல் அந்த ஆட்சியாளர்களுக்குக் கும்பனியாகச் செயல்பட்டார்கள். அப்படிச் செயல்பட்டு, அரசினுடைய பணத்தை வீணடித்த அந்தக் கம்பெனிகள் மீதும், அந்த அரசினுடைய பொறுப்பேற்ற அமைச்சர்மீதும் இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

[2011 ஆகஸ்ட் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கேள்வி நேரம். இருந்தாலும் பதில் சொல்லவேண்டிய கட்டத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னைத் தள்ளி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, போலியான கம்பெனிகளை வைத்துக்கொண்டு, தவறான முறையிலே அந்த அரசு சொட்டு நீர்ப் பாசனத்திற்கான மானியத்தைப் பயன்படுத்தி சொட்டு நீர்ப் பாசனமே செய்யாமல் இருந்தால், எந்தெந்தப் பகுதிகளிலே அதுபோன்ற குற்றச்சாட்டுகள் இருக்கின்றன என்பதை உரியவர்கள் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதற்குரிய நடவடிக்கையை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

அந்தக் குறைபாடுகள் எங்கெங்கு ஏற்பட்டுள்ளன அதற்குரியவர்கள் யார் யார், பாதிக்கப்பட்டவர்கள் யார் யார் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் எங்களுக்குக் கடிதங்கள்மூலமாகத் தர வேண்டும்.

இரண்டாவது, சொட்டு நீர்ப் பாசனத்தைப் பொறுத்தவரையிலும், இந்த அரசு அந்தத் திட்டத்தைக் கவனமாக அமல்படுத்த இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையிலும், கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கின்ற ஏழை எளிய விவசாயிகளைக் கரை சேர்ப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களால் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆகவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. அரசின் உதவிகள் சிந்தாமல் சிதறாமல் விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொட்டு நீர்ப் பாசனம் நதி நீர் போல் நீண்டு கொண்டே போகின்றது.

வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.



2011 ஆகஸ்ட் 11]

**26—**

## துணை மின் நிலையம்

***1778—திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்குத் தொகுதி, யானைமலை ஒத்தக்கடையில் 110/11 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை கிழக்குத் தொகுதி, யானைமலை ஒத்தக்கடையில் ஒரு 110/11 கிலோ வோட் துணை மின் நிலையம் 12-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் அமைக்கத் தேவையான நிலம் கண்டறியப்பட்டு, அந்த நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்.

**திரு. கா. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களின் குல விளக்கு, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழகத்தின் மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர், தங்கத் தாரகை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன் தாயே! மாண்புமிகு அம்மா, பதினெட்டாம்குடி என்னும் குக்கிராமத்தில், ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை கிளைக் கழகப் பிரதிநிதியாகவும், ஒன்றிய கழக இணைச் செயலாளராகவும், ஒன்றிய கழகச் செயலாளராகவும், மதுரை புறநகர் மாவட்டத்தினுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பேரவையின் மாவட்டச் செயலாளராகவும், கிழக்குத் தொகுதியினுடைய வேட்பாளராக நிறுத்தி, மதுரை புறநகர் மாவட்டத்திலுள்ள ஆறு தொகுதிகளில் ஐந்து தொகுதிகளின் சார்பாக, எனது தொகுதி உட்பட

[2011 ஆகஸ்ட் *11*

*தங்களின் பொற்பாதம் பதித்து பிரச்சாரம் செய்து, என்னை வெற்றிப்பெறச் செய்தீர்கள் தாயே! இந்தச் சட்டமன்றத்தில் என்னையும் பேச வைத்து, அழகு பார்த்தீர்கள் தாயே! எனது குடும்பமும், நானும் உயிர் உள்ளவரை உடல் மண்ணுக்கு, உயிர் புரட்சித் தலைவிக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனத் தெரிவித்து, நாங்கள் எப்போதும் உங்கள் நினைவில் வாழ்வோம் தாயே!*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் 110 மெகா வாட் கொண்ட துணை மின் நிலையத்தை யானைமலை ஒத்தக்கடையில் அமைக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதி விவசாயம் நிறைந்த தொகுதி, ஒத்தக்கடை தொகுதியில் சுமார் 350க்கும் மேற்பட்ட சிறு தொழிற்பேட்டைகள் உள்ளன. 1,500 குடும்பங்கள் இதை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஒத்தக்கடை தொகுதியில் துணை மின் நிலையத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கிழக்குத் தொகுதி யானைமலை ஒத்தக்கடையில் மாண்புமிகு உறுப்பினர் கேட்டதுபோல, 110/11 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்றுதான் நான் இங்கே தெரிவித்து இருக்கின்றேன். இதற்கு நிலம் கையகப்படுத்தப்படும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. நிலம் கையகப்படுத்தப்படுகின்ற பணிகள் முடிவடைந்தவுடன், பணிகள் தொடங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். அதோடுமட்டுமல்லாமல், இப்போதைக்கு அந்தப் பணிகள் தொடங்கப்படுவது வரை, ஏற்கெனவே அந்தப் பகுதியில் நிறைந்திருக்கின்ற சிறு தொழில் கூடங்களுக்கு யானைமலையில் உள்ள தொழிற்பேட்டைகள் 110/33 கிலோ வாட் துணைமின் நிலையம், நரசிங்கம்பட்டியில் 110/11 கிலோ வாட் துணை மின் நிலையம் மற்றும் உரங்கான்பட்டி பகுதியில் 110/11 கிலோ வாட் துணை மின் நிலையம், ஆக இந்த மூன்று துணை மின் நிலையங்களிலிருந்து அந்தப் பகுதிக்கு இப்போது மின்சாரம் வழங்கப்படுகிறது. இருந்தாலும் வளர்ந்து வரும் பகுதி*



2011 ஆகஸ்ட் *11*]

*என்பதால், பெருகி வரும் தேவைக்கேற்ப கூடுதல் வசதி செய்ய வேண்டும் என்பதற்காகத்தான், கூடுதலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அவருடைய கோரிக்கையை ஏற்று புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் யானைமலை ஒத்தக்கடையில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். அந்தப் பணிகள் அடுத்த ஆண்டுக்குள் தொடங்கப்படும். குறிப்பாக, 2012 ஆம் ஆண்டு, 12–வது திட்டக்காலம் தொடங்குகிறபோது அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்*

**திரு. கா. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.*

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முகமும், முகவரியும் கொடுத்த எங்களுடைய இதய தெய்வம் புரட்சிக் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, தமிழ்நாடு மின்சார வாரியம் மின் கட்டமைப்பின் உச்சபட்சத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மேட்டூரிலே நீரேற்ற புனல் மின் திட்டம் 4X125 மெகா வாட் என்னும் திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆய்வில் உள்ளதாகத் தெரிய வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் மேட்டூர் ஸ்டான்லி அணையை கீழ் அணையாகக் கொண்டு உபயோகத்திற்குக் கீழே உள்ள தண்ணீரை மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு மேல்புறம் கோவில்பாளையம் என்னும் கிராமத்திற்கு அருகில் ஓடும் ஒரு சிறு கிளை நதியிலே ஒரு சிறிய மேல் அணையைக் கட்டி நீரைத் தேக்கி பூமிக்கு அடியில் தலைக்குழாய் சுரங்கமும் மின் நிலையம் மற்றும் கடைக்குழாய் சுரங்கமும் அமைத்து மின்சாரம் உற்பத்தி*

[2011 ஆகஸ்ட் *11*

*செய்தால் தமிழ்நாடு மின்சார வாரியம் மின் கட்டமைப்பின் உச்சபட்சத் தேவையை* —peak hours demand— *பெரும் அளவில் பூர்த்தி செய்யலாம். சுமார் 500 மெகா வாட் மின்சாரம் தயாரிக்க வாய்ப்பு இருப்பதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது. எனவே, இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, மேட்டூர் அணையிலிருந்து நீர் வெளியேற்றப்பட்டு வருகின்ற வழியில் காவிரி ஆற்றின் குறுக்கே சிறு, சிறு புனல் மின் உற்பத்தித் திட்டங்களை அரசு ஏற்கெனவே அமல்படுத்தியிருக்கிறது. மீண்டும் வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் சிறிய அளவிலான புனல் மின், நீர் மின் உற்பத்தித் திட்டங்களுக்கான வாய்ப்பு உள்ள இடங்களை இப்போது ஆய்வு செய்து வருகிறது. உரிய இடங்கள், தகுதியான இடங்கள் கண்டறியப்பட்டு அந்த இடங்களிலே தமிழ்நாடு மின்சார வாரியத்தின்மூலமாக அங்கு சிறு புனல் மின், நீர் மின் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குரிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, வைகை அணையிலிருந்தும், பெரியாறு அணையிலிருந்தும் வருகின்ற வழியில், வைகை அணையிலும் சிறு, சிறு வாய்ப்புள்ள இடங்களில் சிறு புனல் மின் உற்பத்தித் திட்டங்களுக்கான வாய்ப்புகளைக் கண்டறிந்து அதைச் செயல்படுத்துவதற்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

**திரு. ம. முத்துராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்தக்கடையிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் மொத்தம் எத்தனை துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன? தற்போது எந்தப்*



2011 ஆகஸ்ட் *11*]

*பகுதியிலே வேலைகள் நடைபெற்று வருகின்றன என்பதையும், அதிலே அவனியாபுரம் மற்றும் என்னுடைய தொகுதியான டி. குன்னத்தூரிலும் பணிகள் மிக* slow*–ஆக நடந்து கொண்டு இருக்கின்றன, அவற்றை விரைவுபடுத்தியும், பேரையூர், திருமங்கலம் மேலக்கோட்டையில் ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தரவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல, இப்போது எந்தெந்த இடங்களில் புதிய துணை மின் நிலையங்கள் உருவாக்கப்படும் என்பதைப் பற்றிய விவரங்களைத் தனிக் கேள்வி மூலம் கேட்டால் அதுபற்றிய விவரங்களை இங்கே சொல்வதற்கு ஏதுவாக இருக்கும். ஆனால், அதேசமயத்தில் இப்போது நடந்து வருகிற பணிகளை விரைவுபடுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது நடைபெற்று வருகின்ற புதிய துணை மின் நிலையங்களுக்கானப் பணிகளை மிக விரைவில் விரைவுபடுத்தி, திட்டமிட்ட காலத்தில் அந்தப் பணி முடிவுற்று, துணை மின் நிலையங்களெல்லாம் செயல்படத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.*

**திருமதி ஆர். சாந்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். நாடு நலம் பெற நலிந்தோர் ஏற்றம் காண மக்கள் பிரச்சினைகளைப் பேரவையின் முன் வைக்கும் மாண்புமிகு கேப்டன் அவர்களை வணங்கிக் கொண்டு எனது முதல் வினாவினைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*நான் வசிக்கும் சேந்தமங்கலம் தொகுதியில் கொல்லிமலை கிராமத்தில் மின்சார வசதி இருந்தும் சரியாக மின்சாரம் மக்களுக்குக் கிடைப்பதில்லை. இருட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சப்ளை இரவு 12 மணிக்குத்தான் வருகின்றது. மக்கள் மின் கட்டணம் கட்டுவதற்கும் மிகவும் தூரமாகச் சென்று செம்மேட்டில்*

[2011 ஆகஸ்ட் 11

உள்ள மின் நிலையத்திற்குச் சென்று கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். மலைவாழ் மக்களுடைய சிரமத்தைப் போக்குவதற்காக செங்கரையில் ஒரு துணை மின் நிலையம் அமைத்துக் கொடுத்தால் கரண்ட் சப்ளை சரியாகக் கிடைப்பதற்கும், மக்களுடைய நலனைப் பாதுகாப்பதற்கும் சிறப்பாக இருக்குமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா உங்களை விரும்பி வணங்கி, மிகவும் கனிவாகப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதி என்று இல்லை, ஒட்டுமொத்தமாக தமிழகம் முழுவதுமே இருக்கின்ற மின்சாரப் பிரச்சினை, load shedding போன்ற சிறு, சிறு பிரச்சினைகளையெல்லாம் முழுமையாகப் போக்கிட, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே ஆணையிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையிலே இப்போது இந்தத் துறை துரிதமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆகவே, அம்மா அவர்கள் அறிவித்தபடி நிச்சயமாக தமிழகத்திலே இப்படிப்பட்ட சிறு, சிறு குறைகள் மின் உற்பத்தியில் மட்டுமல்ல, மின் விநியோகத்திலும் இருக்கின்ற குறைபாடுகள் படிப்படியாகச் சீரமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தத் தொகுதியில் இருக்கின்ற குறைபாடுகளைக் களைவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**27—**

## குடிநீர்

***1510—திரு. சு. ரவி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2011 ஆகஸ்ட் 11]

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து கூடுதலாகக் குடிநீர் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டத்திலுள்ள வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944 ஊரகக் குடியிருப்புகளுக்கு மேட்டூர் அணை கீழ்ப்புறம் செக்கானூர் அருகே காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூபாய் 1,295 கோடியில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயன் பெறவுள்ள பயனாளிகளில் அரக்கோணம் நகராட்சியும் ஒன்றாகும். இந்நகராட்சிக்கு இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இருந்து நாளொன்றுக்கு 7.65 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் வாரிய பரிசீலனையில் உள்ளன. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டவுடன் திட்டப் பணிகள் துவங்கப்படும். இந்தப் பணிகள் துவங்கியதிலிருந்து 30 மாத காலத்திற்குள் முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

**திரு. சு. ரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகமே வியந்து நோக்கும் வகையிலே மகத்தான வெற்றி பெற்று இந்த அவையிலே மூன்றாவது முறையாக முதலமைச்சராக வீற்றிருக்கும் எங்கள் அன்னையே! மற்றவர்களின் வெளிச்சத்திற்காக தன்னையே உருக்கிக்கொள்ளும் மெழுகுவர்த்திபோல் நாளொன்றுக்கு 24 மணி நேரத்தில் 22 மணி நேரம் உண்ணாமல், உறங்காமல் (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்த தமிழக மக்களுக்காகவும், ஒன்றரை கோடி கழகத் தொண்டர்களுடைய வாழ்வுக்காகவும் அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் எங்கள் அன்னையே! சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்திலே பிறந்து, சாதாரண வழக்கறிஞராகவும், கடைக் கோடி தொண்டனாகவும்

பணியாற்றிக் கொண்டிருந்த என்னை கிளைக் கழகச் செயலாளராகவும், ஒன்றிய அம்மா பேரவைச் செயலாளராகவும், ஒன்றியக் கழகச் செயலாளராகவும், ஒன்றியக் குழு உறுப்பினராகவும், தொகுதி கழக இணைச் செயலாளராகவும், மாவட்டக் கழக வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளராகவும், மாவட்டக் கழகப் பொருளாளராகவும் ஆக்கி, இரண்டாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட வாய்ப்பு வழங்கி என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அவையிலே முதன் முதலாக வினா எழுப்புகிற ஒரு வாய்ப்பினை வழங்கிய இதய தெய்வமே!

முற்பகல் 10–35

வாழுகின்றபோது வரலாறு படைத்துவரும் எங்கள் குல தெய்வமே, தங்கள் பொற்பாதங்களுக்கு என் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் ஆசியோடு வாக்களித்து என்னை வெற்றிப் பெறச் செய்த எனது தொகுதி மக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி கருணாநிதியினுடைய ஆட்சியின்போது, நிருவாகச் சீர்கேடுகளால் அரக்கோணம் நகர மக்களுக்கு 8 நாட்களுக்கு ஒருமுறைதான் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. குடிநீர் கிடைக்காமல் மக்கள் எல்லாம் பெரும் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாக்கப்பட்டார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய துரித நடவடிக்கையால், இப்போது 3 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அரக்கோணம் நகர மக்களுக்குத் தினமும் 4 m.l.d. குடிநீர் தேவைப்படுகிறது. கேட்காமலே கொடுக்கும் அட்சயப் பாத்திரம் அம்மா அவர்களே, அரக்கோணம் நகரிலே நீண்டகாலமாக இருக்கும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து, அரக்கோணம் நகர மக்களுக்குக் குடிநீர் வழங்க நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் நகராட்சி மக்கட்தொகை 79,000. இப்பொழுது கல்லார் மற்றும் தக்கோலம் குடிநீர்த் திட்டத்திலிருந்து ஒரு நாளைக்கு 35 இலட்சம் லிட்டர் தண்ணீர், திருத்தணி—அரக்கோணம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து 25 இலட்சம் லிட்டர் தண்ணீரும், மொத்தம் 60 இலட்சம் லிட்டர் தண்ணீர் இப்போது அரக்கோணம் நகருக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு, நபர் ஒன்றுக்கு 75.92 லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நகராட்சியில் வசிக்கின்ற மக்களுக்குக் குறைந்தபட்சம் 90 லிட்டர் தண்ணீர் வழங்கப்பட வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். அதனடிப்படையில், புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில், வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வருகின்றபொழுது இந்த அரக்கோணம் நகராட்சிக்கு மட்டும் 7.65 மில்லியன் லிட்டர், அதாவது 76 இலட்சத்து 50 ஆயிரம் லிட்டர் தண்ணீர் கிடைக்கும். இதில் மட்டும், நாளொன்றுக்கு மக்கள் பயன்பாட்டிற்கு 46 இலட்சம் லிட்டரும், அங்கு தொழிற்சாலைகளுக்கு வேண்டியிருந்தால் 30 இலட்சம் லிட்டரும் வழங்கப்படும்.

அதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு திட்டங்களை வகுத்துக் கூறியிருக்கிறார்கள். அதனடிப்படையிலே, வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம். நிறைவு பெறுகின்றபொழுது, இந்த மாவட்டத்திற்கு 148 மில்லியன் லிட்டர் தண்ணீரும், அதேபோல 15 ஆண்டுகள் கழித்து 2027-இல் 181 மில்லியன் லிட்டர் தண்ணீரும், அதேபோல 2042-இல் 215 மில்லியன் லிட்டர் தண்ணீரும் வழங்குவதற்குரிய திட்டத்தைச் செயல்படுத்தி நிறைவேற்றுவதற்காகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை உடனடியாக நிறைவேற்றி—அரக்கோணம் நகராட்சிக்கு மட்டுமல்ல, வேலூர் மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளுக்கு இந்தத் தண்ணீர், குறிப்பாக, வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், கிட்டத்தட்ட 5 பேரூராட்சிகள், 944 ஊரகக் குடியிருப்புகளுக்கு மொத்தமாக இந்தக் குடிதண்ணீர் வழங்கப்படுகின்ற திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தி இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2011 ஆகஸ்ட் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

**திரு. சு. ரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இதுபோன்று கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும்பொழுது, நகராட்சி, பேரூராட்சிகளில் பைப் லைன் அமைப்பதற்காகச் சேதப்படுத்தப்படும் சாலைகளைச் சீரமைப்பதற்கு திட்டத்தின்கீழே நிதி சேர்க்கப்படுமா அல்லது நகராட்சி நிருவாகம் அதற்காக தனி நிதியை ஒதுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். திட்டத்தின் மூலமாக சாலைகளைச் சீரமைப்பதற்கு அந்த நிதி சேர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். கடந்தகால ஆட்சியில் இதுபோன்ற திட்டங்கள் அலங்கோலமாக உருவாக்கப்பட்டு, ஆங்காங்கே உள்ள நகராட்சிகள் குழிதோண்டி, அப்படியே, இப்படியே கிடப்பில் இருக்கின்றன. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதையுமே சீராக, ஒழுங்காக, செம்மையாகச் செயல்படுத்த வேண்டுமென்ற சிந்தனையுடையவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–40*

ஆதலால், இனி வருகின்ற எந்தத் திட்டங்களானாலும் சரி, அந்தத் திட்டங்கள் எந்தச் சூழ்நிலையிலும் பொதுமக்களுக்குத் தொல்லை தராமல் இருக்கக்கூடிய திட்டங்களாக உருவாக்கப்பட வேண்டுமென்று அறிவுரை கூறியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், இனி எதிர்காலத்தில் இதுபோன்ற திட்டங்கள்



2011 ஆகஸ்ட் 11]

வருகின்றபோது, அதாவது drainage வருகின்றபோது, உடன் அந்தச் சாலையையும் பழுதுபார்ப்பதற்குரிய நிதியையும் சேர்த்து டெண்டர் வைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகத்தில் குடிநீர் வழங்குவது, கிராமம், நகரம் என்று வித்தியாசம் இல்லாமல் அனைவருக்கும் குடிநீர் வழங்கப்படும் என்பதை இரண்டு தினங்களுக்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தி ஒரு நல்ல மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி நகரங்களில் குடிநீர் வழங்குகின்றபோது வந்திருக்கின்ற ஒரு முக்கியமான பிரச்சினை, பாதாள சாக்கடை பழுதடைந்திருக்கின்ற காரணத்தால், பல நகராட்சிகளில் குடிநீரில் சாக்கடை நீர் கலந்து, அங்கு வழங்கப்படுகின்ற குடிநீர், குடிப்பதற்கே லாயக்கற்றதாக மாறியிருக்கிறது. குறிப்பாக, சிதம்பரம் நகராட்சியில் இப்படி பாதாள சாக்கடை பழுதடைந்து, அந்த நகர் முழுவதும் சாக்கடை நீர் வருகின்ற காரணத்தினால் அந்தக் குடிநீர் குடிப்பதற்குப் பயனற்ற நிலைக்குப் போய் மக்கள் பெரிதும் அவதிப்படுகிறார்கள். எனவே, அந்தச் சாக்கடை நீர் குடிநீரிலே கலந்து வருகின்ற இந்த மோசமான நிலையைப் போக்குவதற்கு, ஒரு போர்க்கால அடிப்படையிலே அரசு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இரண்டு நாட்களுக்கு முன்பாகக்கூட ஓர் அறிக்கையை இந்த மாமன்றத்திலே வைத்தார்கள். சென்னை மாநகரம் முழுவதும் சுத்திகரிக்கப்படவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்து, இன்று சென்னை மாநகரம் மட்டுமல்ல, சுற்றுப்புறங்களிலே இருக்கின்ற நகரங்கள்கூட போர்க்கால அடிப்படையில் சுத்தம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால்,

[2011 ஆகஸ்ட் 11

குடிக்கின்ற நீர் மாசுபடும் நிலையிலே கடந்த ஆட்சியாளர்கள் வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அதையும் நிவர்த்தி செய்கின்ற வகையிலே, தமிழகம் முழுவதும் உள்ள இதுபோன்ற நிலையில் இருக்கின்ற பழுதுபட்ட குழாய்களைச் சீர் செய்வதற்காக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, அதுவும் போர்க்கால அடிப்படையிலே நடைபெற்று வந்துகொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.*

**திரு. துரை. மணிவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரை கோடி தமிழ் மக்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் உயிர் துடிப்பாக, ஏழரை கோடி தமிழ் மக்களின் ஒட்டுமொத்த முதல்வராக, மூன்றாவது முறையாக மாமன்றத்திலே முதல்வராக அமர்ந்திருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன்.*

*என்னுடைய அரியலூர் தொகுதியில், கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற போர்வையில், 2009 ஆம் ஆண்டு, திருமழபாடியிலிருந்து 576 கிராமங்களுக்கு ரூ.42.14 கோடி திட்ட மதிப்பீட்டில் போடப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றியதாகச் சொல்லி, இரண்டேகால் கோடி ரூபாய் போக அனைத்துத் தொகையையும் சென்ற ஆட்சியாளர்கள் சுருட்டிக்கொண்டு சென்றுவிட்டார்கள். இன்றைக்கு 400 கிராமங்களுக்கு மேல், பதிக்கப்பட்ட குழாய்கள் அத்தனையும் தரமற்றவையாக, தரையோடு தரையாக ஒட்டிக் கிடக்கின்றன. அரசு விதியின்படி 3 ஆண்டுகளுக்குள் அந்தக் குழாய்களைச் சரிசெய்ய முடியாத ஒரு சூழ்நிலை உள்ளது. இப்போது, அனைத்துக் கிராம மக்களும் சாலை மறியலில் போக்குவரத்தைப் பாதிக்கின்ற வகையில் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றி, அனைவருக்கும் முழுமையான குடிநீர் கிடைப்பதற்குப் போர்க்கால அடிப்படையில் நிதி ஒதுக்கி, எனது தொகுதியில் உள்ள குழாய்களைத் தரமான குழாய்களாக அரசு மாற்றிக்கொடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.*



2011 ஆகஸ்ட் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினுடைய ஆய்வு எந்த நிலையில் இருக்கிறது என்பது தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அதற்கு முறையான பதில் அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

**திரு. கே. தங்கவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, திருப்பூர் நகரம், வேலம்பாளையம் நகராட்சி, நல்லூர் நகராட்சிக்குத் தண்ணீர் விநியோகம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எல்லோருக்கும் சமமான முறையில் நகராட்சிகளுக்கும், கிராமங்களுக்கும் தண்ணீர் வழங்குகிற ஏற்பாடு இருக்கிறபோது திருப்பூர் பகுதியில் சில பகுதிகளில் ஒரு வாரத்திற்கு ஒரு முறையும், சில பகுதிகளில் கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு ஒரு முறையும் தண்ணீர் சப்ளை ஆகிறது. பவானியிலேயிருந்து வருகிற திருப்பூர் மேம்பாட்டுக் கழக தண்ணீரும் போதிய அளவுக்கு வராத காரணத்தினால் அந்தப் பகுதி மிகப் பெரிய அளவுக்கு பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது. எனவே, குடிநீர் வடிகால் வாரியம்மூலமாக மேட்டுப்பாளையத்திலிருந்து வருகிற தண்ணீரைச் சீரமைத்து அனைத்துப் பகுதிகளுக்கும் சமமான அளவில் வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10—45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லா மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கப்படும் என்று*

[2011 ஆகஸ்ட் 11

உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, ஏற்கெனவே வழங்கியுள்ள, வழங்கிக்கொண்டிருக்கின்ற நீர் ஆதாரங்கள் குறைவாக இருக்கின்ற பட்சத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக வினா எழுப்பினால் அதற்கு முறையாக பதில் கூறப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோல் தொழிற்சாலைக் கழிவுகளால் முழுவதுமாக உப்பு நீராக மாறி உள்ள குடியாத்தம், பேரணாம்பட்டு பகுதிகளுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரிவாக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று முன்புதான் கூறினேன். 11 நகராட்சிகளும் இந்தத் திட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கின்றன. குடியாத்தம் நகராட்சியும் இந்தத் திட்டத்தில் இணைக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் ஒரு நபருக்கு 90 லிட்டர் தண்ணீர் இந்தப் பணி முடிந்தவுடன் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**28—**

## நிதியுதவி

***179—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை பகுதியில் வன விலங்குகளால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?



2011 ஆகஸ்ட் 11]

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தாழக் கிடப்பாரைத் தற்காப்பதே தர்மம்' என்ற ஐயா வைகுண்டரின் அருள்மொழி போல், கடைக்கோடி தொண்டனாக இருந்த என்னை இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக்கி, தமிழக வனத் துறை அமைச்சர் எனும் முகவரி தந்து, குமரி மாவட்ட மக்களுக்குப் பெருமை சேர்த்த தமிழ் இனத்தின் தனிப்பெரும் தலைவியே, தங்கத் தாரகையே, தமிழகத்திலே மின்வெட்டு, இலங்கையிலே தமிழன் தலைவெட்டு என்ற தமிழ் இன விரோத அபாயகரமான குடும்ப ஆட்சியை வேரறுத்து இம்மாமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில்கூட அமரத் தகுதியில்லாத நிலைக்கு ஓட, ஓட விரட்டி அடித்து ஸ்பெக்ட்ரம் ஊழல்வாதிகளை நாட்டிற்கு அடையாளம் காட்டி, சட்டம் தன் கடமையைச் செய்யும் என்பதை நிரூபித்து, வெள்ளை மாளிகையே வியந்து பாராட்டும் தமிழக மக்களின் பாதுகாவலர், மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி, வினாவிற்கு விடை அளிக்கிறேன்.

வால்பாறை பகுதியில் வன உயிரினங்களால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த நபரின் குடும்பத்திற்குத் தலா 1.50 இலட்சம் ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய், ஆக 2.50 இலட்சம் ரூபாய் அளிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிதியுதவியினை உயர்த்துவது சம்பந்தமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய மக்கள் நலன் காக்கும் அரசு பரிசீலனை செய்து வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை பகுதியில் இந்த ஆண்டு மட்டும் சின்கோனா தேயிலைத் தோட்டத்தில், பகல் நேரத்திலே பணியாற்றி வந்த மூன்று பெண் தொழிலாளர்கள் பட்டப் பகலிலேயே யானை மிதித்துக் கொல்லப்பட்டார்கள். காலைக் கடன் முடிப்பதற்காக வெளியே வந்த ஒருவர் காலை 6 மணிக்கு யானை மிதித்துக் கொல்லப்பட்டார். மே மாதம் சிறுத்தைப் புலி அடித்து 3—1/2 வயது குழந்தை கொல்லப்பட்டது. டாப்சிலிப் பகுதியில் யானைப் பாகன் மணி என்பவர் கொல்லப்பட்டார். வால்பாறை பகுதியில் பெரியகல்லார் அன்னப்பன் என்பவர் 9–3–2011—ல்

[2011 ஆகஸ்ட் 11

கொல்லப்பட்டார். கொடிய மிருகங்களிடமிருந்து தொழிலாளர்களையும், மக்களையும் பாதுகாத்திட கூடுதலான பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதோடு, இவர்கள் எல்லாம் தொடர்ச்சியாக வால்பாறை பகுதியில் வன விலங்குகளால் பாதிக்கப்பட்டு, கொல்லப்பட்டு இருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இவர்களுக்கு வழங்கக்கூடிய இந்த நிதியை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்பதோடு...

முற்பகல் 10–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்த அவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2011-2012 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலேயே பத்தி 46-ல் "The payment of compensation to the victims for loss of human life will be enhanced from Rs.1.50 lakhs to Rs.3 lakhs" என்று உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, வன விலங்குகளால் யாராவது உயிரிழந்தால் தற்போது வழங்கப்பட்டு வரும் இழப்பீட்டுத் தொகை ஒன்றரை இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலேயே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரை இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தியிருப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, தொடர்ச்சியாக வால்பாறை பகுதியில் வன விலங்குகளால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இந்த அவையின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்வது, வால்பாறை பகுதி என்பது மலை சார்ந்திருக்கக்கூடிய பகுதியாக இருக்கிற காரணத்தினாலே இரவு நேரங்களில் வெளியே, அவசரமாக மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும், கடைக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், incident–ஐச் சொல்லுங்கள். Compensation அதிகம் கொடுக்க வேண்டுமென்று



2011 ஆகஸ்ட் 11]

சொல்லுங்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள். விரிவாகப் பேசிக் கொண்டிருந்தால் நேரம் எப்படி ஒதுக்க முடியும்? நிகழ்வை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** நீங்கள் சொல்வது மாதிரியே நான் சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடுகிறேன். வனப் பகுதி மக்கள் வெளியே வர வேண்டும் என்று சொன்னால் இரவு நேரங்களில் வரமுடியாது. வால்பாறை பகுதியில் இருக்கக்கூடிய மக்களை வன விலங்குகளிலிருந்து பாதுகாப்பதற்கும், அவர்கள் வன விலங்குகளைத் தெரிந்துகொள்வதற்குமான முறையில் அப்பகுதி மக்கள் தீப்பந்தத்தைக் கொளுத்திக் கொண்டு வெளியே செல்வதற்கான முறையில் மாதத்திற்கு 5 லிட்டர் மண்ணெண்ணெய் அவர்களுக்கு வழங்கப்படுமா, மிருகங்களிடமிருந்து பாதுகாப்பு அளிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் வன விலங்குகளால் உயிரிழந்தவர்களுடைய குடும்பங்களுக்கு 3 இலட்சம் ரூபாய் வழங்குவதாக ஆணையிட்டுள்ளார்கள். மேற்கொண்டு அந்தவிதமான பாதிப்பு இனி ஏற்படாதவண்ணம் வனத்தை ஒட்டியுள்ள பகுதிகளிலே மின் வேலி அமைக்கிற பணியும், அதைப்போல அகழிகள் வெட்டியும், மக்களைப் பாதுகாக்கிற பணியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு நிதிநிலை அறிக்கையில் பத்தி 46-ல் தெளிவான பதில் இருக்கிறது. மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் தொழில்மயமாக்கலாலும் விலங்குகளின் இயற்கை வாழ்விடங்கள் பாதிக்கப்படுகின்றன. இதன் விளைவாக வன விலங்குகள் அடிக்கடி காடுகளை விட்டு வெளியேறி மனிதர்கள் வாழும் பகுதிகளுக்குள் நுழைவதால் மனிதர்கள் வன விலங்குகளை எதிர்கொள்ளும் சூழ்நிலை உருவாகிறது. விலங்குகளின் வாழ்விடங்களை மேம்படுத்துவது, அவை விரும்பி உண்ணும்

[2011 ஆகஸ்ட் 11

பயிர்களைக் காட்டுப் பகுதிகளிலேயே வளர்ப்பது, காடுகளின் எல்லையோரமாகத் தடைகளை அமைப்பது, கிராம மக்களின் திறனை மேம்படுத்துவது, விழிப்புணர்வை ஏற்படுத்துவது, மனித உயிருக்கும், விவசாயப் பயிர்களுக்கும், உடைமைகளுக்கும் வன விலங்குகளால் ஏற்படும் பாதிப்புக்கு உடனடியாக இழப்பீடு வழங்குவது போன்ற பல்முனை அம்சங்களை உள்ளடக்கிய செயல் திட்டங்களின்மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இச்செயல் திட்டத்தைப் படிப்படியாக நடைமுறைக்குக் கொண்டு வரும் முதல் கட்டப் பணிக்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மனித உயிரிழப்புக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை 1.50 இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை ஒழுங்காகப் படித்திருந்தால் இந்த உபக் கேள்வியை எழுப்பி இருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், நிதிநிலை அறிக்கையை நன்றாகப் படியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையைப் படித்துவிட்டேன். இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வாயின்மூலமாக இந்தக் கேள்விக்கான பதிலை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன விலங்குகளால் ஏற்படுகிற உயிரிழப்பு பற்றி பேசினோம். மகிழ்ச்சிக்குரிய தகவல்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நேரத்தைக் கருதி சுருக்கமாகப் பேச வேண்டும் என்று அறிவித்திருக்கிறார்கள். நாய்க் கடியினால் இறப்போரின் எண்ணிக்கைத் தொடருகிறது. 60 ஆயிரத்திற்கும்...



2011 ஆகஸ்ட் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி வன விலங்குகளைப் பற்றியது. நாய் வன விலங்கு அல்ல. எனவே, வேறு department–க்குத் தனிக் கேள்வி எழுப்பவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாய் வன விலங்கு அல்ல, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

முற்பகல் 10–55

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலையினுடைய அடிவாரத்தில் அமைந்திருக்கிற தொகுதி. பெரும்பாலும், வன விலங்குகளால் அன்றாட இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டு அங்கு விளைநிலங்களுக்கும் பொருட்சேதம் ஏற்படுகிற நிகழ்வு நடந்துகொண்டே இருக்கிறது. தாய் உள்ளம் கொண்ட அம்மா அவர்கள் அங்கே ஏற்படுகின்ற உயிர் இழப்புகளுக்கான இழப்பீட்டுத் தொகையை ஒன்றரை இலட்சம் ரூபாயித்திலிருந்து மூன்று இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அங்கு விவசாயிகள் பயனடைகின்ற வகையில் பயிர்களுக்கு அரசாங்கம் 15 ஆயிரம் ரூபாய் நிவாரணமாக வழங்குகிறது. பணப் பயிர்களைப் பயிரிடுகிறபோது, மூலதனச் செலவு 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆகிறது. அந்தப் பயிர்கள் முழுவதுமாக வன விலங்குகளால் பாதிக்கப்படுகிறபோது, அந்த விவசாயிகள் பெரும் அவதிக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அதைக் கருத்திலே கொண்டு மாண்புமிகு தாய் உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த விவசாய விளை பொருள்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கின்ற வகையிலே, அந்தப் பயிர்களுக்கும் உரிய விலை கிடைக்கின்ற வகையிலே, தற்போதைய நிவாரணத் தொகையை உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்வி போடலாம்.

வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**29—**

## மேம்பாலம்

***1666—திருமதி ர. சுபா:**

*மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கெங்கவல்லி தொகுதி, வீரகனூர் பேரூராட்சியில் சுவேதா ஆற்றின் மேல் உயர்மட்ட மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*வீரகனூர் பேரூராட்சியில் சுவேதா ஆற்றின் மேல் உயர்மட்ட மேம்பாலம் கட்ட கோரப்பட்ட சாலை வீரகனூர் பேரூராட்சியைச் சார்ந்த சாலையாகும். இச்சாலை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கப்பட்ட பின்பு அரசின் நிதி நிலைக்கேற்ப பாலம் கட்டுவதற்கு ஆய்வு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

**திருமதி ர. சுபா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வாக்களித்த கெங்கவல்லி தொகுதி பொதுமக்களுக்கும், தே.மு.தி.க. அ.தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சித் தொண்டர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பில் கெங்கவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இந்த அவையின் அரியணையில் அமர வைத்து, அழகு பார்த்த மனிதருள் மாணிக்கம் எங்கள் குலதெய்வம், புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என் வணக்கத்தினையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரகனூர் பேரூராட்சிக்கு உட்பட்டது பூலாம்பட்டி–கள்ளப்பட்டி சாலை. பொதுமக்கள் அனைவரும் இருபுறமும் சென்று வருவதற்கு மிகவும்*





*கஷ்டமாக உள்ளதால் அந்த 3 கிலோ மீட்டர் சாலையை நெடுஞ்சாலையுடன் இணைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நீண்டகாலமாக பொதுமக்களும், பள்ளி மாணவர்களும், வாகன ஓட்டிகளும் இச்சாலையைப் பயன்படுத்தி வருவதால் மிகவும் சிரமப்படுகின்றனர். கடந்த கால ஆட்சியில் செய்ய முடியாத இந்தப் பணியை மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இந்த ஆட்சியில் செய்து கொடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்போடு பொதுமக்கள் உள்ளனர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதாலும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் என்பதாலும் இந்தப் பகுதிப் பிரச்சினையை நன்கு அறிவார்கள். எனவே, வீரகனூர் பேரூராட்சிக்கு உட்பட்ட 3 கிலோ மீட்டர் சாலையை நெடுஞ்சாலைத் துறையுடன் இணைத்து, நன்கு பரிசீலனை செய்து பொதுமக்களின் பயன்பாட்டுக்கு உதவுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்மட்ட பாலம் கட்ட கோரப்பட்ட சாலை வீரகனூர் பேரூராட்சியைச் சார்ந்த வீரகனூர்—அக்கறை—பூலாம்பட்டி சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளம் 3 கிலோ மீட்டர் ஆகும். இச்சாலை, ஆத்தூர்—பெரம்பலூர் சாலையில் கிலோ மீட்டர் 21/6—ல் வலது புறம் திரும்பி சுவேதா ஆற்றின் வழியாகச் செல்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதி மக்களுடைய பிரச்சினையைப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். மழைக் காலங்களிலே, சுவேதா ஆற்றிலே அதிக அளவு தண்ணீர் தரைப் பாலத்தின்மீது வழிந்து செல்வதால் பொதுமக்கள் ஆற்றைக் கடக்க சிரமப்படுவதாக ஏற்கெனவே அரசுக்குக் கோரிக்கை வந்திருக்கின்றது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையை ஏற்று, இந்தச் சாலை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்பட்ட பின்பு, பாலம் கட்டுவதற்கு ஆய்வு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

[2011 ஆகஸ்ட் *11*

**திருமதி ர. சுபா**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.*

**திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதிக்குட்பட்ட ஆவாலூர், சிலம்பையினுடைய காட்டாற்றின் குறுக்கே 2007 ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தின் மூலமாக ரூ.125/— இலட்சத்திற்கு. . . (குறுக்கீடு)*

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

**திரு. ப. டில்லி பாபு:** *பாலங்கள் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நிலையிலே நிறுத்திவிட்டார்கள். பள்ளிக்குச் சென்று திரும்பிய இரண்டு குழந்தைகள் கடந்த 2009 ஆம் ஆண்டு காட்டாற்றிலே அடித்துச் செல்லப்பட்டுவிட்டார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே நான் அன்றைய முதல்வரிடத்திலே இதை முன்வைத்தபோது—ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகள் அந்த ஆற்றிலே அடித்துச் சென்று இறந்து விட்டார்கள்—அந்தக் குழந்தைகளுக்கான நிவாரணத்தை வழங்கினாரே தவிர, இதுநாள் வரை அந்தப் பகுதிக்குப் பாலம் கட்டப்படவில்லை. சீனப் பழமொழி ஒன்று சொல்வார்கள். பசிப்பவனுக்கு மீனைச் சுட்டுக் கொடுப்பதைவிட, மீன் பிடிக்கக் கற்றுக் கொடுப்பதே சிறந்தது என்று. ஆக, அந்தந்த நேரத்திலே ஆற்றில் அடித்துச் செல்லப்படுபவர்களுக்கு நிவாரணம், நிவாரணம் என்று அளிப்பதைவிட, அரசுப் பேருந்து செல்வதற்கு நிரந்தரமாக அங்கு ஒரு பாலத்தைக் கட்டுவதன்மூலமாக உண்மையிலேயே பல உயிர்கள் பாதுகாக்கப்படும் அந்த மலைவாழ் மக்களுக்கு ஒரு பாதை வசதியை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த காலத்திலாவது அந்த நிதித் திட்டத்தின்மூலமாக சிறிய பாலம் ஒன்றை காட்டாற்றின் குறுக்கே கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*



2011 ஆகஸ்ட் *11*]

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் தொகுதி மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கின்ற 234 தொகுதிகளிலுமே ஆங்காங்கே ஓடையின் குறுக்கே, ஆற்றின் குறுக்கே பாலம் கட்டவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கைகள் வருகின்றன. ஆனால் இதற்கு நிதி தேவை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே இங்கே தெரிவித்தார்கள். வரியும் போடக்கூடாது, பல்வேறு பாலங்களையும், சாலைகளையும் அமைக்க வேண்டுமென்று நீங்கள் கேட்கிறீர்கள். ஆகவே, இந்தத் துறையில் இருக்கின்ற நிதி நிலைமைக்கேற்ப இந்தப் பாலம் கட்டப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.*

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்:** *'என்னிடம் வாருங்கள், நான் இளைப்பாறுதல் தருகிறேன்' என்று ஏசுபிரான் சொன்னார். இந்த அவையில் இருக்கின்றவர்கள் கேளுங்கள், முதலில் இல்லை என்று சொல்வதில்லை என்று என்னை ஆளாக்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும், இங்கு வாழும் மனிதர்களுக்கெல்லாம்,*

*'தனியொருவனுக் குணவிலை யெனில்*
*ஜகத்தினை யழித்திடு வோம்'*

*என்று சொன்ன பாரதியினுடைய வாக்கைபோல, என்னை வாழவைக்கும் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அத்தனை பேருக்கும் 20 கிலோ அரிசி கொடுத்து தமிழக மக்களையெல்லாம் காப்பாற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கெல்லாம் அள்ளிக் கொடுத்த பாரி வள்ளலாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கிறார்கள். கடந்த 10 ஆண்டு காலமாக விளாத்திகுளம் சட்டப் பேரவைத் தொகுதியில் உள்ள கடலையூர், முத்தலாபுரம்,*

[2011 ஆகஸ்ட் 11

*கோட்டூர், பிள்ளையார்நத்தம், குறுக்குச் சாலைகளில் 50 கிலோ மீட்டர் சாலை குவாரி சாலையாகப் புறக்கணிக்கப்பட்டு அந்தச் சாலை இதுவரை போடப்படாமல் இருக்கிறது. அந்தச் சாலையில் 25,000 மக்கள் பயணித்துக்கொண்டிருக்கிறார்கள். தற்போதுகூட அந்தச் சாலைக்கான திட்ட மதிப்பீடு இன்னும் தயாரிக்கப்படாமல் இருக்கிறது. எல்லோரையும் காக்கின்ற எல்லாம் வல்ல, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளாத்திகுளம் தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான 50 கிலோ மீட்டர் சாலையைச் செப்பனிட்டுக் கொடுத்து, விளாத்திகுளம் தொகுதி மக்களுடைய வாழ்வில் பால்வார்க்க வேண்டும் எனக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் தொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கும் தொடர்பு உள்ளதாகத் தெரியவில்லை. தனி வினா எழுப்பினால் அதற்கு விரிவாக பதில் அளிக்கப்படும் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ் அவர்கள்.*

**டாக்டர் ச. சுந்தரராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்மட்டப் பாலங்கள் கட்டுவதற்கு அதிக நிதி தேவைப்படுகின்றது. பல்வேறு இடங்களில் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு ஒன்றியச் சாலைகளில், பஞ்சாயத்து சாலைகளில் நிதி கேட்டால் அதற்கு வாய்ப்பு இல்லை என்று கூறுகிறார்கள். ஆகவே, ஒன்றியச் சாலைகளில், பஞ்சாயத்து சாலைகளில் செல்கின்ற நதிகளின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு நெடுஞ்சாலைத் துறைமூலம் விசேஷ கவனம் எடுக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மற்றும் பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகளிலே பாலம் கட்டுவதற்கு 2008 ஆம் ஆண்டு*



2011 ஆகஸ்ட் 11]

*தடை செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ள காரணத்தினாலே, ஊராட்சிப் பகுதி மற்றும் நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளிலே நெடுஞ்சாலைத் துறைமூலமாக பாலம் கட்ட இயலாத நிலை உள்ளது.*

*பேரூராட்சிப் பகுதிகளிலே நெடுஞ்சாலைத் துறைமூலமாக பாலம் கட்ட இயலாத நிலை உள்ளது. இதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவர்களுடைய ஆணையைப் பெற்று, ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் பாலம் கட்டுவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

**30—**

### கிரிவலப் பாதை

*779—**திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஸ்ரீவில்லிபுத்தூர், திருவண்ணாமலையைச் சுற்றி கிரிவலப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர், திருவண்ணாமலை அருள்மிகு சீனிவாசப் பெருமாள் திருக்கோயில் கிரிவலப் பாதையை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின்பேரில் இந்த அரசு அமைத்துத் தரும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.*

[2011 ஆகஸ்ட் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோதை பிறந்த ஊர், கோபாலன் வாழும் ஊர் என்று ஏழைகளால் அழைக்கப்படும் ஏழைகளின் திருப்பதி என்று போற்றப்படுகின்ற எனது ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள திருவண்ணாமலை பெருமாள் திருக்கோயிலைச் சுற்றி கிரிவலப் பாதை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஆணை பிறப்பித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏனைய இரண்டு வினாக்களும் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### இலங்கைத் தமிழர்களுக்காக நிறைவேற்றப்பெற்ற தீர்மானத்தையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷே விமர்சித்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழக சட்டமன்றப் பேரவையில் இலங்கைத் தமிழர்களுக்காக நிறைவேற்றப்பெற்ற தீர்மானத்தையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷே விமர்சித்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து தே.மு.தி.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா ஆகியோர் சட்டப் பேரவை விதி 55—ன்கீழும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன் ஆகியோர் சட்டப்



2011 ஆகஸ்ட் 11] [பேரவைத் தலைவர்]

பேரவை விதி 55—ன்கீழும், இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. கு. லிங்கமுத்து ஆகியோர் சட்டப் பேரவை விதி 56—ன்கீழும், புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி சட்டப் பேரவை விதி 55—ன்கீழும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் சட்டப் பேரவை விதி 55—ன்கீழும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில், தே.மு.தி.க. கட்சியின் சார்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் ஜூன் மாதம் 8 ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் இலங்கையிலே நடைபெற்ற இனப் படுகொலை குறித்தும், அந்த நாட்டினுடைய ஆட்சியின் அதிபராக இருக்கக்கூடிய மகிந்த ராஜபக்ஷே போர்க் குற்றவாளியாக உலகக் குற்றவியல் நீதிமன்றத்தின்முன் நிறுத்தப்பட்டுள்ளார் என்பதை உணர்ந்தும், பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்று உலகமே ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தீர்மானத்தை முன் மொழிந்து அது ஏகமனதாக இந்தப் பேரவையால் நிறைவேற்றப்பட்டது. ஆகவே, அந்தத் தீர்மானம் இந்தப் பேரவையினுடைய சொத்தாகும். இதுகுறித்து இலங்கை அதிபரினுடைய தம்பி கோத்தபய ராஜபக்ஷே, அவர் வெறும் பயல் அல்ல, கோத்த பயல். கோத்தபய ராஜபக்ஷே கருத்து தெரிவித்திருக்கின்றார். அந்தக் கருத்து, சாதாரண முறையில் பேச்சுரிமை என்ற அடிப்படையில் அமைந்திருக்குமேயானால், அதைப்பற்றி நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. ஆனால், இந்தச் சட்டமன்றத்தைப் பற்றியும், குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றியும், தனிப்பட்ட முறையிலே கண்டனம் தெரிவிக்கின்ற வகையில் அந்தக் கருத்து அமைந்திருப்பது இந்தியாவினுடைய அண்டை நாடான இலங்கையோடு இருக்கக்கூடிய good neighbourliness என்று சொல்வார்கள், அருகில் இருக்கின்ற நாடுகளினுடைய நட்புத் தன்மையைப் பாதிக்கின்ற வகையிலேயும் அமைந்திருக்கிறது.

[திரு. ச. இராமச்சந்திரன்] [2011 ஆகஸ்ட் 11
முற்பகல் 11–10

அதுமட்டுமல்லாமல், இந்தச் சட்டமன்றம் என்றால் இது ஏதோ ஒரு நகராட்சி மன்றம் என்று பொருள் அல்ல. இந்தச் சட்டமன்றத்திற்கு என்று ஒரு இறையாண்மை உண்டு. இன்னுஞ்சொல்லப்போனால் இலங்கையினுடைய இறையாண்மை 1–3/4 கோடி மக்களைக் கொண்டது. ஆனால், தமிழ்நாட்டினுடைய இறையாண்மை அதைப்போல 5 மடங்கு மக்கள் தொகையைக் கொண்ட 7–1/2 கோடி மக்களைக் கொண்டது. (மேசையைத் தட்டும் ஒலி) நாம் இந்திய அரசியல் அமைப்பில் இணைந்திருக்கின்ற காரணத்தினாலேயே நம்முடைய இறையாண்மை பட்டுப்போய் விடவில்லை. Sovereignty rests with the people என்று சொல்லுவார்கள். ஆகையினாலே மக்களைச் சார்ந்ததாகும் இறையாண்மை. ஆகவே, இந்த மன்றத்தாலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறபொழுது, அதற்குரிய பொறுப்புணர்ச்சியோடு குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் இங்கே குறிப்பிடுகிறார், 'இலங்கை அரசுக்கு எதிராக தமிழகச் சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் நிறைவேற்றியுள்ள தீர்மானம் அவரது சொந்த அரசியல் ஆதாயத்திற்குத் தானே தவிர வேறு அல்ல' என்ற வகையிலே கருத்து தெரிவிக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் அரசியல் ஆதாயம் தேட வேண்டிய அவல நிலையில் தமிழ்நாட்டு மக்கள் நம்மை வைக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலே அமைந்த கூட்டணியில் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களும், முற்போக்குக் கட்சிகளும் இணைந்து அமைந்த இந்தக் கூட்டணியில், நாங்களேகூட 200 இடங்கள்தான் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், தமிழ்நாட்டு மக்கள் தாராளமாக 203 இடங்களைத் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மன்றத்தை இங்கே நிறுவியிருக்கின்றார்கள். அரசியல் ஆதாயம் தேட வேண்டிய அவசியம் நிச்சயமாக இந்த அரசுக்கு இல்லை என்பதை வரலாறு உணர்ந்தவர்கள் நன்றாக அறிவார்கள். அப்படியிருந்தும் வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு இந்தச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறபொழுது நாம் அதை வெறுமனே பார்த்துக் கொண்டு இருப்பது எந்த வகையிலும் நியாயம் ஆகாது. அதோடுமட்டுமல்லாமல் அவர் மேலும் குறிப்பிடுகிறார், இந்தச் சட்டமன்றத் தீர்மானத்தை



2011 ஆகஸ்ட் 11] [திரு. ச. இராமச்சந்திரன்]

நிறைவேற்றியவர்களுக்கு இலங்கையிலே என்ன நடக்கிறது என்று தெரியாமல் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று சொல்கிறார் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து இங்கே இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம் என்றால், நம் அறியாமை காரணமாகவா? பக்கத்து வீட்டில் அவர்கள் அடக்கமாகவும், அமைதியாகவும் இருந்தால் யாரும் கவலைப்படப்போவதில்லை. ஆனால், பக்கத்து வீடே தீப்பற்றி எரிகிறது என்கிறபொழுது, பக்கத்து வீட்டுக்காரன் மட்டுமல்ல; ஊர் முழுவதும் அந்தத் தீயைப் பற்றி தெரிந்தபின் அணைக்கத்தான் செய்வார்கள். அதைப்போல, இலங்கை இன்றைக்குப் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது என்பதை உணராதவர்கள் யாரும் இல்லை. ஆகவே, தெரியாமல் நாம் யாரும் இங்கே இந்தத் தீர்மானத்தைப் போடவில்லை என்பதையும் நான் இங்கே தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், சொல்லுகின்றார், உலக சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுப்பது உபயோகம் இல்லாதது என்று. சர்வதேச விசாரணைக்கு நாம் மட்டும் அழைப்பு விடுக்கவில்லை. இலங்கையிலே நடந்த இனப் படுகொலையைப் பற்றி ஐ.நா. மன்றத்தின் சார்பில் அதனுடைய பொதுச் செயலாளர் தனிக் குழுவை அனுப்பி, அவர்கள் ஆய்வு செய்து, அவர்களே இனப் படுகொலை நடந்திருக்கிறது என்ற விவரத்தைத் தந்திருக்கிறார்கள். இன்றைக்கு இலங்கை அரசு உண்மையான விசாரணையைக் கண்டறிய வேண்டுமென்றும் அதேநேரத்தில் மனித உரிமைப் பாதுகாப்புக் குழுவிலேயும் இந்தப் பிரச்சினை மறு ஆய்வுக்கு விடப்பட வேண்டுமென்றும் கூறியிருக்கிறது. ஐரோப்பிய நாடுகள் தடை விதித்தன. அமெரிக்க நாடு ஏற்கெனவே இலங்கைக்குத் தர வேண்டிய உதவியை தரக்கூடாது என்று அமெரிக்காவிலுள்ள காங்கிரஸ், அதாவது நாடாளுமன்றக் குழுவினர் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றார்கள். இங்கிலாந்து கண்டனம் தெரிவிக்கின்றது. ஆகவே, உலக நாடுகள் அனைத்தும் தெரிவித்த கண்டனத்தை ஒட்டித்தான் நாம் இந்தத் தீர்மானத்தை இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றினோமே தவிர, வேறு காரணத்தினாலே அல்ல. அதற்கு அவர்கள் உள் நோக்கத்தை இங்கே கற்பிப்பது தேவையற்றது மட்டுமல்ல, இன்னொன்றும் சொல்கின்றார், அந்த மக்களுக்குத் தேவை என்ன என்பதை அவர் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் குறிப்பிட்டு, அந்த மக்களுக்குத் தேவை என்ன என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும், அங்கே இருக்கின்ற மக்கள் எல்லாம்

*[திரு. ச. இராமச்சந்திரன்]* [2011 ஆகஸ்ட் 11

சமமாக நடத்தப்படுகிறார்கள், அவர்கள் சமமாக இருக்கிறார்கள். அவர்கள் சிங்களவர்களானாலும் சரி, தமிழர்களானாலும் சரி, முஸ்லீம்களானாலும் சரி, எல்லோரும் சமத்துவமும், சம வாய்ப்பும் பெற்றிருக்கிறார்கள் என்கின்ற வகையிலே பேசியிருக்கின்றார்.

ஒன்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். ஒற்றுமை என்பது அனைவரும் சேர்ந்து நல்வாழ்வோடு இருப்பது. ஓநாயின் வயிற்றுக்குள்ளே ஆட்டுக் குட்டி இருப்பது ஒற்றுமையாகாது. அதுகூட ஒன்றாக இருப்பதாகத்தான் பொருள். அதைப்போல், இன்றைக்கு அங்கேயுள்ள தமிழ் மக்களையெல்லாம் கொன்று குவித்துவிட்டு நாங்கள் ஒன்றாக இருக்கின்றோம் என்று சொல்வது உலகை ஏமாற்றுகின்ற ஒரு காரியம் ஆகும்.

முற்பகல் 11–15

அதோடு மட்டுமல்ல, இன்னும் சொல்லப்போனால் இன்றைக்கு அங்கே இருக்கின்ற மக்கள் இன்று நேற்றல்ல, என்றைக்கு இலங்கை சுதந்திரம் பெற்றதோ 1948 ஆம் ஆண்டிலேயிருந்தே அவர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆட்சி மொழி சிங்களம் தான், தமிழ் அல்ல. ஆகவே, நீங்கள் வேறு. அரச மதம், புத்த மதம் தான். மற்ற மதங்களுக்கு இங்கு இடமில்லை, நீங்கள் வேறு. தொழிற்கல்விப் படிப்பா? மருத்துவக் கல்விப் படிப்பா? சிங்களவர்களானால் குறைந்த மார்க்குகள் வாங்கினால் போதும். மற்றவர்கள் என்றால் அதிக மார்க்குகள் வாங்கித்தான் ஆக வேண்டும். இப்படி வேறுபடுத்திப் பார்த்தது யார்? அங்கேயிருக்கின்ற அரசுதான். அங்கே அமைதியான முறையில் அறப்போராட்ட வழியில் தங்களுக்குரிய நியாயங்களைப் பெற வேண்டும் என்பதற்காக தமிழர் தந்தை செல்வா அவர்கள், ஒரு கூட்டாட்சி இருந்தால் போதும், தமிழ் மக்கள் வாழும் பகுதிக்கு ஒரு மாநிலம் இருந்தால் போதும் என்று அறப்போராட்டத்தில் ஈடுபட்டார்கள். ஆனால் நாகரிகமுள்ள வெள்ளைக்காரனை எதிர்த்ததினாலே மகாத்மா காந்தியடிகளுடைய அறப்போராட்டம் வெற்றி பெற்றது. ஆனால், காட்டுமிராண்டிகளினுடைய ஆட்சி நடக்கின்ற சிங்களத்திலே எதிர்த்ததினாலே அவர்கள் வெற்றி பெறவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும்கூட நான் தெளிவாகச் சொல்கிறேன். தனி ஈழக் கோரிக்கை விடுதலைப் புலிகள் இயக்கத்தாலே வந்ததல்ல. 1972 ஆம் ஆண்டு அவர்கள் கேட்டுக் கேட்டுப் பார்த்து, ஒரு



2011 ஆகஸ்ட் 11] *[திரு. ச. இராமச்சந்திரன்]*

மாநிலம் வேண்டுமென்று கேட்டுக் கேட்டுப் பார்த்து கிடைக்காத காரணத்தினாலே அனைத்துத் தமிழ் மக்களின் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து ஓர் அமைப்பை ஏற்படுத்தி, அதற்குப் பிறகுதான் எங்களுக்கு வேறு வழியில்லை, தனி ஈழம் வேண்டும் என்று வட்டுக்கோட்டை தீர்மானம் என்று 1972 ஆம் ஆண்டு கேட்டார்கள். 1983 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் விடுதலைப் புலிகள் இயக்கம் போன்ற இளைஞர்களுடைய தீவிரவாத இயக்கம் வந்தது. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், அங்கே நடக்கிற பிரச்சினைகளைப் பற்றி நமக்குத் தெரியாது. அங்கேயிருக்கின்ற நிலைமைகளைப் பற்றி இங்கு இருக்கின்ற அரசுக்குத் தெரியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாது என்று சொல்கின்ற துணிவு இன்றைக்கு அந்த அரசுக்கு எப்படி ஏற்பட்டிருக்கிறது? கோத்தபய ராஜபக்ஷே என்கின்றவர் சாதாரணமானவர் அல்ல. அவர் ஜனாதிபதியினுடைய தம்பி. அவர்தான் அங்கே பாதுகாப்புத் துறை அமைச்சர். இராணுவத் துறை அமைச்சர். அவர்தான் இந்த இனப் படுகொலைக்கு முக்கியக் காரணம். மகேந்திர ராஜபக்ஷே துரியோதனன் என்றால், இந்த கோத்தபய ராஜபக்ஷே துச்சாதனன். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டுக்கும் ஒன்றும் வேறுபாடு இல்லை. அதனாலே இவர் போர் நெறிமுறைகளையெல்லாம் மீறி அங்கே இனப் படுகொலையை நடத்திய காரணத்தினாலே அங்கே இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா அவர்களே இந்த முறை சரியல்ல என்ற காரணத்தினாலே அவர் அங்கே வெளியேற்றப்பட்டார். அவர் இன்றைக்கு சிறையிலே வாடிக் கொண்டிருக்கிறார். ஏன் இதையெல்லாம் குறிப்பிடுகிறேன் என்றால், இந்த அளவுக்கு இன்றைக்கு இலங்கை அரசுக்குத் தைரியம் வருவதற்கு என்ன காரணம் என்றால், நான் மிக வருத்தத்தோடுத் தெரிவித்துக்கொள்கிறேன், இந்திய அரசு கடந்த காலத்திலே கடைப்பிடித்த போக்குதான் அதற்குக் காரணம்.

இன்றையதினம் Economics Times என்ற ஆங்கில நாளேட்டிலே நம்முடைய நாட்டைச் சேர்ந்த ஜெனரல் அசோக் மேத்தா என்பவர் குறிப்பிடுகிறார். அவர் பொதுவாக இதைப் பற்றியெல்லாம் குறிப்பிடுகிறபோது, என்ன சொல்கிறார் தெரியுமா? What surprise Srilanka was India's strategic co-operation in the destruction there. அதாவது என்ன ஆச்சரியம் என்றால், இந்த இன அழிவு நடந்தபோது இந்தியாவும் அதற்கு ஒத்துழைப்புக் கொடுத்ததுதான். அதோடு மட்டுமல்ல, Recently one Srilankan Minister said that Srilanka did not think India will allow the war to continue after the fall of Kilinochchi.

கிளிநொச்சி வீழ்ந்த பிறகு எப்படியும் போர் நிறுத்தம் ஏற்படும் என்று நாம் மட்டுமல்ல; இந்தியா மட்டுமல்ல; இலங்கையிலுள்ள அமைச்சர் அவையில் உள்ள மந்திரிகளே எதிர்பார்த்தார்கள். ஏனென்றால் எப்படியும் இந்தியா அதைத் தடுத்து நிறுத்திவிடும், மிகப் பெரிய பேரழிவு ஏற்பட அனுமதிக்கமாட்டார்கள் என்று. Recently one Srilankan Minister said that Srilanka did not think India will allow the war to continue after the fall of Kilinochchi. Western pressures were used to end the war.

மேலை நாடுகளெல்லாம் போர் நிறுத்தத்தை வற்புறுத்தின. இருப்பினும் இந்தியாவும் துணை போயிற்று. இந்தியாவுக்கு அன்றையதினம் இங்கே தமிழினத் தலைவராக இருந்து ஆட்சி செய்தாரே, முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவரும் துணை போனார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய விளைவுதான் இன்றைக்கு இவ்வளவு பெரிய இனப் படுகொலை, வரலாற்றிலே இல்லாத மனிதப் படுகொலை ஏற்பட்டிருக்கிறது. இந்தியா தன்னை ஒன்றும் செய்யாது என்கின்ற தைரியத்தினாலேதான், இன்றையதினம் இந்த அளவுக்கு இலங்கையிலே இருக்கின்ற ஒரு சாதாரண அமைச்சர், ஒன்றே முக்கால் கோடி, மக்கள் தொகை கொண்ட ஒரு நாட்டினுடைய அமைச்சர், ஏழரைக் கோடி மக்கள் தொகை கொண்ட தமிழ்நாட்டில், நம்முடைய சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை, ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் குறை சொல்லியிருக்கிறார்.

முற்பகல் 11–20

இன்னும் என்ன வேதனை என்றால், இந்த இலங்கைப் பிரச்சினை பற்றி நாடாளுமன்றத்திலே விவாதம் வேண்டும் என்று கேட்கின்றபொழுது அதற்கான agenda—நிகழ்ச்சி நிரல் தயாரிக்கின்றபொழுது முதலிலே நாடாளுமன்ற agenda—வில் என்ன இருந்தது என்றால் போர்க் குற்றவாளியான மகிந்த ராஜபக்ஷே பற்றி விசாரிக்க வேண்டும் என்கின்ற அந்தத் தீர்மானத்தை அவசர, அவசரமாக இந்திய அரசு திருத்தி, அந்த நிகழ்ச்சி நிரல் அறிக்கையை மாற்றியிருக்கின்றார்கள், இன்றைய செய்தியிலே வந்திருக்கிறது. முதலில் வழங்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் அறிக்கையில் இலங்கைத் தமிழர்களை இராணுவம் கொன்றது குறித்து ஐ.நா. அறிக்கை வெளியிட்டுள்ளது தொடர்பாக விவாதிக்கப்படும் என்பதாக உள்ளது. அதைத் திருத்தி, போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் நிவாரணத்திற்கு இந்திய அரசு வழங்கிய நிவாரணம் குறித்து





விவாதிப்போம். போர்க் குற்றம் என்பது எங்கே, அது மனிதப் படுகொலை. Human Rights Violation—உலகமே இன்றைக்கு ஐ.நா. சபையிலே Right to Protect என்கின்ற விவாதம், ஒரு நாடு இறையாண்மை இருக்கின்றது என்று சொல்லி தன் நாட்டு மக்களைக் கொன்று குவிப்பதற்கு அதிகாரம் கிடையாது. உலக நாடுகள் தலையிட்டு அந்த அரசாங்கத்திடமிருந்து அந்த மக்களைக் காப்பாற்றுகின்ற Right to Protect இன்றைக்கு ஐ.நா. சபையிலே விவாதிக்கப்பட்டு வருகிறது. அப்படி இருக்கிறபொழுது இன்றைக்கு நாடாளுமன்றத்திலே agenda—வைத் திருத்துகின்ற அளவுக்கு இந்திய அரசு இருக்கிறது என்றால், தமிழ்நாடு அரசு குறை கூறுகின்ற தைரியத்திற்கு முழுப் பொறுப்பு இந்திய அரசுதான் என்பதை எடுத்துக்காட்டி (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்கள் அதை இனியும் நம்புவதில் அர்த்தம் இல்லை என்று கூறி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஒரு மனதாக நாம் நிறைவேற்றிய தீர்மானத்தை இழித்தும், பழித்தும் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் Head Lines Today என்கிற Media–வுக்குக் கொடுத்த பேட்டியில் சொல்லியிருப்பதன் விளைவாக கடுமையான ஆத்திரமூட்டும் செயலில் அவர் ஈடுபட்டிருக்கிறார். இலங்கையில் அதிகாரப் பகிர்வு விரைவில் நடைபெறும் என்று அறிவித்தவர் மகிந்த ராஜபக்ஷே. போர் முடிந்து விட்டது, சில மாதங்களுக்குள்ளாக அதிகாரப் பகிர்வு என்கிற அரசியல் தீர்வு தொடங்கும் என்று அறிவித்தவர் அவர்தான். ஆனால், தொடர்ச்சியாக அவர், அவருடைய வாக்குறுதியை மீறி வந்தார் என்பது மட்டுமல்ல, தமிழ் மக்களுக்குக் கொடுமையை அதிகரித்தார்கள்; தீவிரப்படுத்தினார்கள். அங்கு ஏற்பட்டிருக்கிற சொல்லொணாத் துயர் காரணமாக மனித உரிமை மீறலை நாம் சகிக்க முடியாது என்கிற நிலையிலே நாம் ஒரு தீர்மானத்தை இங்கே நிறைவேற்றினோம். இலங்கையில் இருப்பது, நடப்பது என்னவென்று தெரியாது என்று சொல்லுகிற அவர், இலங்கையின் முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்கே இலங்கையில் இவ்வளவு பெரிய கொடுமைகள், இவ்வளவு பெரிய நிகழ்வுகள், இவ்வளவு பெரிய

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 ஆகஸ்ட் 11

அழிவுகள், பொருளாதாரச் சீரழிவுகள், இலங்கையில் எல்லா வகையிலும் இன்றைக்குப் பின்தங்கி இருப்பதற்குக் காரணமான இந்த உள் நாட்டுப் போர் நம்முடைய செயல் காரணமாகத்தான் நடந்தது. என்னுடைய தந்தை தவறிழைத்தார், என்னுடைய தாய் தவறிழைத்தார், நானும் தவறிழைத்தேன். இலங்கைத் தமிழ் மக்களுக்கு அதிக அதிகாரம் வழங்கியிருக்க வேண்டுமென்று அங்கிருக்கிற முன்னாள் அதிபர் பேசிய பேச்சும் இப்போதுதான் வந்தது. ஆகவே, இலங்கையைப் பற்றி நமக்குத் தெரியாமல் இருக்கட்டும். இலங்கையைப் பற்றி தெரிந்த, ஆண்ட, தந்தை ஆண்டு, தாய் ஆண்டு, தானும் ஆண்ட சந்திரிகா குமாரதுங்கே அவர்கள், நாம் தமிழர்கள் விஷயத்தில், தவறிழைத்துவிட்டோம் என்று பேசினார்கள். அப்படி நிலைமைகள் நம் முன்னால் விரிந்து கிடக்க, விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்தவர் இப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் என்பவர் கடந்த வாரம் தமிழகத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி நடத்திய இலங்கைத் தமிழ் மக்களின் சம உரிமை மாநாட்டிற்கு வந்திருந்தார். அவர் பேசுகிறபொழுது கடந்த ஆண்டிலே 10 முறை அரசாங்கத்தோடு எங்களுடைய நாடாளுமன்றக் குழு பேச்சுவார்த்தை நடத்திவிட்டது. பேச்சுவார்த்தையில் நாங்கள் ஒன்றும் தனி நாடு கேட்கவில்லை. பேச்சுவார்த்தையில் சம உரிமை, அதிகாரப் பகிர்வுதான் கேட்கிறோம். இதைக்கூட அவர்கள் பரிசீலிக்க மறுத்தால் என்ன செய்வது என்கிற கேள்வியை அந்த மாநாட்டிலே எழுப்பினார்கள். இவ்வளவு நியாயமாக ஒரு அரசியல் தீர்வு வேண்டும் என்கிற அடிப்படையில் அங்கு இருக்கிற அத்தனை மக்களும், அத்தனை குழுக்களும் ஒன்றாகச் சேர்ந்து பேசுகிறபொழுதுகூட, அதைப் புறக்கணிக்கிற அளவுக்கு தவறிழைத்துக் கொண்டிருக்கிற அந்த ஆட்சி, மேலும், மேலும் கடுமையான ஒரு நிலை அங்கே உருவாவதற்கான சூழ்நிலையை அவர்கள்தான் அங்கே உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, எல்லாவற்றுக்கும் மேலாக அதிகாரப் பகிர்வு வேண்டும் என்பது இப்பொழுது தமிழ் மக்களுக்குத் தேவையில்லை என்கிற கருத்தையும் கோத்தபய ராஜபக்ஷே சொல்லியிருக்கிறார். ஆகவே, இந்தியாவிலேயிருந்து நம்முடைய சிவசங்கர மேனன் போகிறார், நிருபமா ராவ் ஏற்கெனவே போனார்கள், போய் அவரிடம் பேசி வந்துவிட்டுச் சொல்லுவார்கள், அரசியல் தீர்வுக்கும் அதிகாரப் பகிர்வுக்கும் ஏற்பாடு நடக்கும் என்று எத்தனையோ முறை அவர்கள் அறிவித்துவிட்டார்கள்.



2011 ஆகஸ்ட் 11] [திரு. அ. சவுந்தரராசன்]

முற்பகல் 11–25

இந்திய அரசு நம்மையும் ஏமாற்றி, உலகத்தையும் ஏமாற்றி, எல்லோரையும் ஏமாற்றி, தொடர்ந்து ஏமாற்றிக்கொண்டிருக்கிறது. நம்முடைய இந்திய அரசு திரும்பத் திரும்ப வெளியுறவுச் செயலகத்தின் மூலமாக, அந்த அதிகாரிகள் மூலமாக அறிவித்துக்கொண்டிருந்த அந்த வாக்குறுதிகளெல்லாம் என்னவாயின? ஆகவே, இந்தத் தீர்மானத்தில் நாம் மத்திய அரசாங்கத்தைத்தான் வேண்டினோம். இந்தத் தீர்மானத்தில் நாம் நியாயம் வேண்டினோம்; விசாரணை வேண்டினோம்; யுத்தக் குற்றவாளிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டோம். சர்வதேச சமூகத்தினுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு மத்திய அரசாங்கம் உதவ வேண்டுமென்று கேட்டோம். இதிலே என்ன குற்றமிருக்கிறது? இதை இழித்தும், பழித்தும் பேசுகிற அந்த அண்டை நாட்டு அமைச்சர்மீது, அந்த அண்டை நாட்டின்மீது, மத்திய அரசாங்கம் உடனடியாக நம்முடைய வெளியுறவுச் செயலகத்தின் மூலமாக அவர்களைக் கண்டிக்க வேண்டும்; நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லிய எல்லாக் கருத்துகளையும் நான் வழிமொழிந்து, மத்திய அரசாங்கம் இதிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் உங்களுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 9 ஆம் தேதி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானத்தை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதே அவையில் முன்மொழிந்து நாம் அனைவரும் ஒருமனதாக ஏற்று, அதை நிறைவேற்றியிருக்கிறோம். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற உணர்வோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் பாரதப் பிரதமரைச் சந்தித்து, அந்தத் தீர்மானத்தினுடைய அவசியத்தை, கருத்துகளை விளக்கியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் இப்பொழுது எழுந்திருக்கிற பிரச்சினைகளைத்தான் இன்றைக்கு நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். 2 தினங்களுக்கு முன்னால் 'Headlines Today' என்ற தொலைக்காட்சியில், கோத்தபய ராஜபக்ஷே அந்த நாட்டினுடைய பாதுகாப்புச் செயலாளராக இருக்கக்கூடியவர்,

*[திரு. சு. குணசேகரன்]* [2011 ஆகஸ்ட் *11*

*தமிழகத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப்பற்றிப் பேசுகிற நேரத்தில், 3 விதமான கருத்துகளை அதிலே சொல்லியிருக்கிறார். ஒன்று, அரசியல் ஆதாயத்திற்காக, உள்நோக்கத்தோடு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இரண்டு, தமிழக அரசு, இந்திய அரசு தமிழக மீனவர்களை அடக்கி வைத்துக்கொள்ள வேண்டும். இந்த இரண்டு விஷயங்களுக்கும் இணைப்பாக நாங்கள் நடத்திய இராணுவத் தாக்குதல், நடந்த சம்பவங்கள் கடந்தகாலத்தில் இந்திய அரசுக்குத் தெரியும் என்பதையும் அதிலே வெளிப்படுத்தியிருக்கிறார். இப்படிப்பட்ட நிலையில்தான் இன்றைக்கு எனக்கு முன்னால் உரையாற்றிய நமது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன கருத்து ஒரு மிகப் பொருத்தமான கருத்து. காலத்தின் அருமை கருதி அதற்குள் நான் செல்ல விரும்பவில்லை. அந்தக் கருத்தை நான் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் அப்படியே வழிமொழிகிறேன்.*

*அதேநேரத்தில் இன்றைக்குத் தமிழக மீனவர்களை அடக்கி வைத்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தையும் சொன்னதற்குப் பின்னால், இந்தச் சம்பவங்களுக்குப் பின்னால்தான், இலங்கையிலே ஈழ மக்கள் வசிக்கக்கூடிய பகுதிகளிலே உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. அந்த உள்ளாட்சித் தேர்தலில் ராஜபக்ஷேவினுடைய இராணுவ பலம், சூழ்ச்சிகளையெல்லாம் முறியடித்து, தமிழர்கள் ஒன்றுபட்டு, தமிழர் கூட்டமைப்புக்கு ஒரு மிகப் பெரிய வெற்றியைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வெற்றிக்குப் பின்னால்தான் முன்னாள் அதிபராக இருந்த சந்திரிகா குமாரதுங்கே அவர்கள் சிறப்பான கருத்துகளை வெளியிட்டு, கடந்த காலத்திலிருந்து எப்படியெல்லாம் தமிழ் மக்கள் பழிக்கப்பட்டிருக்கிறார்கள், இழிவுபடுத்தப்பட்டிருக்கிறார்கள், அவர்களுடைய உரிமைகள் எப்படி பறிக்கப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் எடுத்துச்சொல்லி, தவறு நம் பக்கம் இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார். அதற்கு அர்த்தம், ஒரு பழமொழி சொல்வதைப்போல, 'நான் எடுக்க வேண்டிய ஆயுதத்தை எதிரி தீர்மானிக்கிறான்', என்பதைப்போல அங்கே இருக்கிற பெரும்பான்மையான மக்களால் ஏற்படுத்தப்பட்ட அந்த சிங்கள அரசு, தொடர்ந்து தமிழர் விரோதக் கொள்கையை எடுத்த காரணத்தால்தான் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவானது. இந்த நிலையில்தான் இன்றைக்கு மீண்டும் இலங்கை அரசு அங்கே யுத்தம் நின்றதற்குப் பின்னால் தமிழர்களுக்கான உரிமைகளை வழங்குவதற்குப் பதிலாக, ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்குப்*



2011 ஆகஸ்ட் *11*] *[திரு. சு. குணசேகரன்]*

*பதிலாக, தமிழர்கள் வாழக்கூடிய பகுதிகளிலே குடியேற்றத்தைச் செய்வதும், இராணுவ முகாம்களை அமைப்பதும், தமிழர்களுக்கான எந்தவிதமான அரசியல் உரிமையை நிலைநாட்டுவதற்கான எந்த முயற்சியும் எடுக்காமல், தன்னிச்சையாக தமிழர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அறிவித்திருக்கிறார்கள். இந்த நிலையில் இப்போது கோத்தபய ராஜபக்ஷேவினுடைய இந்தத் தொலைக்காட்சிப் பேட்டி என்பது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, மேலும் பிரச்சினைகளை மீண்டும், மீண்டும் கிளறுவதாக அமைந்திருக்கிறது. எனவேதான், இந்த நேரத்தில் இந்திய அரசு ஒரு சரியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலில், பக்கத்தில் இருக்கக்கூடிய கோத்தபய ராஜபக்ஷே நமது தீர்மானத்தை விமர்சிக்கிறாரா, இல்லையா என்பது ஒரு பக்கம் இருந்தாலும், 7½ கோடி தமிழ் மக்களுடைய உணர்வுகளோடு இங்கே நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறதா இல்லையா என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.*

*முற்பகல் 11–30*

*இன்றைக்கு, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, ஒரு* agenda–*வையே மாற்றியிருக்கிறார்கள். விமர்சித்துப் பேசக்கூடிய அளவிற்கு, இந்திய அரசினுடைய நடவடிக்கை அமையுமானால், அது எதிர்காலத்தில் தமிழ்நாட்டினுடைய பாதுகாப்புக்கும், தமிழர்களுடைய நலனுக்கும் உகந்ததாக இருக்குமா என்ற சந்தேகம் மேலும், மேலும் எழுந்து கொண்டிருக்கிறது. எனவேதான், இந்திய அரசு நமது தீர்மானத்தை ஏற்று, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நிறைவேற்றிய பொருளாதாரத் தடை உட்பட அத்தனை கோரிக்கைகளையும் ஏற்று நடத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும்.*

*அதோடு, இன்றைக்கு, தமிழக மீனவர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தமிழர்களை நாம் அடக்கி வைத்துக்கொள்வது அல்ல, இன்றைக்கு கச்சத் தீவு ஒப்பந்தத்தை இரத்து செய்கிற ஒரு நடவடிக்கையையும் எடுக்க வேண்டும். நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடர்ந்து அதற்கான வழக்குகளையெல்லாம் போட்டு செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்,*

[திரு. சு. குணசேகரன்] [2011 ஆகஸ்ட் 11

நாம் இன்னும் ஒரு தீர்மானத்தை இங்கே, இந்தச் சபையிலே நிறைவேற்றி, கச்சத் தீவு ஒப்பந்தத்தை இரத்து செய்யவேண்டுமென்ற தீர்மானத்தை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முன்மொழியவேண்டும். அதையும் ஒருமனதாக ஏற்று, மத்திய அரசு அந்த ஒப்பந்தத்தை இரத்து செய்து, தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்பையும் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, தமிழ்நாடு சட்டமன்றத்தில் நாம் நிறைவேற்றிய அந்தத் தீர்மானம், தமிழக மக்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகிற வகையிலும், தமிழக மக்களை ஒன்றுபடுத்துகிற விதத்திலும், அதற்கான ஒரு நடவடிக்கையை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டும். கடந்த காலத்தைப்போல இல்லாமல், பதவிக்காக அல்லது ஆட்சி உரிமைக்காக கொள்கைகளை விட்டுக்கொடுக்காதவராக இன்றைக்கு நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய கடந்தகால அரசியல் என்பது ஒரு அதிரடி அரசியல் என்று பலபேரால் விமர்சிக்கப்பட்டாலும், அந்த அதிரடி அரசியலில் ஒரு கொள்கை நிலை இருந்தது. கொள்கைக்காக, நியாயத்திற்காகப் பல முடிவுகளை, விளைவுகளை எதிர்பார்க்காமல் அவர் எடுத்திருக்கிறார். அந்த அடிப்படையில், இன்றைக்கு ஈழத் தமிழர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்காக, இலங்கையிலே தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, தமிழ்நாடு சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், தமிழக மீனவர்களுடைய நலனை மீண்டும் பாதுகாப்பதற்கும், கச்சத் தீவு ஒப்பந்தத்தை இரத்து செய்வதற்காகவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அவர்களுடைய தலைமையிலே தமிழர்களை ஒன்றுபடுத்தி, தமிழ் அமைப்புக்களை ஒன்றுபடுத்தி, ஒரு வலுவான மக்கள் இயக்கத்தை நடத்திட வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புதிய தமிழகம் கட்சியின் சார்பில், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர். க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வதேச விதிமுறைகளுக்கு மாறாக, அப்பாவி ஈழத் தமிழ் மக்களைக் கொன்று குவித்த இலங்கை அரசுமீது, பொருளாதாரத் தடை விதிக்க வலியுறுத்தி, கடந்த ஜூன் 9 ஆம்



2011 ஆகஸ்ட் 11] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

தேதி அன்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற முன்மொழிந்த 10 கோடி உலகத் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவு பெற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்மீது (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கை அதிபர் ராஜபக்ஷே அவர்களின் சகோதரர் கோத்தபய ராஜபக்ஷே அண்மையில் ஆங்கிலத் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கொடுத்த தரமற்ற விமர்சனம் குறித்து முதற்கண் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக கடும் கண்டனத்தை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஏறக்குறைய 50 ஆண்டு காலத்திற்கு மேலாக, ஈழத் தமிழ் மக்கள் தம்முடைய சுயநிர்ணய உரிமைகளுக்காகவும், பாதுகாப்புக்காகவும் போராடி வந்தார்கள். 1972 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினுடைய அடிப்படையில்தான், தமிழ் ஈழம் கோரி தமிழ் இளைஞர்கள் போராடினார்கள். 50 ஆண்டு காலத்திற்குப் பிறகும் அவர்களுக்குத் தீர்வு வரவில்லை. 2009–2010 ஆம் ஆண்டுகளில் ஈழத் தமிழ் மக்கள்மீது நடத்திய கடைசி நேரத் தாக்குதலில், ஒருசில தினங்களில் மட்டுமே கொத்துக் குண்டுகளால் 40,000-க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலைக்கு ஆளானார்கள். 3 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் முள்வேலி முகாம்களிலே முடக்கப்பட்டார்கள். இத்தனை அவலங்களுக்குப் பிறகும், தமிழ் மக்களுக்கு எந்தவிதமான தீர்வும் வராத நிலையில்தான், எந்தவிதமான அரசியல் இலாப நோக்கமும் இல்லாமல், இன்னும் சொல்லப்போனால், 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலேகூட இதை ஒரு தேர்தல் வாக்குறுதியாக வைக்கவில்லை. இந்த மாமன்றத்திலே யாரும் எதிர்பார்க்காத வேளையில்தான், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தார்கள். தமிழகத்திலே வாழ்கின்ற 7 கோடி தமிழ் மக்கள் மட்டுமல்ல, உலகெங்கும் வாழக்கூடிய 10 கோடி தமிழ் மக்களும் அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு அளித்தார்கள்.

முற்பகல் 11–35

ஆனால், அந்தத் தீர்மானத்தைத் தரமற்ற முறையிலே விமர்சித்தும், தமிழ் மக்களைக் காயப்படுத்தக்கூடிய வகையிலேயும் அவர் கொடுத்திருக்கக்கூடிய விமர்சனம் கண்டனத்துக்குரியது. எனவே, கோத்தபய ராஜபக்ஷேவினுடைய பேட்டியைக் கண்டிக்கக்கூடிய வகையிலே இந்த அவையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2011 ஆகஸ்ட் 11

அதுமட்டுமல்ல, அதற்கு முன்னோடியாக, இந்தளவிற்குக் கடுமையாக நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், தமிழ் மக்களையும் காயப்படுத்தி ஆங்கிலத் தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்திருக்கக்கூடிய இலங்கை அரசினுடைய துணைத் தூதரகம் இனிமேல் சென்னையிலே இயங்கக்கூடாது; அதற்குண்டான நடவடிக்கையும் எடுக்கவேண்டும்.

அதுமட்டுமல்ல, கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் 400—க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் படுகொலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆனால், ஒரு வழக்குகூட பதிவு செய்யப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, 400 மீனவர்களின் படுகொலைக்குக் காரணமான இலங்கை அரசின் மீது கொலை வழக்குகள் பதிவு செய்வதற்குண்டான சட்டப்பூர்மான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அது ஒன்றுதான் இலங்கை அதிபர்கள் எப்பொழுதெல்லாம் பதவிக்கு வந்தாலும் அவர்கள் தமிழ் மக்கள்மீது, தமிழக அரசுமீது, தமிழக அரசியல்வாதிகள்மீது கடுஞ்சொற்களால் விமர்சனம் செய்யக்கூடிய நிலைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வரும். ஒரு பேட்டியிலே அவர் சொல்லியிருக்கிறார், Talking to Headlines Today, exclusively in Columbo Rajapaksha said: “This resolution in the Assembly and statements by the Hon. Madam J Jayalalithaa must be for her to gain political advantage”. எந்தவிதமான அரசியல் உள்நோக்கம் இல்லாத ஒரு தீர்மானத்திற்கு அவர் அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று சொல்கிறார். “It is not reasonable because in Srilanka regardless of being Singala, Tamil or Muslims we are Sri Lankans; We are more worried about our citizens than anyone else என்று சொல்லிவிட்டு, ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்கிறார், “If she is so concerned about the welfare of the Tamil people of Srilanka, the first thing you know, what she must do, they must stop Indian fishermen coming to Srilankan waters and fishing in areas predominantly dominated by the Tamil fishermen of Srilanka”. அதாவது, “ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுதது” என்று சொல்வார்கள். அதுபோல்தான், அவருடைய வாதம் இருக்கிறது. ஏதோ தமிழ்நாட்டிலேயிருந்து செல்லக்கூடிய மீனவர்கள், இலங்கையிலுள்ள தமிழ் மீனவர்களின் வாழ்க்கை பாதிக்கப்படக்கூடிய அளவுக்குச் செயல்படுகிறார்கள், அதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இவர் நமக்கு அறிவுரை சொல்வதைப்போல சொல்கிறார். எனவே, ஒட்டுமொத்தத்தில் அவருடைய கருத்து, Headlines Today-வில் கொடுத்துள்ள கருத்து, மிகவும் கண்டிக்கத்தக்கது. எனவே, இந்த அவையிலே ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன், வணக்கம்.



2011 ஆகஸ்ட் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே இலங்கை அரசின் பேரிலே, பொருளாதாரத் தடையை வலியுறுத்த வேண்டுமென்றும், இலங்கைத் தமிழ் மண்ணில் நம்முடைய தொப்புள்கொடி உறவுகளான, இலட்சோபலட்ச தமிழ் மக்களைக் கொன்று குவித்த அதிபர் ராஜபக்ஷேவை போர்க் குற்றவாளி என்று அறிவிக்க வேண்டுமென்றும், மாண்புமிகு தமிழக முதல்வர், 10 கோடி தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் இயற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தை (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய இறையாண்மையை, இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்தை கொச்சைப்படுத்துகிற வகையிலே, ஏகடியமாய், ஏளனப்படுத்தி, கிண்டல் செய்து, அதிபர் ராஜபக்ஷேவினுடைய இளவல், இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷே Headlines Today என்கிற ஒரு தொலைக்காட்சிக்கு அதுவும் சென்னைவாழ் நிருபருக்கு இத்தகைய பேட்டியளித்திருப்பது என்பது தமிழக மக்களின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்துவதாக அமைந்திருக்கிறது. சர்வதேசப் போர்க் குற்றவாளி என்று ஏன் ராஜபக்ஷேவை அறிவிக்க வேண்டும் என்று நம்முடைய தமிழகச் சட்டமன்றத்திலே ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம் என்றால், சர்வதேசப் போர் இலக்கணங்களுக்கு மாறாகக் கொன்று குவித்தது மட்டுமல்ல, கொலை செய்தது மட்டுமல்ல, கற்பழிப்புச் செய்தது மட்டுமல்ல, அவர்களை மனிதத்தனத்திற்கே அப்பாற்பட்டு மிருகத்தனமாய் நடத்தியது மட்டுமல்ல, ஒரு போர் என்றால் அந்தப் போரிலே சரணடைந்தவர்களை எந்த வகையிலும் கௌரவக்குறைவாக நடத்தக்கூடாது என்பதுதான் சர்வதேசப் போர் இலக்கணம். இதைத்தான் நம்முடைய இதிகாசங்களும் வலியுறுத்துகின்றன. நம்முடைய இதிகாசங்களிலேயே போரிலே ஒருவன் சரணடைந்துவிட்டால், சரணடைந்தவனைப் பாதுகாப்பது என்பதும், கௌரவமாக நடத்துவது என்பதும் ஒரு போர் மரபாக இருந்திருக்கிறது. ஆனால், அந்த மரபை மீறி சரணடைந்தவர்களைக்கூட கொலை செய்த, கொடுமையைச் செய்த போர்க் குற்றவாளி. அதுதான் அவரைப் போர்க் குற்றவாளி என்று நாம் பிரகடனப்படுத்துவதற்கே அடிப்படைக் காரணம். சரணடைந்தவர்களைக்கூட போர் மரபுகளுக்கு மாறாக, சர்வதேச நிபந்தனைகளுக்கு மாறாக, கொலை செய்த கொலைக் குற்றவாளி,

போர்க் குற்றவாளி, பிரகடனப்படுத்தப்பட்ட போர்க் குற்றவாளி இன்றைக்கு ராஜபக்ஷேதான். அப்படிப்பட்ட போர்க் குற்றவாளியை, ஐ.நா. மன்றம் அங்கீகரித்த போர்க் குற்றவாளியை, பிரிட்டிஷ் பாராளுமன்றம் அங்கீகரித்த போர்க் குற்றவாளியை, உலக நாடுகள் பலவும் அங்கீகரித்த போர்க் குற்றவாளியை அன்றைக்கு அமெரிக்காவும், அதன் அடிப்படையிலே நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய கோரிக்கைக்கு இணங்கி, பொருளாதாரத் தடையை விதித்திருக்கிற போர்க் குற்றவாளியை (மேசையைத் தட்டும் ஒலி) நாமும் போர்க் குற்றவாளி என்று இந்த மாமன்றத்தில் ஒருமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம்.

*முற்பகல் 11–40*

அந்தப் போர்க் குற்றவாளியினுடைய இளவல், அவர் அதிபர் அல்ல, ஓர் இளவல். நம்முடைய இந்த மாமன்றத்திலே கொலை செய்யப்பட்ட நம்முடைய தொப்புள் கொடி உறவுகளுக்காக தமிழகத்திலே இன்றைக்கு நாம் கண்ணீர் விட்டால், கண்ணீர் விடுவது அரசியலா? அவர்களுக்காகக் குரல் தருவது அரசியலா? எங்கேயிருந்து இதில் அரசியல் வருகிறது? இன்றைக்குத் தமிழக மக்களின் ஒட்டுமொத்தக் குரலாக ஒரு தீர்மானத்தை ஒருமனதாக இந்த மாமன்றம் நிறைவேற்றியிருக்கிறது. இந்த மாமன்றத்திற்கு என்று இறையாண்மை இருக்கிறது; மத்திய கூட்டாட்சித் தத்துவத்தின்படி நமக்கு எல்லாவிதமான உரிமைகளும் இருக்கின்றன. இந்த உரிமைகளின் அடிப்படையிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால், அதை இலங்கை அதிபருடைய தம்பி, தனி ஒருவனாய், அங்கே அவர் பொறுப்புள்ள ஒரு அதிபர் அல்ல, தனி மனிதனாய், அமைச்சரவையில் ஓர் உறுப்பினர், அவ்வளவுதான். பாதுகாப்புச் செயலாளர். அவர் ஏகடியப்படுத்தி, ஏளனப்படுத்தி, கொச்சைப்படுத்திப் பேசியிருப்பதை நாம் மிக வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

இதிலே மூன்று பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று, இவ்வளவுக்குப் பிறகும், இதுவரையிலே மத்திய அரசு மௌனம் காக்கிறதே, ஏன்? பிரதமரோ, வெளியுறவுத் துறை அமைச்சரோ இதுகுறித்துக் கருத்து சொல்லியிருக்கலாம்; வாய் திறந்து பேசியிருக்கலாம். ஒரு மாநிலத்திலே, மத்திய கூட்டாட்சிக்குட்பட்ட இந்த மாநிலத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு, இறையாண்மைக்குப் பெருமை சேர்ப்பதற்கு, பங்கம் விளைவிக்கிற





அந்தக் கருத்துக்கு, மத்திய அரசு வாய் திறந்து கருத்து சொல்லியிருக்கலாம். ஆனால், மத்திய அரசு இதுவரையிலே மௌனம் காக்கிறது; இதுவரையிலே ஒரு கருத்தும் கூறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குள்ள கவலையெல்லாம் இதுவரையிலே இலங்கைப் பிரச்சினை குறித்து, தமிழகத்திலேயே மிகத் தெளிவான கருத்தை அரசியல் தீர்வு மட்டுமே வழி, நம்முடைய அரசியல் இறையாண்மைக்குட்பட்டு, அரசியல் சட்டத்திற்குட்பட்டு, தெளிவான கருத்துகளைப் பேசி வருகிற ஒரே தலைவர், துணிவான தலைவர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் சார்பில்லாமல், வேறெந்த உணர்வுகளும் இல்லாமல், வேறெந்த சுயநலமும் இல்லாமல், மிகத் தெளிவாக நம்முடைய அரசியல் சட்டத்திற்கேற்ப நம்முடைய இறையாண்மைக்கேற்ப, அரசியல் தீர்வு மட்டுமே வழி என்று பேசி வருகிற ஒரே அரசியல் தலைவர், ஜனநாயகவாதி, Statesman என்று சொல்லக்கூடிய அளவிற்கு இருப்பவர் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள்தான். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை, ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தை, இலங்கையிலே இருந்து கோத்தபய ராஜபக்ஷே இப்படிக் கொச்சைப்படுத்தியிருக்கிறார். என்னுடைய கவலையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருக்கு உரிய பாதுகாப்புத் தருகிற வகையிலே, பாதுகாப்பைப் பலப்படுத்த மத்திய அரசை நாம் வலியுறுத்த வேண்டும்.

இலங்கையிலே இருந்து அப்படிப்பட்ட ஒரு குரல் எழுகிறதென்றால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரின் பாதுகாப்பிற்கு ஒட்டுமொத்தத் தமிழ் மக்களுடைய வாளாய், கேடயமாய், அரணாய், அவர்களுடைய உரிமைக் குரலாய் இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பாதுகாப்பை அதிகரிப்பதற்கான உரிமையை நாம் மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும். தேவைப்பட்டால் இங்கேயிருந்து அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு டெல்லிக்குச் சென்று, பிரதமரையும், அங்கேயிருக்கிற வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் வலியுறுத்தி, இந்தத் தீர்மானத்தை மத்திய அரசும் நிறைவேற்ற வேண்டும் என்கிற கோரிக்கையை, பொருளாதாரத் தடையை இலங்கையின்பேரில் விதிக்க வேண்டுமென்கிற தீர்மானத்தை, பாராளுமன்றத்திலே நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்த வேண்டும். இங்கேயிருந்து டெல்லிக்குச் சென்றாலும்

அது மிகச் சரியாக இருக்கும். இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று வலிறுத்தி, இந்தத் தீர்மானத்தைக் கொச்சைப்படுத்தியிருக்கிற கோத்தபய ராஜபக்ஷேவினுடைய அந்த இழிவுரையை இந்த மாமன்றம் கண்டிக்க வேண்டுமென்று வலியுறுத்தி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை உள்நாட்டுப் போரின்போது, மனிதாபிமானமற்ற முறையில் ஈவு இரக்கமின்றி அங்குள்ள இலங்கைத் தமிழர்கள்மீது ராணுவத் தாக்குதல் நடத்தி, அதன் விளைவாக பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இறந்ததை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.*

*முற்பகல் 11–45*

*எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன், இனப் படுகொலையை நடத்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் என அறிவிக்க இந்திய அரசு ஐக்கிய நாடுகள் சபையை வற்புறுத்த வேண்டுமென்றும், இதுமட்டுமல்லாமல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு மற்றும் முழு சம உரிமை கிடைக்கும் வரை அந்நாட்டின்மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டுமென்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 8–6–2011 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்குக் களங்கம் கற்பிக்கும் வகையில், அதனை விமர்சித்து இலங்கை அரசின் பாதுகாப்புச் செயலாளர் திரு. கோத்தபய ராஜபக்ஷே* ‘Headlines Today’ *தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்திருப்பது, இலங்கை அரசு தான் செய்த தவற்றை நியாயப்படுத்துவதுபோல் அமைந்துள்ளது.*

*இந்தத் தீர்மானத்தை நான் அரசியல் ஆதாயத்திற்காகக் கொண்டுவந்து நிறைவேற்றியதாக திரு. கோத்தபய ராஜபக்ஷே கூறியிருக்கிறார். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.*

*இந்தோனேஷியாவைச் சேர்ந்த* Marzuki Darusman; *அமெரிக்காவைச் சேர்ந்த* Steven Ratner; *தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த* Yasman Sooka *ஆகியோர் அடங்கிய, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்*



*செயலாளரால் அமைக்கப்பட்ட மூன்று நபர் குழு அளித்த அறிக்கையின் அடிப்படையிலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதேயொழிய, அரசியல் ஆதாயத்திற்காக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்பதை முதலில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*சிங்களர், தமிழர் அல்லது இஸ்லாமியர் என்ற எந்தவிதப் பாகுபாடும் இன்றி அனைவரும் இலங்கையர் என்ற முறையில்தான் நடத்தப்படுகின்றனர் என்றும், மற்றவர்களைவிட தங்கள் நாட்டுக் குடிமக்கள்மீது தாங்கள் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாகவும் பேட்டியளித்திருக்கிறார் திரு. கோத்தபய ராஜபக்ஷே. இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இது ‘முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது’ போலாகும்.*

*இலங்கை இராணுவத்திற்கும் எல்.டி.டி.ஈ.-க்கும் இடையேயான போரின் உச்சக்கட்டப் பகுதியான 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2009 ஆண்டு மே மாதம் வரையிலான காலத்தையும் அப்போது பல்வேறு திசைகளிலிருந்து வந்த துப்பாக்கிச் சூட்டில் சிக்கிக் கொண்ட பெரும்பாலான அப்பாவித் தமிழர்களின் நிலைமையையும் ஆழ்ந்த கவனத்தில் எடுத்துக்கொண்டு ஆய்வு செய்த ஐக்கிய நாடுகள் சபைக் குழு, இலங்கை அரசால் அறிவிக்கப்பட்ட குண்டுமழைக்கு விலக்களிக்கப்பட்ட பகுதிகளின்மீது இலங்கை இராணுவம் குண்டுமழை பொழிந்தது; மருத்துவமனைகள்மீது குண்டுமழை பொழிந்தது; மனிதாபிமானமற்ற முறையில் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்ய மறுத்தது; இலங்கை அரசை விமர்சிப்பவர்கள் மற்றும் ஊடகங்கள் உட்பட போர்ப் பகுதி வெளியே இருப்பவர்கள்மீது மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியது; என பல மனிதாபிமானமற்ற, பன்னாட்டுப் போர் நெறிமுறைகளை மீறிய செயல்களை இலங்கை இராணுவம் நிகழ்த்தியுள்ளதாகக் கண்டறிந்துள்ளது.*

*இதுமட்டுமல்லாமல், மிகப் பெரிய ஆயுதங்களைப் பயன்படுத்த மாட்டோம் என்று இலங்கை அரசு அறிவித்த பின்னரும், அப்பாவி இலங்கைத் தமிழர்கள் தங்கியிருந்த பகுதிகளில் குண்டுகளை வீசி, பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இறப்பதற்குக் காரணமாக இலங்கை இராணுவம் இருந்தது என்றும் இந்த வல்லுநர் குழு சுட்டிக்காட்டியுள்ளது.*

*[செல்வி ஜெ ஜெயலலிதா]* [2011 ஆகஸ்ட் *11*

மனிதாபிமான அடிப்படையில் நிவாரணப் பொருட்கள் மக்களைச் சென்றடையாவண்ணம் இலங்கை அரசு தடையை உருவாக்கியதாகவும் ஐ.நா. வல்லுநர் குழு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஊடகங்களால் வெளியிடப்பட்ட கோரமான வீடியோ காட்சிகளிலிருந்து பெரும்பாலானோர் கொடிய முறையில் கொல்லப்பட்டிருப்பதும் தெளிவாகிறது.

அடுத்தபடியாக, இலங்கைக் கடல் பகுதியில் இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பதைத் தடுக்க வேண்டுமென்று தமிழ்நாடு அரசுக்கு அறிவுரை கூறியிருக்கிறார் திரு. கோத்தபய ராஜபக்ஷே. கச்சத் தீவிற்கு இதுவரை வந்து கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மற்றும் புனிதப் பயணிகள் இதே காரணத்திற்காக வந்து செல்லும்போது, பயண ஆவணங்களையோ அல்லது நுழை விசாவையோ பெற வேண்டும் என இலங்கை கோராது என்று இந்திய—இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதை நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்தும் பொருட்டு, இந்திய மீனவர்கள் கச்சத் தீவைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுதந்திரமாக மீன் பிடிக்கலாம் மற்றும் வலைகளை உலர்த்துவதற்கு அந்தத் தீவைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என அப்போதைய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்தார். இந்த ஒப்பந்தத்திற்கு முற்றிலும் முரணான வகையில் நடந்து கொண்டுவிட்டு, தமிழ்நாடு அரசிற்கு அறிவுரை கூறுவது, 'சாத்தான் வேதம் ஓதுவதுபோல்' உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், திரு. கோத்தபய ராஜபக்ஷே, வட இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதுதான் தற்போதைய முக்கியப் பணி என்றும், போர்க் குற்றவாளிகள் என்று தற்போது கூறுவது பயனற்றது என்றும் பேட்டியளித்திருக்கிறார்.

முற்பகல் 11—50

இலங்கையில் நிலவும் உண்மை நிலவரம் என்னவென்றால், போர் முடிந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும், இலங்கைத் தமிழர்கள் பிரச்சனைக்குத் தீர்வு காணவோ, பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது குறித்தோ எந்தவிதமான நடவடிக்கையும் இலங்கை அரசால் எடுக்கப்படவில்லை என்பதுதான். இவருடைய இந்தப் பேட்டியிலிருந்தே, இலங்கை இராணுவம் போர்க் குற்றம் புரிந்திருக்கிறது; இலங்கை அரசு போர்க் குற்றம் புரிந்திருக்கிறது என்று மறைமுகமாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. உண்மையிலேயே



2011 ஆகஸ்ட் *11*] *[செல்வி ஜெ ஜெயலலிதா]*

இலங்கை இராணுவம் போர்க் குற்றம் செய்யவில்லையென்றால், இது தொடர்பான சர்வதேச விசாரணைக்குத் தயார் என இலங்கை அரசு அறிவித்திருக்கவேண்டும். ஆனால், அதைச் செய்யாமல் தேவையற்ற பேட்டிகளை அளித்து வருவது, செய்த தவறை மூடிமறைக்கும் பணியில் இலங்கை அரசு ஈடுபட்டு வருகிறதோ என்ற சந்தேகத்தை சர்வதேச நாடுகள் மத்தியில் தற்போது ஏற்படுத்தியுள்ளது.

அனைத்துக் கட்சிக் கூட்டம், சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம், மனிதச் சங்கிலிப் போராட்டம், பிரதமருக்குத் தந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா என்ற அறிவிப்பு, இராஜினாமா கடிதங்களைத் தானே பெற்றுக் கொண்டது, இறுதி எச்சரிக்கை என்ற அறிவிப்பு, என பல்வேறு வகையான கண்துடைப்பு நாடகங்களை முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி நடத்தியபோது, (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு வகையான கண்துடைப்பு நாடகங்களை முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி நடத்தியபோது (மேசையைத் தட்டும் ஒலி) வாய் திறக்காத திரு. கோத்தபய ராஜபக்ஷே நான் கொண்டு வந்த தீர்மானத்தை விமர்சிக்கிறார் என்றால், அந்த அளவிற்கு இந்தத் தீர்மானத்தின் தாக்கம் இருந்திருக்கிறது என்பதைச் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் புரிந்துகொண்டு இருப்பீர்கள் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இலங்கைத் தமிழ்ச் சகோதர, சகோதரிகளின் நெஞ்சைப் பிளக்கும் துயரங்களை அறிந்த சர்வதேச நாடுகள், போர்க் குற்றத்திற்கு, இனப் படுகொலைக்குக் காரணமானவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கருதுகின்ற சூழ்நிலையில், "போர்க் குற்றங்கள் நிகழ்த்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும், தற்போது இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பி சிங்களர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகைசெய்யும் வரையில், அனைத்து குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில், மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின்மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இந்திய அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம்" அரசியல் ஆதாயத்திற்கு அப்பாற்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஆகஸ்ட் 11

இந்தச் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மீது மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காததுதான், இதுபோன்றதொரு பேட்டியை அளிப்பதற்கான துணிச்சலை திரு. கோத்தபய ராஜபக்ஷேவுக்கு அளித்து இருக்கிறது என்ற ஐயம் நடுநிலையாளர்களுக்கு, தமிழ் உணர்வாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படும் வரை, இலங்கைத் தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்படும் வரை, சிங்களர்களுக்கு இணையான அந்தஸ்து அவர்களுக்குக் கிடைக்கும் வரை, எனது தலைமையிலான அரசு ஓயாது என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் இந்த நியாயமான உரிமைகளை வென்றெடுக்கத் தேவையான ராஜதந்திர நடவடிக்கைகளை எனது அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் பேட்டி அளித்துள்ள இலங்கை அரசின் பாதுகாப்புச் செயலாளர், திரு. கோத்தபய ராஜபக்ஷேவுக்கு இந்தியத் தூதர்மூலம் தனது கண்டனத்தை மத்திய அரசு தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

## 4. விதி 110—ன்கீழ் அறிக்கை

### காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள நீர்வள அமைப்புகளை வலுப்படுத்தி, நீர் வழங்கு கால்வாய்களைப் புனரமைத்து நவீனப்படுத்துதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்கள் வேளாண்மைத் தொழிலையே நம்பியிருப்பதால், வேளாண் பெருமக்கள் வாழ்வில் வளம்பெறவும், அவர்களின் வாழ்வாதாரம் செழிக்கவும், வேளாண் உற்பத்தித் திறனையும், வேளாண் பெருமக்களின் வருமானத்தையும் அதிகப்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.



2011 ஆகஸ்ட் 11] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நீடித்த வேளாண் வளர்ச்சியை அடைவதில் பாசனத்திற்கான நீர் வள அமைப்புகளை வலுப்படுத்துதல் இன்றியமையாததாகிறது.

முற்பகல் 11—55

அந்த வகையில், மாநிலத்தில் பாசன நிலங்களுக்கு ஆதாரமாக உள்ள பாசன உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்தி, பாசனக் கால்வாய் அமைப்புகளைப் புனரமைத்து, அவற்றைப் பழைய நிலைக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன், உலக வங்கி உதவியுடன் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம், என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் தொடர் திட்டமாக, தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டம், உலக வங்கி நிதியுதவியுடன் 2,547 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 15,24,607 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில், நீர்வள ஆதாரத் துறை, வேளாண்மைத் துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை, மீன் வளத் துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தோட்டக் கலைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் வேளாண்மை விற்பனைத் துறை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து, விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமாகும்.

தமிழகத்தில் உப வடிநிலக் கட்டமைப்பு முறையில், ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மையின்மூலம், பாசன நீர் வழங்கும் சேவை மற்றும் பாசன நில வேளாண் உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தெரிவு செய்யப்பட்ட 60 உப வடிநிலங்களின், 15,24,607 ஏக்கர் பாசனப் பரப்பு அடங்கிய பாசன அமைப்புகளை நவீனப்படுத்துவதன்மூலம், பெருமளவு நீர் விநியோகத்தினை மேம்படுத்த இத்திட்டம் முனைகிறது. மேலும், 4,848 ஏரிகள், 668 அணைக்கட்டுகள் மற்றும் 7,893 கிலோ மீட்டர் நீர் வழங்கு கால்வாய்களைப் புனரமைத்துச் சீர்படுத்துவதன்மூலம், ஏரிப்பாசன முறையை நவீனமயமாக்குதல் மற்றும் கால்வாய் பாசன அமைப்பை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தில் நீர் மேலாண்மைமூலம் அதிக மகசூல் பெறத்தக்க வகையில், தேவையான நீரை மட்டுமே பயன்படுத்தி, மீதமாகும் நீரை அதிக பாசனப் பகுதிகளுக்கு அளித்து வேளாண் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுகிறது. மேலும், நீரைப் பயன்படுத்துவோர்மூலமாக நீர்ப்பாசன சங்கங்கள் அமைத்து, அவர்களின் ஈடுபாட்டுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நீர்வள, நிலவள திட்டத்தின் ஓர் அங்கமாக, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள அடையாறு உப வடிநிலத்தின்கீழ் உள்ள முறைசார்ந்த மற்றும் முறைசாரா ஏரிகள், அதாவது, System and Non-system Tanks மற்றும் நீர் வழங்கு கால்வாய்களை 31 கோடியே 19 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து நவீனப்படுத்திட நிர்வாக ஒப்புதல் அளித்து நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடையாறு உப வடிநிலத்தின்கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு நீர் வழங்கும் முறையைச் செம்மையாக்க, அதன் கட்டமைப்பை நவீனப்படுத்த பின்வரும் பணிகள் இத்திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படும்:

ஏரிகளின் கரைகளை இயந்திரங்களைக் கொண்டு பலப்படுத்துதல்; பழுதுபட்ட மதகுகளை மறு கட்டமைப்பு செய்தல்; பழுதுபட்ட சிற்றணைகளை மறு கட்டமைப்பு செய்தல்; நீர்வழங்கு கால்வாய்களை இயந்திரங்கள் கொண்டு தூர்வாருதல்; ஏரிகளின் எல்லைகளில் எல்லைக் கற்களை அமைத்தல்; பாசனக் கால்வாய்களில் நீர் அளவீட்டுக் கட்டமைப்பை ஏற்படுத்துதல்; இரண்டு ஏரிகளின் தெரிவு செய்யப்பட்ட வரத்துக் கால்வாய்களில் 600 மீட்டர் நீளத்திற்கு அக உறை அமைத்தல், அதாவது, லைனிங் அமைத்தல் மற்றும் மற்ற ஏரிகளின் கால்வாய்களில் 30 முதல் 50 மீட்டர் நீளத்திற்கு அக உறை அமைத்தல்.

இதனால் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள செங்கல்பட்டு, தாம்பரம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் வட்டங்கள் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருவள்ளூர் மற்றும் பூந்தமல்லி வட்டங்களிலுள்ள முறைசார்ந்த மற்றும் முறைசாரா ஏரிகளின்கீழ் உள்ள 45,597.10 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களின் பாசன வசதி மேம்பாடு அடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின் மற்றொரு அங்கமாக, காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களிலுள்ள கிளியாறு உப வடிநிலம் மற்றும் செய்யாறு உப வடிநிலத்தின் ஒரு பகுதியின்கீழ் உள்ள ஏரிகள், அணைக்கட்டுகள் மற்றும் நீர்வழங்கு கால்வாய்களை 84 கோடியே 88 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து நவீனப்படுத்திட நிர்வாக ஒப்புதல் அளித்து நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





செய்யாறு—கிளியாறு உப வடிநிலத்தின்கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு நீர் வழங்கும் முறையைச் செம்மையாக்க, அதன் கட்டமைப்பை நவீனப்படுத்த, பின்வரும் பணிகள் இத்திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படும்:

நீர்வழங்கு கால்வாய்களை இயந்திரங்கள் கொண்டு தூர்வாரி மேம்படுத்துதல் மற்றும் 200 மீட்டர் இடைவெளிகளில் மாதிரி கால்வாய் வடிவம், அதாவது, Model Section அமைத்தல்; பழுதுபட்ட சிற்றணைகளைப் புனரமைத்தல்; பழுதுபட்ட மதகுகளை மறு கட்டமைப்பு செய்தல்; பழுதுபட்ட மதகுகளைப் புனரமைத்தல்; பாசன ஏரிகளின் மதகுகளுக்குக் கீழ் உள்ள நீர்வழங்கு கால்வாய்களில் 35 மீட்டர் தூரத்திற்குத் தேவையான அக உறை அமைத்தல்; எல்லா மதகுகளின் வெளிப்புறங்களிலும் நீர் அளவீட்டு அமைப்பு கட்டமைப்பை ஏற்படுத்துதல்; தேவைப்படும் ஏரிகளின் மதகுகளின் இடது, வலது புறங்களில் பாதுகாப்பு அமைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் அதன் கரைகளில் 500 மீட்டர் இடைவெளிகளில் மாதிரி கால்வாய் வடிவம் அமைத்தல்; மதகுகளுக்கு திருகு அமைப்பு கொண்ட கதவுகள் அமைத்தல்; ஏரிகளின் நீர்ப் பரப்புப் பகுதிகளில் எல்லைக் கற்களை நடுதல்.

நண்பகல் 12–00

மேற்கண்ட இந்தப் பணிகளை மேற்கொள்வதன்மூலம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அச்சரப்பாக்கம், மதுராந்தகம், சித்தாமூர், உத்திரமேரூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய ஒன்றியங்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள வெம்பாக்கம், செய்யாறு, அன்னக்காவூர், வந்தவாசி, பெரணமல்லூர், தெள்ளாறு மற்றும் மேற்கு ஆரணி ஆகிய ஒன்றியங்களில் உள்ள 453 ஏரிகள் மற்றும் இரண்டு அணைக்கட்டுகளின் கீழுள்ள 91,08,1.25 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களின் பாசன வசதி மேம்பாடு அடையும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. திருத்திய வரவு—செலவுத் திட்டம், 2011—2012, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2011–2012 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம் தொடர்ச்சி. தற்போது நேரம் 12–00 மணி 1 நிமிடம். பேசுகின்ற உறுப்பினர்கள் சுருக்கமாகக் கருத்துகளை வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

***திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 14–வது சட்டப் பேரவையின் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் எல்லையான கும்மிடிப்பூண்டியில் பிறந்து, இன்ஜினியரிங் படிப்பை முடித்த நான், அரசியலுக்கு வர தூண்டுதலாக இருந்தவர் தமிழர்களின் பாசத் தலைவர், இளைஞர்களின் எழுச்சி நாயகன், ஆண்டாள் அம்மையார் பெற்றெடுத்தாலும், தமிழகத்தில் உள்ள அத்தனை தாய்மார்களுக்கும் தலைமகன், எனது குல தெய்வம் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கு கோடானுகோடி வணக்கங்களை அவரது பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

நாட்டில் மலிந்து கிடக்கும் இலஞ்சம், ஊழல், வறுமையை ஒழிக்கும் நோக்கத்துடன் புரட்சிக் கலைஞர் கேப்டன் உருவாக்கிய தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தில் எனது அரசியல் பயணம் தொடங்கியது.

என்னை திருவள்ளூர் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளராகவும், 2007 ஆம் ஆண்டு முதல் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளராக்கி, இன்று கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினராக்கி அழகு பார்ப்பவர் மாண்புமிகு கேப்டன் அவர்கள்.

எனது வெற்றிக்கு இரவு, பகலாக உழைத்த தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் குடும்ப உறுப்பினர்களுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கும், தோழமைக் கட்சியினருக்கும், எனது தொகுதி மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னை ஈன்றெடுத்த என் தாய், தந்தை மற்றும் எனது அரசியல் ஆசான் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களை வணங்கி எனது கன்னிப் பேச்சை தொடங்குகிறேன்.

மாநிலத்தின் வளர்ச்சி, மக்களின் பொருளாதார மேம்பாடு, மாணவர்களின் முன்னேற்றம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொண்டு, தொலைநோக்குப் பார்வையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த 2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கையை தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து வரவேற்கிறேன்.



தனிநபரைச் சென்றடையும் வகையில், முதியோர் உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை மற்றும் மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை உள்ளிட்ட நலத் திட்டங்களை இந்த அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இலவச லேப்–டாப், ஏழை, எளிய மக்களுக்கு இலவச ஆடு, மாடு வழங்கும் திட்டங்கள், மின்விசிறி, கிரைண்டர், மிக்ஸி உள்ளிட்ட சிறப்புத் திட்டங்களையும் நிறைவேற்ற இந்த அரசு 6,285 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது வரவேற்கத்தக்கது. பெரும்பாலான திட்டங்கள் கிராமப்புற மக்களையும் சென்று சேரும் வகையில் இலக்காக வைக்கப்பட்டுள்ளது. இவை குறிப்பிட்ட நபரைச் சென்று சேர்கின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு உத்தரவாதம் தேவை. எனவே கிராஸ்–செக் என்னும் திட்டத்தை இவ்வரசு செயல்படுத்தினால் சிறப்பாக இருக்கும். இதற்கென மாவட்டந்தோறும் சிறப்புக் கண்காணிப்புப் படைகளை நியமிக்கலாம்.

கடந்த ஆட்சியைப்போல் இல்லாமல் பொதுமக்களுடைய நம்பிக்கையை உருவாக்கும் வகையில், சமூகவிரோதிகள் மீது கடும் நடவடிக்கை எடுத்து அமைதியை நிலைநாட்ட இவ்வரசு எடுத்துள்ள முயற்சி பாராட்டத்தக்கது.

காவல் துறை நடவடிக்கையை மேம்படுத்த, பொதுமக்கள் புகார் தந்த குறிப்பிட்ட நாட்களுக்குள் எப்ஐ.ஆர். பதிவு செய்ய வேண்டும் அல்லது குறிப்பிட்ட நாட்களுக்குள் புகாரை நிராகரிக்க வேண்டும். குற்றப்பத்திரிகை தாக்கல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளுக்குக் காலக்கெடு விதிக்க வேண்டும். காவல் துறையினர் இதைச் செயல்படுத்த முடியாவிட்டால் உரிய காரணத்தைத் தெரிவிக்க வேண்டும். நியாயமான காரணமாக இல்லாவிட்டால் சம்பந்தப்பட்ட காவல் துறையினர்மீது இவ்வரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மொபைல் போன், இணையதளம் ஆகியவை மூலமாக சைபர் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. முந்தைய அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில்தான் சென்னையில் முதன்முறையாக சைபர் குற்றப் பிரிவு தொடங்கப்பட்டது என்பது பாராட்டத்தக்கது. அதைத் தொடர்ந்து, சென்னைப் புறநகர், கோவை, மதுரை, திருச்சி நகரங்களிலும், சைபர் குற்றப் பிரிவுகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. சேலத்திலும், திருநெல்வேலியிலும் சைபர் குற்றப் பிரிவுகள் துவங்கப்படும் என இவ்வரசு அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கது. இதேபோல, சைபர் குற்றப் பிரிவுகளை எல்லா மாவட்டங்களிலும் துவங்க இவ்வரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 12–05

அதற்கு முன்பாக, போலீசாரைத் தேர்வு செய்து அவர்களுக்கு வெளிநாட்டிற்கு இணையாக சைபர் குற்றங்கள் பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். தேவைப்பட்டால் Hardware, Software படித்த தகவல் தொழில்நுட்ப வல்லுனர்களைச் சிறப்பு அதிகாரிகளாக இவ்வரசு நியமிக்கலாம்.

சிறைத் துறைக்காக 147 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறைக் கட்டடங்களில் மாற்றம் கொண்டுவருவதைவிட, சிறைக்கு வரும் கைதிகளிடம் மாற்றம் கொண்டு வருவதே மிக முக்கியமானது. விசாரணை மற்றும் தண்டனைக் கைதிகளுக்கு மனமாற்றம் ஏற்படுத்தும் வகையில், கவுன்சலிங், யோகா, தியானம் போன்றவற்றைக் கற்றுத் தர வேண்டும். கைதிகளை மனிதத் தன்மையோடு நடத்தும் வகையில், சிறை அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு யோகா பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். சிறையில் இருந்து வெளியேறுபவர் மீண்டும் அங்கு வராமல் இருப்பதுதான், சிறைத் துறையின் அடிப்படைக் கடமையாக இருக்க வேண்டும். அனைத்து சிறைகளிலும் நூலக வசதி ஏற்படுத்தினால் சிறப்பாக இருக்கும்.

மக்களின் வீட்டிற்கே சென்று சுகாதார வசதிகள் அளிப்பதற்காக நடமாடும் மருத்துவமனை என்ற புதிய திட்டம் தொடங்கப்படும் என இவ்வரசு அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. தமிழகத்தில் ஒரு குக்கிராமத்தில் இருந்து மற்றொரு குக்கிராமம் செல்ல சில கிலோ மீட்டர் தூரம் இடைவெளி உள்ளது. பஞ்சாயத்து அலுவலகம் அமைந்துள்ள தலைமையிடங்களில்தான் ரேஷன் கடைகள் அமைக்கப்படுகின்றன. இதனால் குக்கிராமங்களில் உள்ள மக்கள் அங்கு வந்து ரேஷன் பொருட்களை வாங்கிச் செல்வதில் சிரமம் ஏற்படுகிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க, ரேஷன் பொருட்கள் கள்ளச் சந்தைக்குப் போவதைத் தடுக்க, வீடு, வீடாக ரேஷன் பொருட்களைக் கொண்டு சேர்க்கும் வகையில் நடமாடும் மருத்துவமனை போன்றே, நடமாடும் ரேஷன் திட்டத்தையும் சோதனை அடிப்படையில் இவ்வரசு பரிசீலிக்கலாம்.

நகரங்கள் பெருகி வருவதால் விவசாய நிலங்கள் குறைந்து வருவது வேதனைக்குரியது. விளைநிலங்கள் குறைந்துள்ளதால், காய்கறிகள் உள்ளிட்ட விவசாய உற்பத்தி குறைந்து வருகிறது. தமிழகத்தில் இருந்து வெளி மாநிலங்களுக்கு காய்கறிகள் ஏற்றுமதி



செய்த காலம் போய் கர்நாடகா, ஆந்திரா போன்ற அண்டை மாநிலங்களிலிருந்து சென்னை உள்ளிட்ட நகரங்களுக்குக் காய்கறிகள் எடுத்து வரப்படுகின்றன. இதற்குத் தீர்வு காண சிறப்புச் சட்டத்தை இந்த அரசு கொண்டுவர வேண்டும். அதன்படி, குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் எந்த விவசாயமும் செய்யாத நிலத்தைத்தான் ரியல் எஸ்டேட்டிற்கு பயன்படுத்த வேண்டும் என்ற கடுமையான சட்டத்தை இவ்வரசு அமல்படுத்த வேண்டும். இதன்மூலம் விவசாய உற்பத்தி மீண்டும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

வறுமையை ஒழிக்கவேண்டும் என்றால், வேலைவாய்ப்புகளை அதிகரிப்பது அவசியம் என்பதை இவ்வரசு கவனத்தில் கொள்ள வேண்டும். அரசியல் கட்சிகளுக்கும், அரசாங்கத்திற்கும் முன்னோடியாக தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் சார்பாக சென்னை உள்ளிட்ட இடங்களில் தனியார் பங்களிப்புடன் வேலைவாய்ப்பு முகாம்கள் சிறப்பாக நடத்தப்பட்டன. இதன்மூலம் பலர் பலன் அடைந்துள்ளனர். இதுபோன்ற மெகா வேலைவாய்ப்பு முகாம்களை மாவட்டந்தோறும் அரசே முன்னின்று நடத்த வேண்டும். இதன்மூலம் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு, ஆண்டுக் கணக்கில் காத்திருப்போர்களின் எண்ணிக்கை குறையும் என்பதை இவ்வரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

கிராமப்புறப் பகுதிகளில் V.A.O.–க்கள் எனும் கிராம நிர்வாக அதிகாரிகளின் பங்களிப்பு அதிகம். சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், அரசின் உதவித் தொகைத் திட்டங்கள், இலவசத் திட்டங்கள் என அனைத்து சலுகைகளும், திட்டங்களும் V.A.O.–க்கள் மூலம்தான் பொது மக்களைச் சென்று சேருகின்றன. ஆனால், பல இடங்களில் V.A.O. பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்தக் காலிப் பணியிடங்களுக்குப் புதிய V.A.O.–க்களைத் தேர்வு செய்து சிறப்புப் பயிற்சி அளித்து, நாள்தோறும் அவர்கள் அலுவலகத்தில் இருக்க வேண்டும் என்று இவ்வரசு உத்தரவிட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், சாதிச் சான்றிதழ் பெற முடியவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள்.

3,484 கிராம நிர்வாக அலுவலர்கள் காலியாக இருந்த பணியிடங்களுக்கு இப்பொழுது T.N.P.S.C.–இன் மூலமாக 2,653 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். 1,077 பேர் backlog என்ற முறையிலே, கோர்ட்டிலே தடையாணை இருக்கின்ற காரணத்தினால், அதுவும் குறுகிய காலத்திலே தடையாணை நீக்கப்பட்டு அதற்குண்டான பணிகள் மேற்கொள்ளப்படும். அது மட்டுமல்லாமல், திங்கட்கிழமை தோறும், செவ்வாய்கிழமை தோறும் கிராம நிர்வாக அலுவலர்களை அங்கேயே இருக்கச் சொல்லி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்ற கருத்தையும் உங்களிடத்திலே தெளிவுபடுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மற்ற மாநிலங்களின் அனுபவங்களை ஆராய்ந்து, தனியார் விவசாய நிலங்களில் நடக்கும் வேலைகளுக்கு, மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்த இவ்வரசு ஆய்வு செய்யும் என அறிவித்துள்ளது. இத்திட்டத்திற்காக 3,472 கோடி ரூபாய் செலவிடப்படும் என இவ்வரசு அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கது. முந்தைய தி.மு.க. அரசால் நியமிக்கப்பட்ட மக்கள் நலப் பணியாளர்களால் இந்த வேலைவாய்ப்புத் திட்டத்தில் பல்வேறு முறைகேடுகள் நடப்பதாகப் புகார்கள் வருகின்றன. எனவே, இதை அரசு ஆராய்ந்து தவறு செய்பவர்களையும், செய்தவர்களையும் கண்டறிந்து, உடனடியாகப் பணி நீக்கம் செய்து, புதியவர்களைப் பணி நியமனம் செய்தால் சிறப்பாக இருக்கும்.

பொதுப் பணித் துறை, வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம்மூலம் கட்டப்படும் கட்டடங்கள், மேம்பாலங்கள் குறிப்பிட்ட சில ஆண்டுகள் வரைதான் தாங்குகின்றன. அதன் பிறகு கூரைகள் பெயர்ந்து விழுவதும், சுவர்கள் இடிந்து விழுவதும் வாடிக்கையாக நடக்கிறது. இதன்மூலம் ஏராளமான விபத்துகள் நடக்கின்றன. காலம் காலமாக நடக்கும் இதுபோன்ற சம்பவங்களைத் தவிர்ப்பதற்காக உயர் ரக கட்டுமான Contractor-களை இவ்வரசு தேர்வு செய்தால் சிறப்பாக இருக்கும்.

பிற்பகல் 12–10

மின் ஆளுகையில் இவ்வரசு அதிக ஆர்வம் காட்டுவதும், ஊழலுக்கு இடமளிக்காத வகையில் இந்தத் திட்டம் உரிய முறையில் செயல்படுத்தப்படும் என அறிவித்திருப்பதும் பாராட்டுக்குரியது.



சோதனை முறையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் மின் ஆளுகைத் திட்டம், விரைவில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு வசதியாக நகரப் பகுதிகளைப் போன்றே கிராமங்களிலும் கம்ப்யூட்டர் பிரவுசிங் மையங்கள், வைபை இணைப்புகள் கிடைக்கும் வகையில் இவ்வரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

நமது தொப்புள் கொடி உறவுகளான இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு மாத உதவித் தொகையை 1,000/– ரூபாயாக இவ்வரசு உயர்த்தி வழங்கியிருப்பது வரவேற்கத்தக்கது. முகாம்களில் உள்ள வீடுகளையும், அடிப்படை வசதிகளையும் மேம்படுத்த இந்த ஆண்டு 25 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதும் பாராட்டத்தக்கது. +2 முடித்த இலங்கைத் தமிழ் அகதி மாணவர்களுக்குக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், இன்ஜினியரிங் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. ஆனால், மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு அளிக்கப்படுவது இல்லை. இலங்கைத் தமிழ் அகதி மாணவர்களின் மருத்துவப் படிப்பு ஆசைக் கனவாகவே இருந்துவிடாமல் இருக்க இவ்வரசு ஆவன செய்ய வேண்டும்.

உள்ளாட்சித் தேர்தல் வரும் அக்டோபர் மாதம் நடத்தப்படும் என இவ்வரசு அறிவித்துள்ளது. ஆனால், பல இடங்களில் உள்ளாட்சி எல்லைகளை மறு சீரமைப்பு என்ற பெயரில் கடந்த தி.மு.க. அரசு குளறுபடியாக வரையறுத்து வைத்துள்ளது. எனவே, உள்ளாட்சித் தேர்தல் நடத்துவதற்கு குறுகிய கால அவகாசமே இருப்பதால், அதற்குள் உள்ளாட்சி எல்லைகள் போர்க்கால அடிப்படையில் மறு சீரமைக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது சில தொகுதிப் பிரச்சினைகள். எனது கும்மிடிப்பூண்டி தொகுதியில் உள்ள தேர்வாய் கிராமத்தில் சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பதற்காக 1,127 ஏக்கர் மேய்ச்சல் புறம்போக்கு நிலம் மற்றும் வன நிலத்தையும் கடந்த 2007 ஆம் ஆண்டு முந்தைய தி.மு.க. அரசு கையகப்படுத்தியது. வனப்பகுதியில் நீர் ஆதாரமாக இருந்த ஏரியும் சிதைக்கப்பட்டது. தேர்வாய் கிராமத்தைச் சேர்ந்த 5,000 தலித் மக்களின் வாழ்வாதாரமாக விளங்கிய இந்த நிலத்தை மீட்கக் கோரி மக்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் உள்ளிட்ட பல கட்டப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்த நிலைமையில்தான் கடந்த 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம்

தேதி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில், முந்தைய எதிர்க்கட்சிக் கொறடாவும், தற்போதைய மாண்புமிகு அமைச்சருமான எடப்பாடி பழனிச்சாமி, திருவள்ளூர் மாவட்ட கழகச் செயலாளரும், தற்போதைய மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான திரு. வி. மூர்த்தி, கும்மிடிப்பூண்டி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார், பொன்னேரி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. சிறுணியம் பலராமன் ஆகியோர் ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பொதுமக்களுக்கு இந்த இடத்தை மீட்டுத் தருவோம் என்றும் அவர்கள் வாக்குறுதி அளித்தனர். இந்த உண்ணாவிரதத்தில் தேர்வாய் கிராமத்தைச் சேர்ந்த பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை உணர்வுபூர்வமாகப் பங்கெடுத்துக் கொண்டனர். இந்த நிலையில், கடந்த 2009 ஆம் ஆண்டு இந்த இடத்தை மீட்க வலியுறுத்தி பார்லிமெண்ட் தேர்தலையும், பொதுமக்கள் புறக்கணித்து மிகப் பெரிய கவன ஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆனால், முந்தைய தி.மு.க. அரசு பொதுமக்களின் கோரிக்கைக்கு செவி சாய்க்காமல், போலீசாரை ஏவி விட்டு பொய் வழக்குகள் போட்டும், பொதுமக்களை மிரட்டியும் நிலத்தை கையகப்படுத்தும் முயற்சியை தீவிரப்படுத்தியது. இருப்பினும் கடந்த ஆட்சிக் காலத்தில் பொதுமக்களின் எதிர்ப்பால் அங்கு தொழிற்சாலைகளின் கட்டுமானப் பணிகள் மந்த நிலையில் இருந்தன. ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே தங்களது பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என மக்கள் நம்பி ஒற்றுமையுடன் வாக்களித்து, அ.தி.மு.க. கூட்டணியை வெற்றிப்பெற வைத்தனர்.

மாண்புமிகு முதல்வர் பதவியேற்ற நன்னாளில், தேர்வாய் கிராமத்தைச் சேர்ந்த 1,000 தலித் பெண்கள் பொங்கல் வைத்து கொண்டாடினார்கள். தங்கள் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க வந்த கிராம தெய்வமாக முதல்வரைப் புகழ்ந்து வருகின்றனர். இந்த சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பதற்கு இதுவரை தேர்வாய் கிராம சபையில் ஒப்புதல் வழங்கவில்லை. மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் இந்த ஆண்டு மார்ச் மாதம் 24—ஆம் தேதி வரை இந்தத் தொழிற்பேட்டைக்கு அனுமதி வழங்கவில்லை. இருப்பினும் தற்போது, சிப்காட் தொழிற்பேட்டையில் கட்டுமானப் பணிகள் வேகமெடுத்து வருகின்றன. இதனால், முதல்வரைத் தெய்வமாக நம்பிய 5,000 தலித் மக்கள் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளனர். எனவே, தேர்வாய் கிராமப் பகுதி மக்களின் வாழ்வாதாரம் கருதி, இந்த சிப்காட் தொழிற்பேட்டை திட்டத்தை இவ்வரசு கைவிட வேண்டும்.



கிராம மக்களிடம் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்திய இந்தத் திட்டம் எந்த அளவில் உள்ளது என்பதையும் அரசு வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என்பதைத் தொகுதி மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.எச். சேகர், இன்னும் ஒன்பது உறுப்பினர்கள் பேச வேண்டியுள்ளது. சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்துக்கோட்டை—திருவள்ளூர் நெடுஞ்சாலையில் கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேலாக பாழடைந்த தரைப்பாலம் மட்டுமே உள்ளது. மழைக் காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, ஆந்திரா மாநிலம் பிச்சாட்டூர் அணையைத் திறந்துவிடும்போது, சுமார் ஒரு மாத காலத்திற்கு மேல், இந்தச் சாலையில் போக்குவரத்து துண்டிக்கப்படுகிறது. இதனால் எனது தொகுதி மக்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, மாவட்டத் தலைநகருக்குச் செல்ல முடியாமல் பல்வேறு இன்னல்களுக்கும் ஆளாகின்றனர். தொகுதி மக்களின் நீண்டகாலக் கனவாக இருக்கும் மேம்பாலத்தை அங்கு அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

கும்மிடிப்பூண்டி சப்—டிவிஷனுக்கு உட்பட்ட ஆரம்பாக்கம் போலீஸ் நிலையம், ஆந்திரா எல்லையோரத்தை ஒட்டி அமைந்துள்ளது. கடந்த 1962ஆம் ஆண்டு துவங்கப்பட்டபோது ஒரு இன்ஸ்பெக்டர், இரண்டு எஸ்.ஐ—க்கள், 12 போலீசார் கொண்டதாக இந்தப் போலீஸ் நிலையம் இயங்கி வந்தது. அப்போது அங்கு மக்கள்தொகையும் 50,000 என்ற அளவிலேயே இருந்தது. தற்போது மக்கள்தொகை 1,50,000—த்தைத் தாண்டியுள்ளது. இதை மனதில் கொண்டு சுண்ணாம்புக் குளத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய காவல் நிலையத்தை அமைக்க வேண்டும். மற்ற கோரிக்கைகளை நான் நேரடியாகக் கொடுத்து விடுகிறேன். எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.எச். சேகர், மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் எழுதிக் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தின்போது, பேசிய பல உறுப்பினர்கள் நேரத்தின் அருமையைக் கருதி அவர்கள் இங்கே

வைக்க விரும்பிய தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை முழுமையாகச் சொல்லவிடாமல் அவற்றை எழுத்து மூலமாக முதலமைச்சரிடம் கொடுத்து விடுங்கள் என்று நீங்கள் உத்தரவிட்டீர்கள். ஆகவே, உறுப்பினர்களுக்குள்ள பிரச்சினை என்னவென்றால், அவர்கள் தொகுதி மக்களின் சார்பாக இந்தக் கோரிக்கைகளை இங்கே வைத்தார்கள் என்பது தொகுதி மக்களுக்குத் தெரிய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–15

ஆகவே, நேரத்தின் அருமையைக் கருதி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது தங்களுடைய தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை முழுவதுமாக இங்கே எடுத்துரைக்க நேரம் இல்லாவிட்டாலும், அவற்றை நீங்கள் அவைக் குறிப்புகளில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கருத்தினை ஏற்று அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பேசிய உறுப்பினர்களின் கோரிக்கைகள் மட்டுமல்ல, ஏற்கெனவே பேசி முடித்த உறுப்பினர்களின் கோரிக்கைகளையும் அவர்களுடைய உரையோடு அவைக் குறிப்புகளிலே பதிவு செய்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று, இன்று, நாளையும் பதிவு செய்யப்படும். (சிரிப்பு)

**திரு. சி.எச். சேகர்:** ஆரம்பாக்கம், சுண்ணாம்பு குளத்தில் வசிக்கும் 4,000 மீனவக் குடும்பங்களுக்கு, இதுவரை அனைத்து சுனாமி நிவாரண நிதிகளும், உதவிகளும் வந்து சேர்ந்துள்ளன. ஆனால், சுனாமி குடியிருப்பு மட்டும் கட்டப்படவில்லை. ஆகையால், இவ்வரசு தலையிட்டு இப்பகுதி மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் சுனாமி குடியிருப்புகளைக் கட்டித் தர ஆவன செய்ய வேண்டும். கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில், மீன்பிடித் தடைக்காலம் அமலில் இருக்கும்போது மற்றப் பகுதி மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை, இப்பகுதி



மீனவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை. இந்த நிதியாண்டு முதல் 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படவுள்ள மீன்பிடித் தடைக் கால உதவித்தொகை இப்பகுதி மீனவர்களுக்கும் கிடைக்க இவ்வரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாதர்பாக்கம் அருகில் சுமார் 1,500 ஏக்கர் பரப்பளவில் எல்காட் தொழிற்பேட்டை அமைக்க கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆய்வு நடத்தப்பட்டது. ஆனால், இந்தத் திட்டம் கிடப்பிலேயே உள்ளது. இந்த எல்காட் தொழிற்பேட்டை அமைந்தால் தொகுதி மக்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பைப் பெறவும் வசதியாக இருக்கும். எனவே, எல்காட் தொழிற்பேட்டை அமைக்க இந்த அரசு ஆவன செய்யவேண்டும்.

தமிழகத்திலேயே மிகப் பெரிய தொழிற்பேட்டையாக வளர்ந்துவரும் கும்மிடிப்பூண்டி தொழிற்பேட்டையில், நாள்தோறும் பல ஆயிரக்கணக்கான மக்கள், சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளிலிருந்து வேலைக்கு வந்து செல்கின்றனர். ஆகையால், இங்கு பேருந்து பணிமனை அமைக்க வேண்டும்.

கும்மிடிப்பூண்டி ஒன்றியத்திற்குட்பட்ட சுண்ணாம்பு குளம் மற்றும் ஆரம்பாக்கம், பூண்டி ஒன்றியத்திற்குட்பட்ட டி.பி. புரம் ஆகிய கிராமங்களின் சுற்றுப் பகுதிகளைச் சேர்த்து தலா 25,000—க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசிக்கின்றனர். அவர்களின் நலன் கருதி இப்பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைக்க வேண்டும்.

சுமார் 30,000—க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் கும்மிடிப்பூண்டி பேரூராட்சியை நகராட்சியாகவும், சுமார் 15,000—க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் மாதர்பாக்கம், பாதிரிவேடு மற்றும் மாநெல்லூர் ஆகிய ஊராட்சிகளை இணைத்து பேரூராட்சியாக அறிவிக்கவும் இவ்வரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் உள்ள அரசு பொது மருத்துவமனையில், சிப்காட் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி 24 மணி நேர அவசர சிகிச்சை மையம் மற்றும் மகப்பேறு சிகிச்சை மையம் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டும்.

கும்மிடிப்பூண்டியில் மாணவர்கள் நலன் கருதி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டும்.

கும்மிடிப்பூண்டி மற்றும் பெரியபாளையத்தில் நெல் கொள்முதல் மையங்களையும் அமைக்க வேண்டும்.

கும்மிடிப்பூண்டியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஊத்துக்கோட்டை பேரூராட்சியில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும்.

தமிழகத்தில் பிரசித்திபெற்ற கோயில்களில் ஒன்றாக பெரியபாளையத்தில் உள்ள அருள்மிகு பவானி அம்மன் கோயில் விளங்குகிறது. இந்தக் கோயிலுக்கு வந்து செல்லும் ஏராளமான பக்தர்கள் வசதிக்காக, சுற்றுலாத் துறை சார்பாகத் தங்கும் விடுதி மற்றும் உணவகம் அமைக்க வேண்டும்.

எனது கோரிக்கைகள் மற்றும் ஆலோசனைகளை இவ்வரசு கனிவுடன் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

***திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா, காலத்தை வென்றவர் நீங்கள், காவியமானவர் நீங்கள், வேதனை தீர்த்தவர் நீங்கள், விழிகளில் நிறைந்தவர் நீங்கள், வெற்றித் திருமகள் நீங்கள் என்ற அடிப்படையில் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டினுடைய ஒட்டுமொத்த வாக்காளர்களும் இருள் நிறைந்த தமிழகத்தை ஒளியேற்ற வாருங்கள் தாயே என்று சொல்லி, ஒரே ஒரு பட்டனில் கையை வைத்தார்கள். அதுதான் நம்முடைய வெற்றிச் சின்னமான இரட்டை இலை. அந்த பட்டனில் கை வைத்த காரணத்தால் தமிழகமே இன்றைக்கு ஒளி மிகுந்து கொண்டிருக்கிறது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்.

புரட்சித் தலைவி அம்மா தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக வந்தவுடன் தமிழ்நாட்டிலே சாதாரணக் கிராமங்களில் வாழ்கிற மக்கள் முதல், நகரங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிற அத்தனைப்பேரும் பயன்பெறத்தக்க அளவுக்கு ஆட்சியில் திட்டங்கள்





வந்து கொண்டிருக்கின்றன. இன்றைக்கு, சாதாரணமாக சுயநல அரசியல் பேர்வழிகளுக்குப் பின்னால் சென்று வீணாகப் போக இருந்த என்மீது புரட்சித் தலைவி அம்மாவின் அன்புப் பார்வை பட்டு அழைக்கப்பட்ட காரணத்தால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளை எடுத்துப் பேசுகிற தலைமைக் கழகத்தினுடைய பேச்சாளராக அறிவித்து, அதைத் தொடர்ந்து மதுரை புறநகர் மாவட்டக் கழகத் துணைச் செயலாளராக அறிவிக்கப்பட்டு, கொடியவர்களின் மத்தியில் திருமங்கலம் இடைத் தேர்தலில் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தையெல்லாம் வீசிய அந்தப் பகுதியில் இடைத் தேர்தலில் போட்டியிடுகிற வாய்ப்பினை எனக்கு வழங்கி, என்னை வெற்றி பெற வைக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா பெருமுயற்சி மேற்கொண்டு, அந்தத் தொகுதி முழுவதும் சுற்றுப்பயணம் செய்து தமிழ்நாட்டிலே கருணாநிதி என்ற ஒரு தீயசக்தி ஆட்சி செய்கிற கொடுமைகளையெல்லாம் எடுத்துச் சொன்னீர்கள். சூழ்ச்சியின் அடிப்படையில் அந்த வெற்றி பறிபோனதை மாற்றிக்கொள்கிற வகையில் பொதுத் தேர்தலிலும் அந்தத் திருமங்கலம் ஃபார்முலாவை மையமாக வைத்து தமிழ்நாட்டின் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுவிடலாம் என்று நினைத்த குள்ள நரிகளின் கூடாரத்தை உடைத்தெறிவதற்குத் திருமங்கலம் தொகுதி ஃபார்முலாவை உடைத்தெறிகிற வகையில், மீண்டும் திருமங்கலம் தொகுதியிலே போட்டியிடுகிற வாய்ப்பை எனக்கே வழங்கினீர்கள் தாயே. வாய்ப்பினை வழங்கி, வேட்பாளராக அறிவித்து, அய்யர் பங்களாவில் நடைபெற்ற தேர்தல் பொதுக் கூட்டத்தில் எங்களையெல்லாம் வெற்றி பெறச் செய்ய வாக்கு கேட்ட நீங்கள் வெற்றி பெற வைத்து, திருமங்கலம் ஃபார்முலா என்று எண்ணிய கருணாநிதி கூடாரத்தை தூள், தூளாக அடித்து உடைத்து (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் திருநாட்டில் திருப்புமுனையை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணினால் மக்களுக்கு எந்தவொரு நன்மையையும் செய்ய முடியும் என்ற துணிவை இன்றைக்குத் தமிழகத்தில் புரட்சித் தலைவி அம்மா நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள்.

கோவையிலே நடைபெற்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கண்டன ஆர்ப்பாட்டத்தில் புரட்சித் தலைவி அம்மா நீங்கள் உரையாற்றிய பிறகுதான் தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மக்கள் எல்லாம் நமக்கெல்லாம் வாழ்வளிப்பதற்காக ஒரு தன்னிகரில்லாத தலைவி தமிழ்நாட்டிற்கு

முதலமைச்சராக வரப் போகிறார் என்ற நம்பிக்கை தமிழகத்திலே உருவானது. அதைத் தொடர்ந்து திருச்சி மாநகரில் வெள்ளமென கூடிய அந்தக் கூட்டம், கருணாநிதியின் ஆட்சி அதிகாரம் முடிவுப் பாதைக்கு வந்துவிட்டது என்ற உணர்வை அவர்களே உணர்கிற வகையில் கூடியது.

*பிற்பகல் 12–20*

மதுரையில் வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டன ஆர்ப்பாட்டத்தில் புரட்சித் தலைவி அம்மா நீங்கள் உரையாற்றிய அந்த உரை மதுரை வாழ் மக்கள் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் நம்மை காப்பாற்றுவதற்காக ஆண்டவன் உருவில் புரட்சித் தலைவி அம்மா ஆளப் போகிறார்கள் என்ற நம்பிக்கையில் (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை வாழ் மக்களும், தமிழக மக்களும் எண்ணிக் கொண்டிருந்தார்கள். கருணாநிதியும், கருணாநிதி மகன்களும் தமிழகத்தை எந்த அளவிற்குச் சூறையாடினார்கள் என்பதை அங்கே நீங்கள் மதுரையில் உரையாற்றிய அந்தக் கண்டன உரை எடுத்துச் சொல்லியது. மதுரை வாழ் மக்களுக்கு நிச்சயமாக விடுதலை அளிப்பேன், மதுரையிலே இருக்கக்கூடிய ரவுடி கூடாரத்தினுடைய கொட்டத்தை ஒடுக்குவேன், அதற்கான வாய்ப்பினைத் தாருங்கள் என்று கேட்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு மதுரை மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்றத் தொகுதிகளின் வெற்றிக் கனியை உங்கள் காலடியிலே உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதிலே என்னை திருமங்கலம் தொகுதியில் மிகப் பெரிய அதிகப்படியான வாக்குகளில் வெற்றி பெறச் செய்த திருமங்கலம் தொகுதி வாக்காளர்களுக்கு உங்கள் பாத மலர்களோடு சேர்த்து என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மதுரையில் உள்ள மக்கள் எல்லாம் கருணாநிதியின் மகன் கொலைக் குற்றத்திற்கு ஆளாக்கப்பட்ட கொடிய எண்ணம் படைத்த மு.க. அழகிரியின் அச்சுறுத்தலில் இருந்து விடுபட்டு நிம்மதிப் பெருமூச்சு விடுத்து, கோயில் மாநகரம், தூங்கா நகரம் மதுரை இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சியிலே புதுப்பொலிவு பெற்று வருகின்றது என்ற நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் தாயே. ஆட்சியின் அதிகாரத்தில் இருந்தவர்கள் மதுரையில் மட்டுமல்லாமல், தமிழகத்தையே சூறையாடிக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு இந்த ஆட்சியினுடைய திட்டங்களால், புரட்சித் தலைவி அம்மா நீங்கள் தீட்டித் தந்த திட்டங்களால் கருவறை முதல் கல்லறை வரையிலும் இந்த



ஆட்சியிலே பயன்பெறாதவர்களே இல்லையென்ற அளவிற்கு உங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே தந்திருக்கிறீர்கள். ஏழை எளியோருடைய வாழ்க்கையை உயர்த்துகிற வகையில் 20 கிலோ அரிசி இலவசமாகப் போடுகிறீர்கள். 20 கிலோ அரிசி வாங்கக்கூடிய தாய்மார்களுக்கெல்லாம் மின்விசிறி, கிரைண்டர், மிக்சி இலவசம் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிற பிள்ளைகள் இடையிலே பள்ளியை விட்டுவிடக் கூடாது என்பதற்காக உயர்நிலைப் பள்ளிக்கு 1,500 ரூபாயும், மேல்நிலைப் பள்ளிக்கு 2,000 ரூபாயும் வைப்புத் தொகையாக வழங்கி பெருமைப்படுத்தி இருக்கிறீர்கள். ஏற்கெனவே ஆட்சியில் இருந்தபொழுது பள்ளிக் குழந்தைகள் மேலும், மேலும் உயர்ந்து படிப்பதற்காக சைக்கிள் வழங்கிய தாய், இன்றைக்கு மடிக் கணினி வழங்கி பெருமைப்படுத்தி இருக்கிறீர்கள். இவற்றையெல்லாம் பார்க்கிறபொழுது முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி சொல்கிறார். இந்த ஆட்சியிலே எதுவுமே இல்லை என்று சொல்லி அவர் ஆட்சியில் இருந்தபோது பிள்ளைகளின் படிப்பைக் கெடுக்கக்கூடிய, தன் குடும்பத்திற்கு வருமானத்தை உருவாக்கக்கூடிய செயலாக இலவச டிவி. வழங்கி குடும்ப கேபிள் மூலமாக பணத்தைப் பெற்று பிள்ளைகளுடைய படிப்பைப் பாழாக்கிக் கொண்டிருந்தார். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களோ மடிக் கணினி வழங்குகிறார்கள். நாமும் இந்த மடிக் கணினியைப் பெறவேண்டுமென்று சொல்லி, ஐந்தாவது படிக்கின்ற பிள்ளைகள்கூட எங்களுக்குக் கம்ப்யூட்டர் தருவதற்கு தாய் புரட்சித் தலைவி அம்மா இருக்கிறார், (மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்வி படிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்ற நிலையை உருவாக்குகிற உயர்ந்த தொலைநோக்குப் பார்வையோடு புரட்சித் தலைவி அம்மா உங்களுடைய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ஆட்சியை நல்ல மனம் கொண்டவர்கள், அறிவாற்றல் கொண்டவர்கள், ஆற்றல் மிக்கவர்கள் எல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான் தமிழ்நாட்டு மக்களைக் காப்பாற்றுகிற தனிப் பெரும் தலைவியாக இருப்பார்கள் என்று சொல்லி புகழ்ந்து, புகழ்ந்து பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியின் அதிகாரம் குறித்து இன்றைக்குக் கருணாநிதியைப் போன்று ஒரு குடும்பம் வாழ்வதற்காக நடத்தினாரே அவருக்குப் புரிவதற்கு வாய்ப்பில்லை.

இன்றைக்கு தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிற அத்தனை குடும்பங்களும் முன்னேறுவதற்குரிய ஒரு ஆட்சியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தமிழ்நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கும் அத்தனை குடும்பங்களும் முன்னேறுகிற ஒரு ஆட்சியை இந்தக் கோட்டையிலே உட்கார்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்களுடைய வீடுகளில் இருப்பவர்கள் எல்லாம் இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா உங்களுடைய ஆட்சியின் திட்டம் எங்களுக்கு இருக்கிறது. இந்த ஆட்சியில், உழைக்கிற மக்களுக்கெல்லாம் உயர்வளிக்கக்கூடிய திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உருவாக்கித் தருகிறார்கள். நாம் பெற்ற பிள்ளையை உயர் கல்வி பெறுவதற்குரிய வாய்ப்பினை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உருவாக்கித் தருகிறார்கள் என்று சொல்லி பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மதுரையிலே ரவுடிக் கூடாரம் ஒழிந்திருக்கிறது. கட்டப் பஞ்சாயத்து பண்ணியவர்கள் அடக்கப்பட்டிருக்கிறார்கள். மக்கள் எல்லாம் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் தாயே.

ஆனால், 2 கேள்விகள் இன்னும் மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலிருந்து எப்போது வரும், வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். அன்றைக்கு ஒரு குடும்பச் சண்டையின் காரணமாக மதுரையிலே ஒரு பத்திரிகை அலுவலகம் எரித்து சாம்பலாக்கப்பட்டது. அதிலே 3 அப்பாவித் தொழிலாளர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அந்தக் குடும்பச் சண்டையின் அடிப்படையில் மதுரை வீதிகளிலே ஓடிய பல அரசுப் பேருந்துகள் அடித்து நொறுக்கப்பட்டன. அரசுச் சொத்துகள் சேதமாக்கப்பட்டன. இதற்கு யார் காரணம்? அந்தப் பத்திரிகை அலுவலகத்தினுடைய முதலாளி சொன்னார். என்னுடைய பத்திரிகை அலுவலகத்தை எரித்தவர் கருணாநிதியினுடைய மகன் மு.க. அழகிரிதான். அவர் மீது நான் உரிய நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பல புகார்களில் அவருடைய பெயர் 3, 4 இடங்களில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த வழக்கிலே அந்தப் பெயர் இடம் பெறாத நிலையில் இருக்கிறது தாயே. அந்த 3 அப்பாவித் தொழிலாளர்களுடைய சாவுக்குக் காரணமான, மதுரையிலே அரசு பஸ்களை வீதியிலே உடைத்தெறிந்து, எரிக்கப்பட்ட குற்றத்திற்குக் காரணமான——ஒரு தவறு செய்தவர்களைவிட தவறு செய்யத் தூண்டியவர்களுக்குத்தான் தண்டனை அதிகம் என்று சொல்லப்படுகிறது. எனவே, நீதியை





நிலை நாட்டுகிற ஆற்றல் படைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, நீங்கள்—உண்மைக் குற்றவாளிகளை அந்த வழக்கிலே சேர்க்கக்கூடிய அளவிற்கு இந்தக் குற்றத்திற்கெல்லாம் தூண்டுகோலாக விளங்கிய முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் மகன் மு.க. அழகிரியை இந்த வழக்கிலே சேர்ப்பதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் தாயே.

தன் குடும்பத்திற்கு அடி பணிந்து உழைத்து அந்த இயக்கத்தை வளர்த்த தன் கட்சிக்காரர்தான் என்று தெரிந்தும்கூட தனக்கு அடி பணிந்து செல்ல மாட்டேன் என்கிறார் என்பதற்காக முன்னாள் அமைச்சர் தா. கிருஷ்ணனை அழகிரியின் ஆட்கள் கொலை செய்தார்கள். அந்த அழகிரியின் ஆட்கள் கொலை செய்த அந்த வழக்கு தமிழ்நாட்டிலே அவருடைய அப்பா முதலமைச்சர் ஆக இருக்கிற காரணத்தினால், நடத்தக் கூடாது என்பதற்காக உங்களின் அன்புமிக்க தொண்டர்களில் ஒரு தொண்டனாக இருந்த நான் அன்றைக்கு அரசுத் தரப்பு சாட்சியாகச் சேர்க்கப்பட்டு இருந்தேன்.

பிற்பகல் 12—25

உங்களின் பாதுகாப்பு எனக்கு இருக்கும் என்ற அடிப்படையில் நான் அதை உச்ச நீதிமன்றத்தில் எடுத்துச் சொல்லி, ஆந்திர மாநிலம், சித்தூர் நீதிமன்றத்திலே அந்த வழக்கு நடைபெற்றது, தாயே. அந்த வழக்கிலே அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்துகிற வகையில், அன்றைய தி.மு.க. மைனாரிட்டி ஆட்சியினுடைய அமைச்சர்கள், சித்தூர் நீதிமன்றத்திலே தினம் ஓர் அமைச்சர் என்ற அடிப்படையில் உட்கார்ந்து கொண்டு சித்தூர் நீதிமன்றத்தையே அச்சுறுத்தினார்கள், தாயே. இந்தக் குற்றஞ்சாட்டப்பட்டு உட்கார்ந்து இருப்பவர்கள் மத்தியில், தமிழ்நாடு அரசாங்கம் இருக்கிறது என்ற அடிப்படையிலே அங்கே உட்கார்ந்து, என்னைத் தவிர மற்ற சாட்சிகளையெல்லாம் மிரட்டி, நீதியின் கண்களைக் கட்டி விட்டு, இன்றைக்கு நிரபராதிகள்போல் விடுதலையை விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். அந்த வழக்கிலே சாட்சி சொல்லப்போன எனக்கு மிகப் பெரிய அளவுக்கு காவல் துறையினர்களை வைத்தும், பல துன்பங்களை, துயரங்களை விளைவித்தார்கள், தாயே. அவ்வாறு பண்ணியபோது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடத்தில் என்னுடைய கஷ்டங்களை எடுத்துச் சொல்கிறபோது, அன்றைக்குச் சட்டமன்றத்தில்

எதிர்க்கட்சியினுடைய கொறடாவாக இருந்த, இன்றைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் அன்றைக்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்த இன்றைய நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் மூலமாக ஒத்திவைப்புத் தீர்மானத்தை இந்த மாமன்றத்திலே கொண்டுவர வைத்திட்ட தாயே, அதற்கு பின்னால்தான், கருணாநிதி அரசாங்கத்தால் என்மீது தொடுத்த அச்சுறுத்தல்கள் குறைக்கப்பட்டன. அதற்குப் பின்னால் எனக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று சொல்லி புரட்சித் தலைவி அம்மா அவர்களே உச்ச நீதிமன்றம் வரையிலும் முத்துராமலிங்கத்தைக் காப்பாற்றச் செல்வேன் என்று சொன்ன அந்த அறிக்கை இன்று வரையிலும் எனக்குப் பாதுகாப்பாக இருந்துகொண்டிருக்கிறது. ஆக, தவறு செய்தவர்கள் இன்றைக்கு வெளியில் இருக்கிறார்கள். இந்த வழக்கிலே நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று சொல்லிய உங்களின் தொண்டன் அன்றைக்குக் காவல் துறையால் அச்சுறுத்தப்பட்டு, அச்சுறுத்தப்பட்டது மட்டுமல்லாமல், என்னுடைய மகன் எந்தவொரு தவறுக்கும் ஆளாக்கப்படாதவனை, ஒரு கொலை முயற்சி வழக்கிலும் போட்டு, அவரை மூன்று மாதம் நான் காப்பாற்றுவதற்குப் பெரும்பாடுபட்டிருக்கிறேன், தாயே. அந்த அளவுக்கு அச்சுறுத்தப்பட்ட இந்த இரண்டு வழக்குகளும் இன்றைக்கு மதுரைவாழ் மக்களிடத்தில் கேள்வியாக நின்று கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் இன்றைக்கு நில அபகரிப்பு வழக்கு, அடி, தடி, கட்டப் பஞ்சாயத்து பண்ணியவர்கள் எல்லோரையும் ஒடுக்கக்கூடிய சக்தியாக விளங்கிக் கொண்டிருக்கிற நீங்கள்தான், இன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் கிளம்பியிருக்கிற முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் மகன் செய்த இரண்டு கொலைகளுக்குக் காரணமான இந்த வழக்குகளை மேல்முறையீடு செய்து, உண்மை நிலையை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லி நல்ல தண்டனையைப் பெற்றுத் தரவேண்டுமென்று உங்கள் பாதங்களைத் தொட்டுக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், எந்த அளவுக்கு எல்லா மக்களும் விரும்புகிறார்களோ, அந்த விருப்பத்திற்கேற்ப ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நேற்றும்கூட, என்னுடைய தொகுதியின் பிரச்சினையாக, ஒரு தீயணைப்பு நிலையம் கல்லுப்பட்டியில் வேண்டுமென்று கேட்டவுடன், ஒரு குழந்தையின் பசி, பெற்ற தாய்க்குத்தான் தெரியும் என்ற அடிப்படையில், நான் அடைந்த அந்தப் பசியை என்னுடைய தாய் புரட்சித் தலைவி அம்மா உணர்ந்து கொண்ட காரணத்தினால் புதிய தீயணைப்பு நிலையத்தை வழங்கி அதற்கான உபகரணங்கள், வாகனங்கள் அத்தனைக்கும் நிதியொதுக்கீடு செய்து பெருமை சேர்த்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய தொகுதியின் சார்பில், கல்லுப்பட்டி ஒன்றிய மக்களின் சார்பில் பொற்பாதம் பணிந்து மிகப் பெரிய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதோடுமட்டுமல்லாமல், என் தொகுதியிலே உள்ள சில முக்கியமான பிரச்சினைகளில், இடைத் தேர்தல் பிரச்சாரத்தின்போது மாண்புமிகு அம்மா அவர்களே, நீங்களே சொல்லியது போல். நகரத்தின் மையத்திலே இருந்து கொண்டிருக்கிற பேருந்து நிலையம் சென்னையிலிருந்து கன்னியாகுமரி செல்கின்ற தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிறது. அந்தப் பேருந்து நிலையத்தில்தான் வெளியூர் பேருந்துகள் எல்லாம் நிற்க வேண்டும். அங்கே இறங்கி மக்கள் நடந்து செல்கின்றபோது பல விபத்துகள் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகிறது. அதற்கு ஒருங்கிணைந்த ஒரு பேருந்து நிலையத்தை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலம் தொகுதியில் அரசு பெண்கள் கலைக் கல்லூரி அமைத்துத் தருவேன் என்று மாண்புமிகு அம்மா அவர்களே இடைத் தேர்தல் பிரச்சாரத்தின்போது சொன்னீர்கள். அரசு பெண்கள் கலைக் கல்லூரி ஒன்றினை அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் மீண்டும் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் செக்கானூரிலே, ஒரு ஐ.டி.ஐ. நடந்துகொண்டிருக்கிறது. அதை பெண்கள் பாலிடெக்னிக்காக உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டி. கல்லுப்பட்டி ஒன்றியத்தினுடைய தலைமையிடம். அங்கே பல்வேறு பள்ளிகள் இருக்கின்றன. உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால், ஆரம்பப் பள்ளி இல்லாத நிலை, அந்தப் பகுதி மக்கள் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். டி. கல்லுப்பட்டியில் ஆரம்பப் பள்ளி ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டம், திருமங்கலத்தில், ஒரு மிகப் பெரிய அளவுக்குரிய நீதிமன்றம். 150 ஆண்டுக் காலம் பழமை வாய்ந்தது அந்த நீதிமன்றம். அங்கே சார்பு நீதிமன்றம் வேண்டுமென்று நீண்டநாட்களாகக் கோரிக்கை வைத்துக்கொண்டு வருகிறார்கள். வழக்கின் தன்மையைக் கருதி அந்த சார்பு நீதிமன்றம் வாரம் ஒரு முறை நடக்கும் என்று சொல்கிறார்கள். அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிற வழக்கு மிகப் பெரிய அளவிலே இருக்கிற காரணத்தினால், அதை வாரம் ஒருமுறை என்பதைவிட, நிரந்தரமான சார்பு நீதிமன்றத்தினைத் திருமங்கலத்திற்கு வழங்கிட வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை (தெற்கு) தாலுகா என்பது மிகப் பெரிய அளவுக்குப் பரந்து, விரிந்து கிடக்கக்கூடிய ஒரு பகுதி. மதுரை மாநகரத்தின் ஒரு பகுதியாகவும், அவனியாபுரம், திருப்பரங்குன்றம், திருநகர், ஆரியப்பட்டி, சிந்தாமணி, சின்ன அனுப்பானடி என்று விரிந்து கிடக்கிற பல பகுதிகளைக் கொண்ட மதுரை (தெற்கு) தாலுகாவைப் பிரித்து, திருப்பரங்குன்றத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புது தாலுகா உருவாக்க வேண்டுமென்றும், புதிதாக உருவாக்கப்படுகிற திருப்பரங்குன்றம் தாலுகாவையும், திருமங்கலம் தாலுகா, பேரையூர் தாலுகாக்களை இணைத்து திருமங்கலத்தை மையமாகக் கொண்டு ஒரு வருவாய்க் கோட்டம் உருவாக்கிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களைப் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

எனது திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட, கள்ளிக்குடி ஒன்றியம், சிவரக்கோட்டை பகுதியில், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியினுடைய மகன் மு.க. அழகிரிக்குச் சொந்தமாக ஒரு கல்லூரி கட்டுவதற்காக, அவர் வாங்கிப் போட்ட பல ஏக்கர் நிலம் விலை உயர்வுக்கு வரவேண்டுமென்பதற்காக, விவசாயிகளுடைய நிலத்தை, சிப்காட்டிற்குக் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. இன்றைக்கு எத்தனையோ இடங்களில் நிலம் தொழிற்சாலைக்காக இருக்கின்றபோது, விளைநிலங்களைக் கையகப்படுத்தியிருக்கிறார்கள். அந்த விளைநிலங்களை விவசாயிகளுக்கே சொந்தம் என்ற அடிப்படையில் வருவதற்கு, சிப்காட்டிற்கு வேறு நிலங்களைத் தேர்வு செய்து, கையகப்படுத்தப்பட்ட அந்த விவசாய நிலங்களை மீண்டும் அவர்களுக்கே கொடுத்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



திருமங்கலம் தொகுதியில், இடைத் தேர்தலின்போது மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லிய பகுதியாக, திருமங்கலத்திலே விவசாயிகளுடைய நலன் கருதி, ஏதாவது ஒரு பகுதியில் ஒரு நீர்த்தேக்க டேம் உருவாக்கித் தருவேன் என்று சொன்னீர்கள். அதனை அந்தப் பகுதியிலே உருவாக்கித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கல்லுப்பட்டி ஒன்றியம், பேரையூர் தாலுகா, சதுரகிரி மகாலிங்கம் கோயில் பகுதிகளில், மழைக்காலங்களில் காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். அந்தக் காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றபோது பல உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதைத் தடுக்கின்ற வகையில், தேராபார் என்ற பகுதியில், புதிய ஒரு அணைத் திட்டத்தை அந்த விவசாயிகள் பயன்பெறக்கூடிய அளவிற்கு உருவாக்கித் தந்திடவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலத்திலிருந்து செங்கோட்டை செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலையில் ஆலம்பட்டி அருகே மிகக் குறுகிய பாலம் இருக்கிறது. பல்வேறு விபத்துகள் உருவாகியிருக்கின்றன. அதை ஒரு உயர்மட்டப் பாலமாகவும், அதே கல்லுப்பட்டி அருகிலே அதே தேசிய நெடுஞ்சாலையில் வி. அம்மாப்பட்டி பகுதியில் அதை ஒரு உயர்மட்டப் பாலமாக அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது திருமங்கலம் தொகுதியைப் பொறுத்தமட்டில், குடிதண்ணீர்ப் பற்றாக்குறை மிகவும் அவலமான நிலையில் இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் ஆண்டிப்பட்டியிலே உருவாக்கப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினால் ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி, சேடப்பட்டி தொகுதிகளுக்குக் குடிதண்ணீர் கிடைத்தது. அதில் ஒரு பகுதியாக என்னுடைய திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட கள்ளிக்குடி ஒன்றியப் பகுதிக்கும் கிடைத்து, இன்றைக்கு அந்தப் பகுதி மக்கள் எல்லாம் ஆண்டிப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத் தண்ணீரைக் குடித்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்களுடைய திருக்கரங்களால் உருவாக்கப்பட்ட திட்டம் என்ற காரணத்தினால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி, அதைப் பழுதுபார்ப்பதற்கு இல்லாமல் இன்றைக்கு மக்கள் தொகை அதிகரித்து வருவதைப் புரிந்துகொள்ளாமல் அதை விட்டுவிட்டார்கள். பல இடங்களிலே பைப்புகளெல்லாம் உடைந்து குடிநீர் வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது. அவற்றைச் சரி செய்து, அந்தப் பகுதி மக்களுக்குக் குடிநீர் முழுமையாகக் கிடைக்கக்கூடிய அளவிற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஆட்சி செய்த ஆட்சியாளர்கள், இதுபோன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த அத்தனைத் திட்டங்களையும் கிடப்பில் போட்டார்கள். மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் புரிந்து செய்யக்கூடிய திட்டங்களையெல்லாம் கிடப்பில் போட்ட காரணத்தினால்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், முதல்முறையாக அந்தச் சுகாதார வளாகங்களை, ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு சுகாதார வளாகத்தை--கிட்டத்தட்ட 12,618 சுகாதார வளாகங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. அந்த நிலைமைகளைப் போக்க உடனடியாக போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதைப்போலவே, குடிநீர் வசதிகளை மேம்படுத்துகின்ற வகையிலே, எங்கெங்கெல்லாம் திட்டங்கள் இப்படி கிடப்பில் போடப்பட்டிருக்கின்றனவோ அந்த அனைத்து திட்டங்களும் மேம்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதைப்போலவே, திருமங்கலம் ஒன்றியத்திலுள்ள 38 பஞ்சாயத்து கிராமங்களுக்கும், திருமங்கலம் நகராட்சிக்கும் புதிய குடிதண்ணீர்த் திட்டத்தினை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே, திருமங்கலத்தை மையமாகக்கொண்டு பல்வேறு பகுதிகளிலே இருக்கக்கூடிய விவசாயக் குளங்கள் அத்தனையும் தூர்வாரப்படாமல் தூர் ஏறிப் போய்க்கிடக்கின்றன. எனவே, திருமங்கலம் கால்வாயைத் தூர்வாரியும், திருமங்கலத்தை மையமாகக்கொண்டு ஓடுகின்ற குண்டாற்றினைத் தூர்வாரச் செய்து, அங்கே இருக்கக்கூடிய கண்மாய்களுக்கு நீர் செல்லக்கூடிய வாய்ப்பினை உருவாக்கவேண்டும். சிவரக்கோட்டை அருகே இருக்கக்கூடியது கவுண்டநதி. இந்த கவுண்டநதியில் காட்டாற்று வெள்ளம் வருகின்றது என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில்



சென்னம்பட்டியில் டேம் கட்டியிருக்கிறார்கள். அந்த டேம் எதற்காகக் கட்டப்பட்டது, எதற்காகப் பயன்படுகிறது என்று தெரியாதவகையில் இதுவரை உள்ளதால், இந்த கவுண்டநதியைத் தூர்வாரிக் கொடுப்பதோடு வெள்ள நீரினைச் சேமித்தால் அங்கேயுள்ள குழாயூர், நொச்சிக்குளம், மருதங்குடி, வெள்ளாகுளம், இலுப்பகுளம், வேப்பகுளம் போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகள் பாசனம் பெறுவதற்கு வசதி வாய்ப்பாக இருக்கும். எனவே, அதையெல்லாம் நீங்கள் உருவாக்கித் தருவதோடு, திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் தாலுகா, பேரையூர் தாலுகாவில் இருக்கக்கூடிய, பொதுப் பணித் துறை கண்காணிப்பில் இருக்கக்கூடிய கால்வாய்களையெல்லாம் செப்பனிட வேண்டும். திருமங்கலம் நகரத்திலே வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி, அங்கே பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கால்வாய்கள் தூர்வாராத காரணத்தால், இப்போது 150 வீடுகளுக்கும் மேலாக, வணிக நிறுவனங்கள் எல்லாம் இடித்துத் தள்ளப்பட்டிருக்கின்றன. அவர்கள் மாற்று இடம் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால் பொதுப் பணித் துறை வாயிலாகக் கால்வாய்களைத் தூர்வாரித் தரவேண்டுமென்றும், தூர்வாரி அந்தப் பகுதிகளிலுள்ள மக்கள் நிம்மதிப் பெருமூச்சுவிட வழி செய்யவேண்டும்.

அரசு ஓமியோபதி கல்லூரி திருமங்கலத்தில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலே ஒன்றே ஒன்றுதான் ஓமியோபதி கல்லூரி. அங்கே போதிய மருத்துவர்கள் இல்லை. பாடம் கற்றுக்கொடுக்கக்கூடிய ஆசிரியர்கள் இல்லை. அது புத்துயிர் பெறுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று பாதம் தொட்டுக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள செக்கானூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பல பிரிவுகளாகக் கட்டடங்கள் இருக்கின்றன. அதற்கு ஒருங்கிணைந்த கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும். புதுப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும். இதுபோன்ற திட்டங்களை எல்லாம் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, நான் ஏற்கெனவே சொல்லியதுபோல், மதுரைவாழ் மக்களுக்கு நிம்மதிப் பெருமூச்சு அளித்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களே, இரண்டு வழக்குகளில் உண்மைக் குற்றவாளிகளை அடையாளம் கண்டு, இந்தத் தமிழ்நாட்டுக்கே ஒரு முன்மாதிரியான முதலமைச்சர் நீங்கள்தான் என்பதை நிருபிக்க வேண்டும்; நீதியை நிலைநாட்ட வேண்டுமென்று உங்கள் பாதம் தொட்டு உங்களைக் கேட்டு, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பேசும்போது, மதுரை மாவட்டத்திலே திருமங்கலம் வட்டம் சிவரக்கோட்டை, கரிசல்காலப்பட்டி, சுவாமி மல்லப்பட்டி ஆகிய கிராமங்களில் தரிசு நிலங்களை, புன்செய் நிலங்களை சிப்காட்டுக்காக தி.மு.க. ஆட்சியிலே 1,478 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதற்கு அருகிலே முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியினுடைய மகன் அழகிரியோட கல்லூரி கட்டுவதற்காக நிலங்களை, அதன் மதிப்பை அதிகப்படுத்துவதற்காக இந்த நிலத்தைக் கையகப்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று அந்த நிலத்தையும் கண்டிப்பாகக் கையகப்படுத்துவோம் என்று தெரிவித்துக்கொண்டு, அதுபோல, நம்முடைய உறுப்பினர் அவர்கள் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க அங்கே தேர்தலில் போட்டியிட்டபோது நாங்களும் அழகிரியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டோம். எஸ்.ஆர். கோபி போன்ற அழகிரியினுடன் இருந்த மோசமான நபர்கள் எங்களுடன் இருந்தவர்களின் கைகளையெல்லாம் உடைத்து காவல் நிலையத்திலே வைத்து எங்கள் மேல் வழக்குகள் எல்லாம் போட்டார்கள் என்று உறுப்பினருக்கும் தெரியும் என்று சொல்லி, கண்டிப்பாக அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு முன்னால் அதே சப்ஜெக்ட்டைதான் நானும் சொல்லவேண்டுமென்று நினைத்தேன். கடந்த ஆட்சியிலே, நம்முடைய திருமங்கலம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, கிட்டத்தட்ட 5 ஆயிரம் ஏக்கர் நிலம், எல்லாமே விவசாய விளைநிலங்கள். பருத்தி, துவரை இப்போதும் 3 போகம் விளையும். அந்த விளைநிலங்களை சிப்காட்டிற்கு எடுத்ததற்காக அந்தப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் கடுமையானப் போராட்டம் நடத்தினார்கள், நாங்களும் அதில் கலந்து கொண்டோம்.



சட்டமன்றத்திலே குறிப்பிட்டுச் சொல்கிறபோதெல்லாம் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திருமதி லதா அதியமான் எங்களிடம் தனியாகச் சொல்வார்கள். நீங்கள் பேசுகிறீர்கள், என்னால் பேசமுடியவில்லை என்று. ஏனென்றால் எங்கள் ஆட்சி நடக்கிறது என்று சொல்வார்கள். ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திருமங்கலத்திலிருந்து வந்து இப்போது பேசுவது எனக்கு ரொம்ப மகிழ்ச்சி அளிக்கிறது. ஏனென்றால், நான் அன்றைக்குப் பேசிய அந்தக் கோரிக்கையை இன்றைக்கு உறுப்பினர்கள், அவர்கள் ஆட்சி இடம்பெற்றதாலே அதிலேயும் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நன்றி தெரிவித்துக்கொண்டு விவசாய வேளாண் விளைநிலங்கள் இதுபோன்று ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன, கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதை ஆய்வு செய்து விவசாயிகளுக்கு நல்ல தீர்வு சொல்லவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள். இன்னும் மாண்புமிகு உறுப்பினர் ஏழு பேர் பேசவேண்டும். எனவே, காலத்தின் அருமை கருதி சுருக்கமாக 10 நிமிடங்கள் உரையாற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் 2011–2012 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையின் பேரிலே என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பு அளித்தத் தங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தங்கள் அறிவுரைக்கிணங்க மிகச் சுருக்கமாக என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்வேன் என்பதையும் உறுதிபடுத்திக்கொள்கிறேன். பொதுத் தேர்தல் நிகழ்ந்து சட்டமன்ற மரபுகள் உருவாக்கப்பட்டு ஏறக்குறைய 60 ஆண்டுகால நிதிநிலை வரலாற்றில் தமிழகத்தில் ஏறக்குறைய ஒரு இலட்சம் கோடி ரூபாயை எட்டிப் பிடித்திருக்கிற முதல் நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவுரையின் பேரிலே மாண்புமிகு நிதி அமைச்சர் இந்த மாமன்றத்திலே அளித்திருக்கிறார் என்கிறபோது அந்தச் சாதனையைப் படைத்திருக்கிற மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், துணை நின்றவர்களையும் நான் வாழ்த்திப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு நிதிநிலை அறிக்கை அதுவும் ஏழை மக்கள், நலிந்த மக்கள், அடித்தளத்து மக்கள் ஏறக்குறைய மக்கள்தொகையிலே 70 சதவீத மக்கள், கிராமப்புற மக்கள். அந்த 70 சதவீதத்திலே 30 சதவீத மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்கள். அப்படிப்பட்ட மாநிலக் கட்டமைப்பில் ஏற்கெனவே இருந்த அரசு தவறுகளால், தான்தோன்றித்தனத்தால் ரூபாய் 1 இலட்சத்து 18 ஆயிரம் கோடி கடனாக வைத்துவிட்டுப் போன பின்னாலும், ஒரு நிதிநிலை அறிக்கை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழுகிற வகையிலே இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது என்கிறபோது, நான் இதை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். இது வெறும் வார்த்தைக்காகச் சொல்கிற ஒரு புகழ்ச்சி அல்ல. Welfare Government, மக்கள் நல அரசு என்று சொல்கிறார்களே, அந்த மக்கள் நல அரசு எப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை ஏற்படுத்த வேண்டுமென்பதற்கு ஒரு இலக்கணமாக இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது.

பிற்பகல் 12–40

பொதுவாகவே, நாம் House of Commons என்று சொல்கிற இங்கிலாந்து பொது மக்கள் சபையினுடைய மரபுகளைப் பின்பற்றுகிறோம். அந்தப் பொது மக்கள் சபை House of Commons இருக்கிறதே, அதிலே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை எதிர்க்கட்சிகள் 100 நாட்கள் விமர்சிக்கக் கூடாது. ஏனென்றால், புதிய அமைச்சரவைக்கு 100 நாட்கள் தேனிலவு இருக்க வேண்டும். Honey Moon இருக்க வேண்டும். ஆகவே விமர்சிக்கக் கூடாது என்ற ஒரு மரபை அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய இந்த அரசு, இந்த 100 நாட்களிலேயே தேர்தல் காலத்திலே அறிவித்த 100 சதவிகித வாக்குறுதிகளையும் நிறைவேற்றியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 100 சதவிகித வாக்குறுதிகளையும் நிறைவேற்றியிருக்கிறது என்கிறபோது, நுழைமாண் நுண்ணறிவும், ஆழ்ந்த அனுபவமும், மிகச் சிறந்த சீரிய தொலைநோக்கும், சமரசம் செய்துகொள்ளாத ஒரு துணிவும், அளப்பரிய ஆற்றலும் பெற்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலேதான் இப்படிப்பட்ட ஒரு நிதிநிலை அறிக்கையை நிறைவேற்ற முடியும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனாலேதான், இந்த நிதிநிலை அறிக்கை, ஒரு நிதிநிலை அறிக்கை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான இலக்கணத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது.



இதிலே மழலையர், மாணவர், இளைஞர், பெண்கள், முதியோர், தொழிலாளர், நெசவாளர், மீனவர், ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையோர் என்று சமூகத்தில் எந்தத் தரப்பினரையும் இவர்கள் விட்டு வைக்கவில்லை. கருவிலேயிருந்து ஒவ்வொரு குடிமகனும் எருவாகிப் போகிற வரை ஏதோ ஒரு வகையிலே இந்த அரசு உங்களைக் கைத்தூக்கி விடுவதற்குத் துணை நிற்கிறது. நாங்கள் இருக்கிறோம், இந்த அரசு இருக்கிறது. எனவேதான் இது Welfare Government என்பதற்கான, மக்கள் நலன் காக்கும் அரசாக, இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. இதைப் பாராட்டுவதற்குப் பல மணி நேரம் தேவை. ஆனால் நான் மாண்புமிகு பேரவைத் தலைவருடைய கட்டுப்பாட்டுக்குக் கட்டுப்பட்டவன். பல மணி நேரம் தேவை. வரிக்கு வரி வரி போடாமல், மக்களுக்கு வாரி வழங்குகிற திட்டங்களைத் தருகிற இந்த நிதிநிலை அறிக்கையைப் பல மணி நேரம் பாராட்டலாம். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட ஒரு நிதிநிலை அறிக்கையாக இந்த அறிக்கை இருக்கிறது. ஆனால் நான் ஒரு அடித்தளத்து மக்களின் பிரதிநிதியாக, நலிந்த, ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக சிலவற்றை மட்டும் குறிப்பிட்டுப் பதிவு செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன்.

முதலிலே அதைக்கூட நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், அடித்தளத்து மக்கள், நலிந்த மக்கள், பாமர மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், அவர்கள் பேச முடியாத, அதாவது வாய் இருந்தும் ஊமைகளாக இருக்கிற மக்கள் இன்றைக்கு இந்த அரசின் தலைமைமீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்றால், அது புரட்சித் தலைவி அவர்கள் பெயரிலே ஒரு மாபெரும், (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட எதிர்பார்ப்பற்ற ஒரு நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு நம்பிக்கை இருந்தது. அதற்குப் பின்னாலே அதைவிட பன்மடங்கு நம்பிக்கை பெற்று, பன்முகத் தோற்றமாய் இன்றைக்குப் புரட்சித் தலைவி பரிணமித்திருக்கிறார்.

சாதாரணமாக, அடித்தளத்து மக்கள் வருகிறபோது நீங்கள் போய் இதை அம்மாவிடம் சொல்லுங்கள், அம்மா செய்வார்கள். அவர்கள் சொல்வதெல்லாம், அவர்களுடைய பார்வைக்கு, அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போங்கள். அவர்கள் அதைச் செய்வார்கள். ஆகவே, இதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போக

வேண்டும், பார்வைக்குக் கொண்டு போக வேண்டும், அவர்களுடைய கருத்திற்கு இது போக வேண்டும் என்று விரும்புகிறவர்களாகத்தான் இன்றைக்கு ஏழையெளிய மக்கள், அடித்தளத்து மக்களைப் பார்க்கிறபோது, அவர்கள் சொல்கிற அந்த நம்பிக்கை இருக்கிறதே ஒரு அரசின் அடித்தளம் அந்த நம்பிக்கை. அந்த நம்பிக்கையை இன்றைக்கு ஏழையெளிய, நலிந்த மக்களுக்கு, கிராமப்புற மக்களுக்கு இந்த அரசு தோற்றுவித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட நம்பிக்கை இந்த நிதிநிலை அறிக்கையிலே வரிக்கு வரி புலப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிட மக்களுக்கான ஒரு அடித்தளத்து பிரதிநிதியாக நான் ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 12—45

கடந்த காலங்களிலே SCP என்று சொல்லப்படுகிற Special Component Plan இருக்கிறதே, சிறப்புக் கூறுத் திட்டம், இந்த சிறப்புக் கூறுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள், நடைமுறைப்படுத்துங்கள் என்று ஆதி திராவிட மக்கள், ஏன், நலிந்த மக்கள், ஏன், பல கருத்தரங்குகளில் படித்தவர்கள், அதிலே இருக்கிற கொஞ்சம் விவரம் தெரிந்த நாங்கள் கேட்டுக்கொண்டேயிருந்தோம். ஆனால் அந்த SCP பணம் செம்மொழி மாநாட்டுக்காகத் திசை திருப்பப்பட்டது, தலைமைச் செயலகம் கட்டுவதற்காகத் திசை திருப்பப்பட்டது, சிறப்புக் கூறுத் திட்டத்தின் பணம் இப்படியெல்லாம் பயன்படுத்தப்பட்டது. டெல்லியிலேகூட காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு, அது திசை திருப்பப்பட்டு, பத்திரிகைகளில் வெளியானதை நாம் பார்த்திருக்கிறோம். அப்படிச் சந்தி சிரித்தது. ஆனால் இன்றைக்கு எடுத்த எடுப்பிலேயே ஆதி திராவிடர்களுக்கான அறிவிப்பிலேயே நாங்கள் 5,007 கோடி ரூபாயை, ஒடுக்கப்பட்ட ஆதி திராவிட மக்களின் நலனுக்காக ஒதுக்கியிருக்கிறோம். இது இந்த மக்கள் தொகை விகிதாச்சாரப்படி 21.7 சதவீதம் (மேசைத் தட்டும் ஒலி) இந்தத் திட்ட மதிப்பீட்டிலே இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அரசு இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, ஆதி திராவிடர்களுக்கு 18 விழுக்காடும், மலைவாழ் மக்களுக்கு 1 விழுக்காடும் என 19 விழுக்காடு வழங்குவதைத்தான் நடைமுறையிலே வைத்திருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்திலே, மக்கள் தொகை



உயர்ந்திருக்கிறது, அதற்காக ஆதி திராவிட மக்களுக்கு 1 சதவீதம் கூட்ட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. இந்தத் துறையே தீர்மானித்து அன்றைக்கு அமைச்சரவைக்குப் பரிந்துரை செய்தது. ஆனால், அன்றைய தி.மு.க அமைச்சரவை அதை அப்படியே புறந்தள்ளி, அமைச்சரவையின் தீர்மானத்திலே, அதை உயர்த்தவே இல்லை. ஆனால், நாங்கள் கேட்காமலேயே இன்றைக்கு 21.7 சதவீதம் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய மக்கள் தொகைக்கேற்ப நம்முடைய திட்ட மதிப்பீட்டில் 19 சதவீதம் ஒதுக்கியிருக்கலாம். ஏனென்றால், 19 சதவீதம்தான் பின்பற்றப்படுகிற மரபாக இருக்கிறது. 19 சதவீதத்திற்கும் மேலே, இருக்கிற மக்கள் தொகைக்கேற்ப 21.7 சதவீதம் என்று உயர்த்தி இருக்கிறார்கள் என்கிறபோது, அதுதான் புரட்சித் தலைவியுடைய அரசு தாயுள்ளத்தோடு தமிழக மக்களை, கோட்டையிலே உட்கார்ந்து கொண்டிருந்தாலும், குடிசை மக்களுக்காக நான் குரல் கொடுப்பேன், உங்களின் குரலாக நான் இருப்பேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற அந்த உணர்வோடு அமல்படுத்துகிற அந்தப் பாங்கு——பல வகைகளிலே அவர்கள் கவனத்திற்குக் கொண்டு போனாலும், எப்படியெல்லாம் நிறைவேறியிருக்கிறது என்பதற்கு ஏராளமான—அதனால் தான் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். இந்த என்னுடைய அரசியல் வாழ்விலே அவர்கள் முதலமைச்சராக இருக்கிறபோதெல்லாம் இந்தச் சட்டமன்றத்திலேயிருந்து அவரிடம் கேட்டுப் பெற்று, கேட்காமலும் பெற்று ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக வந்திருக்கிறோம் என்பதுதான், என்னுடைய அரசியல் வாழ்விலேகூட நான் அதை ஒரு பெருமையாகக் கருதுகிறேன். அப்படிப்பட்ட முதலமைச்சரை நாம் இன்றைக்குப் பெற்றிருக்கிறோம்.

கடந்த காலங்களிலே, கடந்த ஆட்சியிலே ஆதி திராவிடர்களுக்கு நலத் திட்டங்கள் என்ற பெயரிலே எப்படிப்பட்ட கொடுமைகளை நிறைவேறின என்பதற்கு நான் ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். சிங்காரச் சென்னை என்றார்கள். சிங்காரச் சென்னை என்று எதைச் செய்தார்கள் தெரியுமா? பிளாட்பாரம் இருக்கிறதே, நடைவழிப் பாதைகள், அந்த நடைவழிப் பாதைகளிலே இருக்கிற இலட்சக்கணக்கான அடித்தளத்து மக்களை, ஆதரவற்ற அனாதைகளை வெளியேற்றினார்கள். அதற்குப் பெயர் சிங்காரச் சென்னை. பிளாட்பாரம்வாசிகளுடைய வாழ்க்கையைப் பறித்தார்கள். அவர்கள் வாழ்வாதாரத்தை அழித்தார்கள். நடைபாதைக் கடைகளை, நடைபாதையில் இருக்கிற குடிசைகளை,

இவற்றை அப்புறப்படுத்தினார்கள் அதுதான் சிங்காரச் சென்னை என்றார்கள். கூவம் சீரமைப்பு என்றார்கள். கூவம் சீரமைப்பு என்ற ஒன்றைச் சொல்லி, கூவம் நதிக்கரை ஓரத்திலே இருக்கிற குடிசைககளிலே வாழ்ந்தவர்களையெல்லாம் வெளியேற்றினார்கள். அவர்களே சொன்னது, 72 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களைக் கூவம் நதி சீரமைப்பிற்காக இந்த அரசு வெளியேற்றும். இதில் என்ன பெருமை? இதில் என்ன அவர்களுக்குப் பெரிய பெருமை, என்ன மகிழ்ச்சிக்குரியது? 72 ஆயிரம் குடும்பங்கள் என்றால், ஒரு தலித் குடும்பத்தில், ஒரு குடும்பத்திற்கு மூன்று பேர் என்று வைத்தாலும்கூட 2 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களை அன்றைக்கு அவர்கள் எல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்கு அளிப்பார்கள் என்ற ஒரே எண்ணத்திற்காக அவர்களையெல்லாம் வெளியேற்றினார்கள். 72 ஆயிரம் குடும்பங்கள் என்று சொல்லி கூவம் நதி சீரமைப்பு. கூவத்திலே நாங்கள் படகு ஓட்டுவோம். இதையே சொல்லிக் கொண்டிருந்தார்களே தவிர படகு ஓட்டினார்களா? கூவம் நதி சீரமைப்பின் பெயரிலே அவர்களுடைய கோட்டை வீடுகளை, பங்களாக்களைச் சீரமைத்துக் கொண்டார்களே தவிர, வேறு என்ன செய்தார்கள்? அதற்கு மேலே அதிவிரைவு இரயில் திட்டம்—அதிவிரைவு தொடர் வண்டித் திட்டம் என்று ஒரு திட்டத்தைச் சென்னையிலே கொண்டு வந்தார்கள். சென்னையில் இருக்கிற திட்டம் என்பதால் சொல்கிறேன், கொண்டு வந்தார்கள். இதற்கு 9 கி.மீ. என்று சொன்னார்கள். இங்கே துறைமுகத்திலே தொடங்கி மதுரவாயல் வரை அந்த அதிவிரைவு இரயில் திட்டம் வரும், 9 கி.மீ. இருக்கும் என்று சொன்னார்கள். 2007—ல் 9 கி.மீ.; 2009—லே அது 19 கி.மீ. ஆகிவிட்டது. இரண்டாண்டுக் காலத்தில் 10 கிலோ மீட்டர் நீடித்துவிட்டது. 9 கிலோ மீட்டர் என்றும், 900 கோடி ரூபாய் என்று ஆரம்பித்து, அது 19 கிலோ மீட்டராகி, ரூ.1,200/— கோடியாகி, ரூ.1,650/— கோடியாகி, என்ன செய்தார்கள்? இதனால் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட குடிசைகளை கண்ணகி நகருக்கு அனுப்பினார்கள். 30 கிலோ மீட்டர் தொலைவிலே புறநகரிலே அவர்களைத் தள்ளினார்கள்.

பிற்பகல் 12—50

அந்த வேலையைத் தொடங்குவதற்கு முன்னால், அடிக்கல் நாட்டிய அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கு முன்னால், அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளராக விளங்கிய, நலிந்த மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரம் புரட்சித் தலைவி அம்மா



அவர்களுடைய பார்வைக்கு இதைக் கொண்டு சென்றபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் களம் இறங்கிய பிறகே அந்தப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டன. அந்த அதிவிரைவு இரயில் திட்டம் அப்படியே நிறுத்திவைக்கப்பட்டது. அந்தக் குடிசைகளுக்கெல்லாம் இன்றைக்குப் பாதுகாப்பு கிடைத்திருக்கிறது. 900 கோடி ரூபாய் 1,650 கோடி ரூபாயாகவும், 9 கிலோ மீட்டர் இன்றைக்கு 19 கிலோ மீட்டராகவும் மாறியதற்குக் காரணம் என்ன? வழியில் இருந்த மாட மாளிகைகளையெல்லாம் ஆட்சிக் கட்டிலில் இருந்தவர்கள் விலைக்கு வாங்கினார்கள், அல்லது ஏற்கெனவே விலைக்கு வாங்கியதனாலே அந்தப் பாதை திருப்பப்பட்டு, திருப்பப்பட்டு, திருப்பப்பட்டு, அந்த பங்களாக்களைப் பாதுகாப்பதற்கு, அந்தக் கோட்டைச் சுவர்களைப் பாதுகாப்பதற்கு, அன்று ஆட்சி அதிகாரத்திலே இருந்த, அதற்குத் துணை நின்றவர்களைப் பாதுகாப்பதற்கு, அதிலே பங்கு பெறுவதற்காக அவையெல்லாம் மாற்றப்பட்டு, கூவம் நதிக்கரை ஓரமாகவே அந்த அதிவிரைவு இரயில் பாதை இப்பொழுது போகிறது. சென்னையில் மட்டும் நூற்றுக்கணக்கான ஆதி திராவிட மக்களின் குடியிருப்புகள் அதற்காக அகற்றப்பட வேண்டுமென்று புல்டோசர்கள் வைத்து இடித்தார்கள். அதி.மு.க. களம் இறங்கிய பிறகு, பொதுச் செயலாளராக இருந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிக்கைக்குப் பிறகு, அது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம்கூட நீங்கள் விசாரணையை ஏற்படுத்துகின்றபொழுது விசாரிக்கவேண்டும் என்ற என்னுடைய பணிவான உணர்வினை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதைப்போலவே, சட்டத்தைக்கூட தூக்கி எறிந்த காலம் கடந்த தி.மு.க. ஆட்சியினுடைய காலம். தலித்துகளின்மீது நடவடிக்கை எடுப்பதில், முழு இலக்கணமாக அந்தக் காலம் இருந்தது. ஒரு பல்கலைக்கழகத் துணை வேந்தர் இந்த மன்றத்திலிருந்த ஒரு சட்டமன்ற உறுப்பினரால் அவருடைய அலுவலகத்திலேயே ஓட, ஓட விரட்டியடிக்கப்பட்டார். அன்றைக்கு ஆபத்பாந்தவனாக அதற்குக் குரல் கொடுத்ததும் அன்றைக்குப் பொதுச் செயலாளராக இருந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் காளியப்பன், நெல்லை மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணை வேந்தர், அவருடைய அலுவலகத்திலேயே, ஒரு ஒடுக்கப்பட்ட தலித், ஒரு சட்டமன்ற உறுப்பினரால் அவருக்கு மரியாதை செய்யவில்லை, மரியாதையாக அழைப்பு தரவில்லை என்பதற்காக அலுவலகத்திலேயே ஓட, ஓட

விரட்டியடிக்கப்பட்டார். பல்கலைக்கழகத் துணை வேந்தராகவே போயஸ் கார்டனுக்கு வந்து சந்தித்தார். அவருக்கு அன்றைக்கு ஆபத்பாந்தவனாக இருந்தது, புகலிடமாக இருந்தது போயஸ் கார்டன்.

இதைப்போலவே, ஒரு கலர் டிவி. யை தான் சொன்னவருக்கு வழங்கவில்லை என்பதற்காக நாகர்கோவிலிலே ஒரு அமைச்சர், ஆளும் கட்சியினுடைய அமைச்சர் ஒரு தலித் அதிகாரியை, D.R.O.–ஆக இருந்தவரை, பொதுக்கூட்ட மேடையிலேயே கூப்பிட்டு இழித்துப் பேசி, அவரைச் சுற்றுலா மாளிகைக்கு வரச்சொல்லி, அவரைத் தாக்கி, அமைச்சர் பெயரிலேயே மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்ட காவல் துறை அதிகாரியும் அன்றைக்கு வழக்குப் பதிவு செய்து, வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்து, பதிவு செய்த வழக்கை ஓராண்டு காலத்திலே மாண்புமிகு முதலமைச்சர் பகிரங்கமாக அன்றைக்குக் கருத்து சொன்னதற்குப் பிறகு, அவர் அதில் தலையிட்டிருக்க மாட்டார் என்று கருதுகிறேன் என்று வெளிப்படையாக, அந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டதற்குப் பின்னால், மாண்புமிகு முதலமைச்சர் கருத்து சொன்னதற்குப் பிறகு, ஓராண்டு காலத்தில் அந்த வழக்கு நீர்த்துப்போனது.

எங்கே நடக்கும்? P.C.R. ஆணை என்பது, மத்திய வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் என்பது தேசிய அளவிலான ஒரு சட்டம். அந்த அமைச்சருக்காக அந்தச் சட்டமே அன்றைக்குக் காற்றிலே பறந்தது. இன்றைக்கு அப்படியா? எடுத்த எடுப்பிலேயே நாங்கள் என்றைக்கோ வைத்த கோரிக்கையை, தாத்தா இரட்டைமலை சீனிவாசனுடைய பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும், அண்ணல் அம்பேத்கர் அவர்களோடு வட்ட மேசை மாநாட்டிற்குப்போன இரட்டைமலை சீனிவாசனுடைய நினைவு மண்டபத்தை ஏற்படுத்தியதோடு, அவருடைய பிறந்த நாள் விழாவை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும் என்று நாங்கள் என்றைக்கோ வைத்த கோரிக்கையை நினைவில் வைத்திருந்து, இன்றைக்குப் புரட்சித் தலைவி அரசு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையெல்லாம் அந்த நினைவு மண்டபத்திற்கு அனுப்பி அஞ்சலி செலுத்த வைத்தார்களே, ஆகவேதான் அடித்தளத்து மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கிறார் என்பதனாலேதான், நான் சில கோரிக்கைகளை மட்டும் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.



பிற்பகல் 12–55

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991 முதல் 1996 வரையிலே இந்த மாமன்றத்திலே முதலமைச்சராக இருந்தபோது ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்கள். தலித் மக்கள், நலிந்த மக்கள் இரண்டு ஏக்கர் நிலம் வாங்குவார்களேயானால், அவர்கள் எவ்வளவு விலைக்கு வாங்குகிறார்களோ அதில் இரண்டு இலட்சம் ரூபாய் மானியத்தோடு நாங்கள் நிதியுதவி தருவோம், கடன் தருவோம் என்கிற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். ஆனால், அந்தத் திட்டத்தை, அதற்குப் பின்னாலே வந்த அரசு, கிடப்பிலே போட்டுவிட்டது. அந்தத் திட்டம் மட்டும் நிறைவேறியிருந்தால், இன்றைக்கு ஒடுக்கப்பட்ட மக்கள், மண்ணின் சொந்தக்காரர்கள், மண்ணின் மைந்தர்கள் மீண்டும் அவர்கள் நிலம் பெற்று உழுவதற்கான வாய்ப்பு மிகப் பெரிய அளவிலே உருவாகியிருக்கும். சமூகப் புரட்சிக்கு எடுத்துக்காட்டான ஒரு திட்டம், அந்தத் திட்டம். அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

கடந்த தி.மு.க. ஆட்சி பஞ்சமி நில மீட்பு வாரியம் என்று ஒரு வாரியத்தை வைத்தது. அதுவும் எப்போது? கடைசியாக ஆட்சியினுடைய பதவிக் காலம் முடிந்துபோகிற அந்தச் சந்தர்ப்பத்திலே ஒரு மாதத்திற்கு முன்னாலே பஞ்சமி நில மீட்பு வாரியத்தை உருவாக்கியது. அந்தப் பஞ்சமி நில மீட்பு வாரியமும் இன்றைக்குச் செயலிழந்து கிடக்கிறது. அதன் தலைவர்கூட ஏதோ ஒருவகையிலே இறந்துபோனார். ஆக, அப்படிப்பட்ட அந்தப் பஞ்சமி நில மீட்பு வாரியம் இன்றைக்குச் செயலிழந்திருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்குமேயானால், அது சமூகப் புரட்சிக்கு வழிவகுத்திருக்கும். ஆகவே, அந்தத் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டுமென்கிற கோரிக்கையை நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

பிற மாநிலங்களிலே, ஆதி திராவிட மக்களுக்காக சட்டமன்றக் குழுக்கள் இருக்கின்றன. சில மாநிலங்களிலே அப்படிப்பட்ட குழுக்கள் இருக்கின்றன. பாராளுமன்றத்திலேகூட அப்படிப்பட்ட குழுக்கள் இருக்கின்றன. பாராளுமன்றக் குழுக்கள் இருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்களினுடைய நலன்களை, உரிமைகளை,

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2011 ஆகஸ்ட் 11

அவர்களுக்கு இருக்கிற சட்டப் பாதுகாப்புகளை, அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, ஆராய்வதற்காக பிற மாநிலங்களிலே அப்படிப்பட்ட குழுக்கள் இருக்கின்றன. பாராளுமன்றத்திலேயும் அப்படிப்பட்ட குழுக்கள் இருக்கின்றன. நம்முடைய மாநிலத்திலேயும் புரட்சித் தலைவி அவர்களுடைய இந்தப் பொற்கால ஆட்சியிலே அப்படிப்பட்ட ஓர் ஆணையத்தை உருவாக்க வேண்டுமென்கிற வேண்டுகோளையும் நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

இது கல்லூரி மாணவர்கள் அவர்களுடைய படிப்பைத் தொடங்குகிற காலம். பிற மாநிலங்களில் இந்த தலித் மாணவர்களுக்கு, எஸ்சி., எஸ்டி. மாணவர்களுக்கு அவர்கள் சுய உதவிக் கல்லூரிகளிலே, தொழில் கல்லூரிகளிலே சேருகிறபோது, அவர்களுடைய முழுக் கல்விக் கட்டணத்தையும் அரசே ஏற்றுக்கொள்கிறது. இந்தச் சலுகை உத்திரப் பிரதேசத்திலே, ஆந்திராவிலே, கேரளாவிலே, மகாராஷ்டிரா மாநிலத்திலே, இப்படிப்பட்ட பல மாநிலங்களிலேயும் இருக்கின்றன. அதற்கொன்றும் பெரிய அளவிலே செலவழிக்கப் போவதில்லை. மிக அதிகபட்சம் 50 அல்லது 60 கோடி ரூபாய்க்கு மேலே அதற்காக செலவு ஏற்படப் போவதில்லை. எனவே, சுயநிதி தொழிற் கல்வி, ஆசிரியர் பயிற்சி படிக்கிற மாணவர்களுக்கு 35,000 ரூபாய் கட்டணம் என்றால், அதற்கு வங்கிக் கடன்கூட மறுக்கப்படுகிறது. ஆசிரியர் பயிற்சிக்குத் தலித் மாணவர்களுக்கு வங்கிக் கடன் வழங்குவதில்லை. ஆக, அப்படிப்பட்ட நிலையிலே நீங்கள் தாயுள்ளத்தோடு, புதிய தலைமுறையை உருவாக்குவதற்கு, அவர்களுக்குக் கல்விதான் ஆயுதம் என்பதால் ஒடுக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரையிலே, அவர்களுடைய உயர்விற்குக் கல்விதான் ஆயுதம். மிகப்பெரிய ஆயுதம், மிகப் பெரிய படிக்கல், மிகப் பெரிய ஏணி அவர்களுக்குக் கல்விதான். ஆகவே, இந்தக் கல்விக் கட்டணத்தை மட்டும் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உரையைச் சீக்கிரம் முடித்துவிடுங்கள். இன்னும் மாண்புமிகு உறுப்பினர்கள் 7 பேர் பேச வேண்டும். இன்னும் இரண்டு நிமிடங்களில் உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** இதோ உரையை முடித்துவிடுகிறேன். இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன்.



2011 ஆகஸ்ட் 11] [முனைவர் செ.கு. தமிழரசன்]

அதைப்போலவே, தென்பகுதி ஒடுக்கப்பட்ட மக்களிடையே ஒரு நீண்டநாள் கோரிக்கை இருக்கிறது. மாவீரன் இம்மானுவேல் சேகரனுடைய பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டுமென்கிற ஒரு கோரிக்கை இருக்கிறது. அந்தக் கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். வருகிற அக்டோபர் மாதம் 8 ஆம் தேதி மாவீரன் இம்மானுவேல் சேகரனுடைய பிறந்தநாள் வருகிறது. அந்தப் பிறந்த நாளையும் அரசு விழாவாக நீங்கள் அறிவிக்க வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையையும் தென் பகுதி மக்களின் சார்பாக நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதிப் பிரச்சினைகளை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். நேற்றைக்குக்கூட, சிவகாசியிலே ஒரு பட்டாசுத் தொழிற்சாலையிலே இறந்தவர்களுக்கு நம்முடைய போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இறந்தவர்களுடைய குடும்பங்களின் வாழ்வுக்கு நிதியளித்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே ஏராளமான தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அது குடிசைத் தொழிலாக இருக்கிறது. ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலையிலே கடந்த மாதம் தீ விபத்து ஏற்பட்டு, அதிலே 9 பெண்கள் எரிந்து கருகியதில் 4 பேர் இறந்துபோக, மீதி 5 பேர் இன்னும் மருத்துவமனையிலே உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்தபோது, உடனடியாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களையும், மருத்துவமனைக்கு அனுப்பி, காவல் துறையினுடைய உயர் அதிகாரிகளெல்லாம் அங்கே வந்து, தீயணைப்புத் துறையினுடைய அதிகாரிகளெல்லாம் அங்கே வந்து பார்வையிட்டு, பரிந்துரை அனுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அந்தத் தீ விபத்திலே மறைந்த 4 பெண்மணிகளினுடைய வாரிசுகளுக்கு உதவித் தொகை அல்லது ஏதாவது சிறப்பு ஊக்கத் தொகை வழங்கிட வேண்டுமென்கிற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்திலே கடந்த ஒரு வாரகாலமாக தனியார் பேருந்துகளே ஓடுவதில்லை. என்ன காரணம் என்றால், பள்ளிகொண்டாவிலும், நாட்றாம்பள்ளியிலும், கிருஷ்ணகிரியிலும் இருக்கிற toll gate–ள் சில பன்னாட்டு முதலாளிகளால் இன்றைக்கு

ஏலம் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் ஒரு தனியார் பேருந்துக்கு ஒரு மாதத்திற்கு ரூ.40,000–லிருந்து 60,000 வரையிலே toll–ஆக வசூலிப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஒரு பேருந்துக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 40,000 முதல் 60,000 வரையிலே toll–ஆக வசூலிப்பதற்கு அங்கே ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். ஆகவே, ஒரு வார காலமாக வேலூர் மாவட்டத்திலே ஏறக்குறைய 65 தனியார் பேருந்துகள் இயங்காமல் அங்கேயே நிறுத்தி வைத்து வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, வேலூர் மாவட்டத்திலே இருக்கிற இந்த நிலையை உடனடியாக அன்புகூர்ந்து அம்மா அவர்களுடைய பரிசீலனைக்குக் கொண்டு போங்கள் என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டோல் வசூல் செய்வது குறித்து பேருந்துகளினுடைய உரிமையாளர்களும், லாரி உரிமையாளர்களும் மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். இதில் தமிழகத்தைப் பொறுத்தவரை, 4,500 கி.மீ. என்பது கடந்த காலத்தில் மத்திய அமைச்சராக இருந்த திரு. டி.ஆர். பாலு அவர்களால், தனியாருக்கு அந்தச் சாலைகள் தாரை வார்க்கப்பட்டு, அதன்மூலம் ஒரு நாளைக்கு ஒரு முறை கட்டணம் என்பது ஒவ்வொரு நடைக்கும் கட்டணம் வசூலிப்பதை நடைமுறைப்படுத்துகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று–இதில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது–இதன்மீது விரைவில் நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள். (குறுக்கீடு) முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு தமிழரசன்:** அதைப்போல, இலட்சக்கணக்கான மாணவர்களுக்குப் புரட்சித் தலைவி அம்மா அரசு மடிக்கணினி. . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.



**முனைவர் செ.கு தமிழரசன்:** அவ்வளவுதான் பேச்சை முடித்து விடுகிறேன். அறிவித்திருக்கிறார்கள். அதுபோல் இங்கே இருக்கிற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இப்போது மின் அஞ்சல் முகவரியை நம்முடைய சட்டமன்றத் துறையே ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் தமிழரசன், உங்களுக்கு ஒதுக்கப்பட்டது 10 நிமிடங்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் மேலும் 5 நிமிடங்களுக்குப் பரிந்துரை செய்தார்கள். அதன் அடிப்படையில் மேலும் 5 நிமிடங்கள் கொடுக்கப்பட்டு மொத்தம் 21 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**முனைவர் செ.கு தமிழரசன்:** அதுபோல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு மடிக்கணினி தந்தால் அது மகிழ்ச்சியாக இருக்கும் என்பதைக் குறிப்பிட்டு இந்த நிதிநிலை அறிக்கை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதை வாங்கிக் கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் தமிழரசன், அதற்காக நன்றி சொல்லுங்கள்.

**முனைவர் செ.கு தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இந்த அறிவிப்புக்கு என்னுடைய நன்றியையும் பாராட்டையும் தெரிவித்து, இந்த நிதிநிலை அறிக்கை தமிழகத்திலே இன்றைக்கு ஒரு இலக்கணமான அறிக்கை. இந்தியாவிற்கே இப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கையைப் போடுகிற அப்படிப்பட்ட வாய்ப்பும் எதிர்காலமும் இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு உருவாக வேண்டும். இந்திய மக்கள் முழுமையும் இதில் பயனடைய வேண்டும் என்கிற என்னுடைய எதிர்ப்பார்ப்புகளோடு, வாழ்த்துகளோடு வணக்கம் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012–க்கான நிதிநிலை அறிக்கை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் 3 மணி நேரம் இந்த மாமன்றத்திலே விரிவான வரி இல்லாத நிதி நிலை அறிக்கையாக அனைத்து மக்களும் பயன்பெறுகின்ற வகையிலே அறிவித்திருக்கின்றார்கள். அதற்காக எங்களது அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சி பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

தமிழக மக்கள் ஒட்டுமொத்தமாக வாக்களித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மூன்றாவது முறையாக தமிழக மக்கள் தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தச் சிறப்பான வரி இல்லாத நிதிநிலை அறிக்கையை அவர்களுடைய அறிவாற்றலோடு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்றார்கள். அதைப் பாராட்டுகிறோம். இங்கே தேர்தலுக்கு முன்பு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னென்ன தேர்தல் வாக்குறுதிகளைக் கொடுத்திருந்ததோ அந்த அனைத்து வாக்குறுதிகளுக்கும் 9,500 கோடி ரூபாயை ஒதுக்கி சிறப்புச் செய்திருக்கின்றார்கள். அவர்கள் தேர்தல் வாக்குறுதியாகக் கொடுக்காத திட்டங்களையும் இங்கே நிறைவேற்றி மகிழ்ந்திருக்கின்றார்கள். 173.87 கோடி ரூபாயை வருவாய் உபரியாகவும் அறிவித்திருப்பதைத் தமிழக மக்களால், அனைத்துப் பிரிவு மக்களாலும் போற்றப்படுகின்ற நிதிநிலை அறிக்கையாக இது இருக்கிறது. அதனால் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் முதல்வர்கள் இருக்கிறார்கள். அதிலும் பெண் முதல்வர்களும் இருக்கிறார்கள். ஆனால் அமெரிக்க நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு ஹிலாரி கிளிண்டன் அவர்கள் தமிழகம் வந்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைச் சந்தித்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்குக் காரணம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சித் திறனை உலக மக்கள் அனைவருமே உற்று நோக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் அர்த்தம் என்பதை இந்த நேரத்தில் தெளிவுப்படுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



தமிழக அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தமிழகத்தில் அனைவருமே கல்வி கற்றவர்களாக இருக்க வேண்டுமென்ற பெருந்தன்மையான நோக்கத்தோடு இதுவரை கல்வி கல்லாத சிறுவர்கள் 56,113 பேர் என்று கணக்கிட்டு, இந்த முறை அவர்களையும் படிக்க வைப்போம், தமிழகம் முழுவதும் படித்தவர்களாகவே இருக்க வேண்டுமென்ற சிறந்த நோக்கத்தோடு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இடை நிற்றலைத் தடுக்கும் வண்ணம் 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 1,500 ரூபாயும், 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 2,000 ரூபாயும் ஊக்கத் தொகையாகக் கொடுத்திருப்பது உண்மையிலேயே பாராட்டுக்குரியது என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எங்களது, அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி சார்பில் பள்ளியில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் காலணிகள் வழங்க வேண்டுமென்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை நாங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அதை மாண்புமிகு முதல்வர் கனிவுடன் பரிசீலனை செய்து அதையும் வழங்க முடிவு செய்திருப்பதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எங்களது உசிலம்பட்டி தொகுதியில் பெண்களுக்குத் தனியாகப் பள்ளிக்கூடங்கள் இல்லை, கல்லூரிகள் இல்லை. பொதுவாக, உசிலம்பட்டி பகுதி பெண் சிசுக் கொலை நடப்பதாகச் சொல்லப்படுகின்ற பகுதி. அந்தப் பகுதியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெண்களுக்கென்று அரசு பெண்கள் பள்ளியும், அரசு கலைக் கல்லூரியும் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளர் சீரமைப்புத் துறையின்கீழ் இயங்கும் மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் இயங்கி வரும் பள்ளிகளில் மூன்று தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 3 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தி இந்த அரசு ஆணையிட்டிருக்கிறது. அதேநேரத்தில், மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகாவில் உள்ள கள்ளப்பட்டியில் உள்ள உயர்நிலைப் பள்ளியையும் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்றும் இந்த அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பள்ளிகளைப் பராமரிப்பதற்கு ஆண்டுக்கு 4 இலட்சம் ரூபாயாக இருந்து வந்ததை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூபாய் ஒரு கோடியாக உயர்த்தித் தந்துள்ளதை எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி பாராட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் பாலர் பள்ளிகளுடன்கூடிய 15 ஆங்கிலப் பள்ளிகள் தொடங்கவும் இந்த அரசு உத்தரவிட்டிருப்பதை, முதன்முதலாக இதுவரையில் இல்லாத ஒரு திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்கு நாங்கள் பெருமையோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். கள்ளர் சீரமைப்புத் துறையில் உள்ள பள்ளிகளுக்கு 52 கோடி ரூபாயை ஒதுக்கிப் பெருமை சேர்த்தமைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களை நாங்கள் பெருமையோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளர் மக்கள் கல்வி ரீதியாகவும், சீர் மரபினர் மக்கள் கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பின்தங்கியுள்ளார்கள் என்பதற்காக அன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அனைவரையும் உண்ணாவிரதம் இருக்கச் சொல்லி ஆணையிட்டிருந்தார்கள். சீர்மரபினர்களுக்கு நல வாரியம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அந்த அடிப்படையிலே, அம்மா அவர்கள் அறிவித்த அடுத்த நாளே தி.மு.க. அரசு சீர் மரபினர் நல வாரியம் என்று பெயருக்கு ஒரு வாரியத்தை அமைத்தார்கள். அதில் எந்தவிதப் பயனும் இல்லாமல், கடந்த நான்கு ஆண்டுகளாக எந்தப் பயனும் இல்லாமல் இருக்கிறது. அந்த மக்கள் கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வளர்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தச் சிறப்புத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு வேளாண்மைத் துறையில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்துகின்றவகையில் முனைந்திருக்கிறது. அது பாராட்டுக்குரியது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் வாயிலாக விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடனுக்காக மூன்று ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை நாங்கள் பாராட்டுகிறோம்.



குறிப்பாக, உசிலம்பட்டி தொகுதியின் ஒரு பகுதியிலே பூக்கள் அதிகமாகப் பயிரிடுகிறார்கள். அந்தப் பூக்களுக்குச் சில நேரங்களில் விலை இல்லாமல் போகின்றது. எனவே, அந்தப் பகுதியில் ஒரு பதனிடும் தொழிற்சாலையை அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு அணைக்கட்டு புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 745.49 கோடி ஒதுக்கியிருக்கின்றது. எங்களது உசிலம்பட்டி தொகுதியில் 1999 ஆம் ஆண்டு அன்றையதினம் சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. பி.என். வல்லரசு அவர்கள், 58 கிராமக் கால்வாய்த் திட்டம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு அன்றையதினம் தி.மு.க. அரசு 33 கோடி ரூபாயை அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கியது. ஆனால், அந்தத் திட்டம் நடைபெறாமல் இருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த முறை முதலமைச்சராக இருந்தபொழுது அதை 74.5 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுத்தார்கள். கடந்த 5 ஆண்டுகளாக அதில் எந்த வேலையும் நடைபெறவில்லை. இந்தத் திட்டம் கிட்டத்தட்ட 12 ஆண்டுகளாக இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. கடந்த வாரம், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு நாங்களும் சேர்ந்து அந்தத் திட்டத்தைப் பார்வையிட்டோம். அதில் 90 சதவீதம் வேலைகள் நடைபெற்று முடிந்திருக்கின்றன.. அதை முடிக்க வேண்டுமென்றால், இன்னும் 8 கோடி ரூபாய் தேவைப்படுகிறது என்று பொறியாளர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே, அந்த நிதியை ஒதுக்கி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த 58 கிராமக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உசிலம்பட்டி தொகுதியில் எங்கள் பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் எல்லாம் வானம் பார்த்த பூமியாக இருக்கின்றன. விவசாயிகள் அனைவருமே கிணற்றை நம்பியிருக்கின்றார்கள். அந்தப் பகுதியில் தி.மு.க. ஆட்சியில், கடந்த 5 ஆண்டுக்காலமாக மின்வெட்டு, மின்வெட்டு என்று சொல்லி, விவசாயத்திற்குப் போட்ட பணத்தையும் இழந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே எங்கள் உசிலம்பட்டி தொகுதியில் உள்ள வாலாந்தூர், இடையப்பட்டி,

[திரு. பி.வி. கதிரவன்] [2011 ஆகஸ்ட் 11

கல்யாணிப்பட்டி போன்ற பகுதிகளில் 110 கேவி. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறையின் சார்பில் இங்கே தமிழக அரசு பல திட்டங்களை அறிவித்திருக்கின்றது. எங்களது தொகுதியில் சேடப்பட்டி பகுதியில் ஏற்கெனவே SIPCOT– அமைக்க நிலங்கள் எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதியிலுள்ள காய்ந்த நிலங்கள், வறண்ட நிலங்களை முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் எடுத்திருக்கின்றார்கள். அது இன்னும் நிறைவு பெறாமல் அப்படியே இருந்து வருகிறது. அதையும் இந்த முறை SIPCOT மூலம் எடுத்து அந்தப் பகுதிக்குத் தொழில் வளத்தைக் கொண்டு வரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் சிறு, குறு செங்கல் காளவாசல்கள் அதிகமாக இருக்கின்றன. உசிலம்பட்டி தொகுதியில் தொழிற்சாலை என்று எதுவும் இல்லை. செங்கல் சூளைகளை அந்தப் பகுதிகளில் நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு வங்கிகளில் கடன் கொடுக்கின்ற வசதியைப் பெற்றுத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுவரை எந்த வங்கியும் கடன் கொடுக்க முன்வரவில்லை. அதையும் பெற்றுத் தரவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொண்டு, முற்றிலும், அனைத்து மக்களும் பாராட்டுகின்ற, சிறப்பு மிகுந்த நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பாராட்டுதலையும், வாழ்த்துகளையும் சொல்லி, நன்றிகூறி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறித்த நேரத்தில் உரையை முடித்ததற்காக உங்களுக்கு நன்றி. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறவழியில் மக்களின் உணர்வுகளை, உரிமைகளைப் பிரதிபலிக்கும் அரசியல் சமூக இயக்கமான எமது தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவையையும், சட்டமன்றப் பொதுத் தேர்தலில் சுமார் 32 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்த, சீர்மிகு தமிழ்நாட்டின் ஆட்சித் துறைத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், அனைத்துத் தோழமைக் கட்சி நிர்வாகிகளுக்கும், அனைத்துத் தொலைக்காட்சி, பத்திரிகைத் துறை நண்பர்களுக்கும், தன்மானமும், சுயமரியாதையும் உள்ள கௌரவமான பரமத்தி



2011 ஆகஸ்ட் 11] [திரு. உ. தனியரசு]

வேலூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் முதற்கண் எமது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, உலகத்து நாடுகளும், ஏடுகளும் வியந்து புகழும் 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் செயல் திட்ட அறிக்கை நம் நாட்டில் வாழும் வகை வகையான மக்களின் தேவைகளை, விருப்பங்களை, உணர்வுகளை விரைந்து, துல்லியமாக அறிந்து நம் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் சமூகத்தை ஆய்வு செய்து, ஏற்றம் பல செய்ய அரசியலில், மானுடவியலில் தலைசிறந்த விஞ்ஞானியாக, சக மானுட சமூகம் உணர்ந்திடும் வகையில் பலவகைப்பட்ட மக்களுக்கும் திட்டத்தின் பயனைப் பாகுபாடு காட்டாமல் பகிர்ந்தளித்து மானுடப் பிறப்பில் அரிய வகைப் பிறப்பானார் நம் முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) நம் முதல்வர் அம்மா அவர்கள் வாழும் காலத்தில் நாமும் வாழ்கிறோம் என்பதே பெருமைக்குரியது என்றாலும் அவர் ஆளும், தமிழ் நாடாளும் மன்றத்தில் உடன் அமர்ந்து, மக்கள் வாழ்வு செழிக்கப் பணிசெய்யும் வாய்ப்பை நானும் பெற்றதனால் வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பாகவே நான் இதைக் கருதி எம் பணி தொடர்கிறேன் அம்மா.

பிற்பகல் 1–15

இந்த நிதிநிலை அறிக்கையில் ஏறத்தாழ நாட்டுமக்கள் அனைவருக்கும் உணவுக்கு அரிசி, அதாவது பசிக்குச் சோறு. மனிதனுக்கு மிக அடிப்படையானது உணவு. அதைத் தந்தாகிவிட்டது. தாலிக்குத் தங்கம், திருமணச் செலவுக்குப் பணம், முதியோர், ஊனமுற்றோர், ஆதரவற்றவர்களின் வாழ்வுதவிக்கு மாதம் 1,000 ரூபாய் பணம். சட்டம்–ஒழுங்கைக் காக்க சார்–ஆய்வாளர்கள் சுமார் 900 பேர், சுமார் 1,000 காவலர்கள் பணியிடங்களை நிரப்புவது, நீதி நிருவாகத்தில் தேங்கியுள்ள வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைக்க மாற்றுமுறைத் தீர்வு மையங்களை ஏற்படுத்துவது, 2011–2012 ஆம் ஆண்டில் உரிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவோருக்கு வட்டியில்லாக் கடனாக ரூ.3,000 கோடி வழங்கும் திட்டம், சிறு, குறு விவசாய நுண்ணுயிர்ப் பாசனம் அமைத்திட 100 விழுக்காடு மானியம் வழங்கப்படுவது, ஆடு, மாடு தந்து கறவை மாடு தந்து, ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரத்தைக் காக்கும் திட்டம், நடமாடும் கால்நடை மருத்துவ மையம் செயல்பட ஏற்பாடு செய்தது, மீனவர் நலன் காக்க பல திட்டங்கள், கச்சத் தீவை மீட்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பது, நம் மாநில நதிகளை இணைக்க நடவடிக்கை எடுத்திருப்பது, மின் உற்பத்தியைப் பெருக்க துரித நடவடிக்கை மேற்கொண்டிருப்பது, மேல் கல்வி பயிலும் மாணவ,

மாணவிகளின் இடைநிற்றலைத் தடுக்க வைப்புத் தொகை செலுத்தியது, 2012–2013 ஆம் ஆண்டு பள்ளிக் குழந்தைகளுக்கு 4 செட் சீருடைகள் வழங்குவது, அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டம், கிராமப்புறங்களில் வாழும் இளம் பெண்களுக்கு சானிட்டரி நாப்கின் இலவசமாக நம் அம்மா அரசு வழங்கவிருப்பது, பொதுக் காப்பீட்டுத் திட்டத்தினை விரிவுபடுத்தி மக்கள் கூடுதலாகப் பயன் பெற வழி செய்தது, மாணவ, மாணவியருக்கு உணவுப் படி முன்பைவிட 200 ரூபாய் சேர்த்து வழங்குவது, தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும் அரசின் திட்டங்களின் பயனைப் பெற தகுதியாக்கியது, 2011–2012 ஆம் நிதிநிலை அறிக்கை முழுவதும் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள், நாட்டு மக்கள் தேவையையெல்லாம் பார்த்துப் பார்த்து நிறைவு செய்யப்பட்டுள்ளது கண்டு உலகம் பாராட்டி மகிழ்கிறது. நானும் எம் இயக்கமும் எண்ணி, எண்ணி மகிழ்ந்து பாராட்டி, எம் தொகுதியின் தேவைகளைக் கோரிக்கையாக முன்வைக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எனது பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதி நகராட்சிகளே இல்லாத தொகுதி. தற்பொழுது பேரூராட்சிகளாக உள்ள வேலூர், பரமத்தி, பொத்தனூர், பாண்டமங்கலம், வெண்கரை இவை தொடர்ச்சியாக இணைந்திருப்பதினால் இப்பேரூராட்சிகளை இணைத்து நகராட்சியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுகிறேன்.

திருமணிமுத்தாறு, ஏற்காடு, சேலம் வழியாக எமது தொகுதியின் மையப் பகுதியின் வழியாக நஞ்சை இடையாறு அருகில் காவிரியாற்றில் இணைகிறது. இதனை முக்கிய நதிகளோடு இணைத்து, நீர் ஆதாரம் பெருக்கி, தொகுதிவாழ் விவசாயப் பெருமக்கள் பயன்பெற ஆவன செய்ய அரசை வேண்டுகிறேன். எனது தொகுதியில் கோப்பனம்பாளையம் கிராம ஊராட்சியில், குடிநீர் வாரியத்தினால் சுமார் 40 இலட்சம் ரூபாய் செலவு செய்து, காவிரி ஆற்றுநீர் பெற குழாய்கள் பதித்து, பணிகள் முடிவடைந்து பல ஆண்டுகள் கடந்தும், இன்னும் ஒரு முறைகூட தண்ணீர் வரவில்லை. இத்திட்டத்தைச் சீர்செய்து, சம்பந்தப்பட்ட ஊராட்சி மக்களுக்கு ஆற்றுநீர் கிடைத்திட ஆவன செய்ய வேண்டுகிறேன்.

பிற்பகல் 1–20

எனது தொகுதியில் வேலூர் முதல் சோழசிராமணி வரை



இயக்கப்பட்ட நகரப் பேருந்து ஜமீன்இளம்பிள்ளை, நல்லகவுண்டன்பாளையம், கரட்டுப்பாளையம், சென்னியம்பாளையம், ஆவாரங்காடு, திடுமல், கவுண்டன்பாளையம் வழியாக சென்று வந்தது. மினிப் பேருந்துகளும் சில ஆண்டுகள் வரை இயங்கி வந்தன. அவையும் தற்போது இயக்கப்படுவது இல்லை. மக்களின் நீண்டகால கோரிக்கையாகவும் முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர், மாண்புமிகு அண்ணன், திரு. செங்கோட்டையன் ஐயா அவர்கள் திறந்து வைத்த இந்த வழித்தடப் பேருந்து, பல ஆண்டுகளாய், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறுத்தப்பட்டிருக்கிறது. அது மீண்டும் அந்த வழியிலே இயக்கப்பட அரசு முன்வர வேண்டுமாய் கேட்கிறேன்.

தொகுதி முழுவதும் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்ட, தாழ்த்தப்பட்ட அருந்ததிய மக்கள் பலர் 10 ஆண்டுகளாய்க் குடியிருந்து வருகின்ற வீடுகள், மேற்கூரைகள் இடிந்து மழைக் காலங்களிலே நீர் கசிந்து, கிராமத்தில் சிரமத்திலே வாழ்கிற இம்மக்களின் தேவைகளைக் களைய நம் அரசை அன்போடு வேண்டுகிறேன்.

எனது தொகுதியை உள்ளடக்கிய நாமக்கல் மாவட்டம் முழுவதும் சுமையுந்து வாகன ஓட்டிகள் அதிகம் என்பதனால், அவர்களுக்கான குறைந்தபட்சக் கல்வித் தகுதியை நீக்கி, தகுதியுள்ள அனைவருக்கும் ஓட்டுநர் உரிமம் வழங்க ஆவன செய்யுமாறு அன்போடு வேண்டுகிறேன். பெரும்பான்மை மக்கள் தரைவிரிப்பிற்காகப் பயன்படுத்தும் பாய், கோரைப் புல் எனது தொகுதியில் அதிகமாகப் பயிர் செய்யப்படுகிறது. இப்பயிர் உற்பத்தியைப் பெருக்கவும் உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்தவும் அரசு ஆவன செய்யுமாறு அன்போடு வேண்டுகிறேன்.

ஜேடர்பாளையம் முதல் நஞ்சை இடையாறு வரை செல்லும் ராஜ வாய்க்கால் நீர் வழித்தடத்தைப் புதுப்பித்து concrete பூச்சுக்கள் re-molding செய்து தரவும் அரசை அன்போடு வேண்டுகிறேன்.

எனது தொகுதி, தரமான வெற்றிலை உற்பத்தியில் முன்னணி வகிக்கும் தொகுதி ஆகும். ஆகவே, வெற்றிலையைப் பயிர் செய்கிற விவசாயப் பெருமக்களுடைய வாழ்வு செழிக்கவும், மங்கலகரமான மதிப்புமிக்கப் பொருளாகக் கருதப்படுகின்ற வெற்றிலை விவசாயத்தைப் பாதுகாக்கும்பொருட்டு, மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி, வெற்றிலை

ஆராய்ச்சி மையத்தை எமது தொகுதியிலே துவக்க ஆவன செய்யுமாறு கேட்கிறேன்.

இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் முந்தைய கருணாநிதி அரசு ஏழை, தாழ்த்தப்பட்ட அருந்ததிய மக்களுக்கு எனது தொகுதியிலுள்ள சேலூர், செல்லம்பாளையத்தில் 10—க்கும் மேற்பட்ட வீடுகளைக் கட்டித் தருவதாகப் பொய் சொல்லி, இடித்துத் தரைமட்டம் செய்து பல மாதங்கள் ஆகியும் (மணியடிக்கப்பெற்றது) வீடுகள் இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. உரிய முயற்சிகள் எதுவும் நடைபெறாமல் முடங்கிக் கிடப்பதால், தற்போது அம்மக்கள் தெருவோரத்தில் ஆடுகளோடும், மரக் கிளைகள் கீழும் வாழ்கின்றார்கள். இவர்களது இடிக்கப்பட்ட வீடுகளை நம் அரசு கட்டித் தர ஆவனசெய்ய வேண்டுகிறேன் (மணியடிக்கப்பெற்றது) ஐயா, இரண்டு நிமிடங்கள். அரசு அலுவல் நிமித்தம் எம் தொகுதிக்கு வரும் அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், தங்கவோ, கூடிச் சந்தித்துப் பேசவோ தகுதியான பயணியர் விடுதி எதுவும் இல்லை. தற்போது இருப்பது மிகவும் பழமையானது. எனவே, புதிய பயணியர் மாளிகை கட்டித் தர மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை மக்கள் வாழ்விடங்களில் அமைக்கப்பட்டிருக்கிற அரசின் பொதுக் கழிப்பிடங்கள் பயன்படுத்தமுடியாத நிலையில் உள்ளன. அவற்றைப் பராமரிக்க வழி செய்து உதவ அரசை வேண்டுகிறேன்.

அம்மா அவர்கள், வாக்குறுதியிலே சொல்லப்பட்ட செய்திகள் எல்லாம், மேதகு ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டு, மேதகு ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டவை எல்லாம் 2011—2012 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு—செலவுத் திட்டத்திலே நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு, நாட்டு மக்களிடத்திலே திட்டங்களாகச் சென்றடைகிற இந்தத் தருவாயிலேதான், அதனுடைய climax, கடைசி தருவாயிலேதான் நாம் இருக்கின்றோம். அப்படி நிதிநிலை அறிக்கையில் செயல் வடிவத் திட்டங்களாக மக்களிடையே சென்றடைய. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள். இன்னும் நிறைய பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. உ. தனியரசு:** எனக்கு நேரம் ரொம்பக் குறைவு அண்ணே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன செய்வது? நேரம்



இல்லை.

**திரு. உ. தனியரசு:** மதிப்புமிக்க இந்த மன்றத்தில் எனது தொகுதியினுடைய கோரிக்கைகளை உடனடியாக நிறைவு செய்தும், real estate என்கின்ற பெயரில் மேற்கு மண்டலங்களிலே நில வணிகர்களிடத்திலே முடங்கிக் கிடக்கிற ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அரசு கையகப்படுத்தி, அரசினுடைய பயன்பாட்டிற்குப் பெற்றுக்கொள்ளவும், தொழிற் பேட்டைகளுக்குப் பெற்றுக்கொள்வதற்கும், பாரம்பரியமாக, பூர்வீக விவசாயிகளிடமிருந்து பெறுவதைவிட, நில வணிகர்களிடமிருந்து நிலத்தைப் பெறுவது அரசுக்கு வசதியாக, இலகுவாக இருக்கும் என்பதனால் அந்தத் திட்டத்தையும் அரசு கவனத்திலே எடுத்துக்கொண்டு பரிசீலிக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—25

பல்வேறு காலக்கட்டங்களிலே என்னுடைய தொகுதியினுடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்மீது பதியப்பட்ட நில மோசடி வழக்கில் புகார் கொடுக்கப்பட்டும். . . (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது அவருக்குக் கன்னி பேச்சு இல்லை. ஏற்கெனவே பேசியிருக்கிறார்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் நன்றி மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கருணாநிதியினுடைய ஆட்சி முடிவுபெற்று, அவருக்குத் தீர்ப்பு வாக்குப் பெட்டிகளிலே தீர்மானிக்கப்பட்ட பிறகு, கடைசி சம்பவமாக, பரமத்தி வேலூரில் சாலை மறியலில் ஈடுபட்டதற்காக நூற்றுக்கணக்கான அப்பாவிகள் கைது செய்யப்பட்டு வழக்குகளிலே சிக்குண்டு கிடக்கிறார்கள்.

நாட்டு மக்கள் அம்மாவினுடைய நலத் திட்டங்களைப் பெற்று மகிழ்வோடு வாழ்கின்ற நிலையில், என்னுடைய தொகுதி மக்கள் மட்டும் வழக்குகளிலே சிக்கி சிரமப்படுவதிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கருணாநிதி ஆட்சியில் புனையப்பட்ட பொய் வழக்குகளையெல்லாம் திரும்பப் பெற்று, என்னுடைய தொகுதி மக்களும், என் இயக்கத்தைச் சார்ந்தவர்களும் மகிழ்வோடு வாழவும் அரசு ஆவன

செய்ய வேண்டுமாய் கேட்டு, இந்த வாய்ப்பைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாமன்றத்தினுடைய உறுப்பினர் பெருமக்களுக்கும் நன்றி பாராட்டி விடைபெறுகிறேன. நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

***திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நேரத்தின் அருமை கருதி பேச வேண்டியிருக்கிறது. எப்பொழுது மணி ஒலிக்கும் என்று தெரியவில்லை. சாப்பிடுவதற்குப் பசியில் உறுப்பினர்கள் வாடிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் 10 நிமிடங்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** ஆகவே, நேரத்தின் அருமை கருதி 10 நிமிடங்கள் என்பதை 45 நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு) இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக, முதலில் சிறப்பான நிதிநிலை அறிக்கையைத் தயாரித்தமைக்கு முதற்கண் என் பாராட்டுதலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை சமூக நலத் திட்டங்கள், வளர்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கி, தேர்தல் சமயத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழக மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி, தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிவகுக்கும் விதமாகத் தொலைநோக்குப் பார்வையுடன் கவனத்தோடும், அக்கறையோடும் இருப்பதை முதற்கண் பாராட்டி வரவேற்கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கை 90 பக்கங்களில் 160 சரத்துகள் உள்ளதாக இருக்கிறது. 160 சரத்துகளில் இந்த 'சரத்' பேச வேண்டுமென்றால் ஒரு நாள் போதாது, இரண்டு நாள் போதாது, ஒரு மாதம் போதாது, ஒரு வருடம் போதாது, அந்த அளவிலே ஒரு சிறப்பான Pro-active Budget என்று சொன்னால், இதைவிட சிறப்பான



ஒரு நிதிநிலை அறிக்கையை யாரும் சமர்ப்பிக்க முடியாது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். "ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பதுபோல முத்தாய்ப்பாக, முதலில் இருண்ட தமிழகத்தை, மின்வெட்டால் இருண்ட தமிழகத்தை மீட்கும் பணியிலே ஈடுபட்டு 2012 ஆகஸ்ட் மாதத்திற்குள் முழுமையாக மின் தடை அகற்றப்படும் என்று சொன்னதை முதலில் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களைப் பட்டியலிட்டுப் பார்த்தால் இந்த அறிக்கையில் திட்டங்கள் எதுவுமில்லை என்று சொல்லி, இந்தச் சபைக்கு வராமல், வாக்களித்த மக்களுக்குத் துரோகம் விளைவித்து, வெளியே அறிக்கையின் மூலமாக அரசியல் நடத்திக்கொண்டிருப்பவர்களைப் பொய்யாக்கும் வகையிலே இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருப்பது குறித்து நான் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டின் தொழில் வளத்திற்கு மின்சார உற்பத்தி மிகவும் அவசியமாகிறது. நமது நாட்டில் இன்று தேவைப்படுகிற மின்சாரம் 2 இலட்சத்து 10 ஆயிரம் மெகா வாட். அது 2030 ஆம் ஆண்டு 9 இலட்சத்து 50 ஆயிரம் மெகா வாட்டாக உயர இருக்கிறது. தமிழகத்தில் பற்றாக்குறை இருப்பதை உணர்ந்து வருங்காலத்தில் பொருளாதார அடிப்படையிலும், தொழில் வளத்திலும் நமது நாடும், நமது மாநிலமும் சிறப்பாக இயங்க வேண்டுமென்கிற அடிப்படையிலே, மின்சாரம் எத்துணை அவசியம் என்பதை உணர்ந்து சிறப்பாக, இந்த நிதிநிலை அறிக்கையிலே மின்சார உற்பத்தியை அதிகரிக்க முடிவுசெய்து 3,800 மெகா வாட் கூடுதல் உற்பத்திக்கு ரூபாய் 22 ஆயிரத்து 800 கோடி முதலீடு செய்வது பாராட்டுக்குரியது. உற்பத்தி எந்த அளவிற்கு அவசியமோ அதுபோல உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை முழுமையாகப் பயன்படுத்துவதும் மிகவும் அவசியம்.

பிற்பகல் 1–30

எனவே, இந்த மின்சாரத் திருட்டு தடுக்கப்பட வேண்டும். மின்சாரத் திருட்டைத் தடுக்க வேண்டுமென்றால், அதற்கென்று ஒரு கண்காணிப்புக் குழு தேவை. அதைச் சிறப்பாகச் சிந்தித்து, மின் திருட்டைக் கண்டுபிடிப்பதற்கும், தடுப்பதற்கும் 5 முன்னாள் படைவீரர்கள் கொண்ட 80 குழுக்களை உருவாக்கியுள்ளது பாராட்டத்தக்கது. எனவே, மின் கசிவு transmission and distribution உபரி பாகங்கள் வாங்குவதற்குக்கூட சென்ற ஆட்சியாளர்களால் ஊழல்

செய்யப்பட்டதன் காரணமாகத்தான் மின் கசிவு ஏற்பட்டுள்ளது என்பதை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். ஒருமுறை, சென்ற ஆட்சியில் இருந்த மின்சாரத் துறை அமைச்சர், எதற்காக மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது என்று கேட்ட கேள்விக்கு, வேடிக்கையாகப் பதிலளித்திருக்கிறார். சரத்குமார் வீட்டிலே 4 ஏ.சி, அதிகமாகப் போட்டுவிட்டார் என்று சொல்லியிருக்கிறார். ஒரு பொறுப்புள்ள மின்சாரத் துறை அமைச்சர் பேசுகிற பேச்சா அது? ஆக, சிறப்பாகச் சிந்தித்து செயல்பட்டு, வருங்காலத்தில் தொழில் வளர்ச்சியில் தமிழகம் முதன்மை மாநிலமாக வருவதற்கு எது தேவையென்று உணர்ந்து, சிறந்த முறையிலே செயலாற்றுகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சூரிய ஒளி, காற்றாலை, பசுமை எரிசக்தியை ஊக்குவித்தல் என்ற பல்வேறு திட்டங்கள் தொலைநோக்குப் பார்வையுடனும், தொழில் முதன்மையடைந்து, பொருளாதார அடிப்படையிலே இந்தியாவில் தமிழகத்தை முதல் மாநிலமாக உருவாக்கவும் திட்டம் தீட்டி இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

> "சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
> உழந்தும் உழவே தலை"

என்ற குறளுக்கேற்ப, தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திடும்வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்ற முயற்சிக்கு என் நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விவசாயம்: உலகத்திலே வருங்காலத்தில் உணவுப் பஞ்சம் ஏற்படுகின்ற சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. காரணம், ஜனத்தொகை அதிகமாகிக் கொண்டிருக்கின்றது. ஆக, மக்கள் தொகை அதிகமாகும்போது தேவைகளும் அதிகமாகின்றன. உணவுத் தேவை அதிகமாகின்ற சூழ்நிலையிலே, விவசாயத்தைப் பெருக்க வேண்டும். நமது நாடு 70 சதவிகிதம் விவசாயத்தை நம்பியிருக்கின்ற ஒரு நாடாகும். விவசாயத்தைப் பெருக்குவதற்குச் சிறந்த திட்டங்களை வகுக்க வேண்டும். விவசாயிகள் சிறப்பாக வாழவேண்டும். விவசாயத் துறைக்கென்று நிதிநிலை அறிக்கையிலே அதிகமான நிதி அளிக்கப்பட வேண்டும். அவர்களுக்குச் சலுகைகள் வழங்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட சிறந்த எண்ணம்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருந்திருக்கிறது.





ஆகவேதான், 2007–2008 ஆம் ஆண்டு உணவு உற்பத்தி 100.35 மெட்ரிக் டன்னாக இருந்தது. படிப்படியாக அது குறைந்து வருகிறது. இதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. அவற்றில் முக்கியமாக கிராமப்புற மக்கள், நகர்ப்புறங்களை நாடிச் செல்வதுதான். The migration of rural population to the urban cities என்று சொல்லலாம். இது தவிர்க்க முடியாதது என்றாலும், விவசாயம் ஒரு இலாபகரமான தொழில் என்பதை நாம் உறுதி செய்யும் வகையிலே அவர்களுக்குச் சலுகைகள் வழங்க வேண்டும். அதை மனதில்கொண்டுதான் வருங்காலத்தில் தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவை உலகத்தின் உணவுக் களஞ்சியம் என்று உருவாக்குவதற்கு சிறந்த முடிவுகளை எடுத்து, திட்டங்களையும் அறிவித்து, அதற்குண்டான சலுகைகளையும் வழங்க வேண்டும் என்ற எண்ணத்திலே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 85.38 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து, 115 இலட்சம் மெட்ரிக் டன்னாக உற்பத்தி இலக்கு நிர்ணயம் செய்ய முடிவு செய்திருப்பதை மனதார வரவேற்கின்றேன்.

உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கும் மதிப்புக் கூட்டு வரி விலக்கு அளித்திருப்பதும், கூட்டுறவுத் துறைமூலம் 2011–2012 ஆம் ஆண்டில் உரிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவோருக்கு வட்டியில்லா பயிர்க் கடன் ரூ.3,000 கோடி வழங்க இலக்கு நிர்ணயம் செய்திருப்பதும் விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகும். சமத்துவ மக்கள் கட்சி தனது தலையாயக் கொள்கையாக, விவசாயக் கொள்கைக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. அதே சிந்தனை ஓட்டத்தில், இந்தியா உணவுக் களஞ்சியமாக மாறவேண்டுமென்ற நிலை வர வேண்டுமென்று உறுதியாக நம்புகிறது. அந்தவகையிலே, இன்று மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு இருக்கிறார்கள். கொங்கு மண்டல விவசாயப் பெருமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அத்திக்கடவு–அவிநாசி கால்வாய்த் திட்டம் குறித்து இந்த அறிக்கையிலே எதுவும் சொல்லப்படவில்லை என்றாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அதற்கேற்ற நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இத்திட்டம் நிறைவேறினால், கோவை, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களிலுள்ள 13 ஒன்றியங்கள் பயன்பெறும். ஏறத்தாழ

20 இலட்சம் மக்கள் குடிநீர் வசதியும், இரண்டு இலட்சம் ஏக்கர் நிலங்கள் நீர்ப்பாசன வசதியும் பெறும் வாய்ப்பு உண்டாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, நெல்லை மாவட்ட ராம நதி–ஜம்பு நதி உபரி நீர் மேல்மட்ட கால்வாய்த் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது என்ற ஒரே காரணத்திற்காக, அடுத்து அமைந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசு அத்திட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தையும் கருணையோடு பரிசீலனை செய்து நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏறத்தாழ 6.5 கோடி ரூபாய் அளவிலே திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இத்திட்டத்தால் ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும், தென்காசி, ஆலங்குளம் தொகுதிகளில் 15–க்கும் மேற்பட்ட கிராமங்களும் பயன்பெறும்.

பிற்பகல் 1–35

ஒரு மாநிலத்தின் முன்னேற்றத்திற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் கட்டுமானப் பணிகள் சிறப்பாக இருப்பது அவசியம். The infrastructure development should be in place for any developing nation or any developing State. சாலை வசதிகள் சிறப்பாக இருப்பது அவசியம், சுற்றுப்புறச்சூழல் சிறப்பாக இருப்பது அவசியம், சுகாதாரமோடு அனைவரும் சிறப்பாக இருப்பது அவசியம், மின் உற்பத்தி மிக, மிக அவசியம். இவற்றையெல்லாம் கடந்து, சட்டம்–ஒழுங்கு சீராக இருப்பது மிக, மிக அவசியம்,. அமைதிப் பூங்காவாக, அராஜகமற்ற ஒரு சூழல் அமைவது அவசியம், இந்த அவசியத்தை உணர்ந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் என்பதால்தான், ஒவ்வொரு முறையும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வரும்போதெல்லாம் சட்டம்–ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டுமென்ற சீரிய எண்ணத்தில் காவல் துறை நவீனமாக்கப்படுகிறது.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் இணையதளம் மூலமாக நடைபெறும் cyber crime குற்றங்களைத் தடுப்பதற்காக சேலத்திலும், திருநெல்வேலியிலும் cyber crime குற்றப் பிரிவுகள் தொடங்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும்.



நில அபகரிப்பு மோசடிப் புகார்களை விசாரிக்க, தனிப் பிரிவு தொடங்கப்பட்டு, பாரபட்சமற்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது மிகுந்த பாராட்டுக்குரியதாகும். ஆனால், அது ஒரு சிலருக்கு வேதனையாக இருக்கும். (மணியடிக்கப்பெற்றது) 45 நிமிடங்கள் கேட்டேன். ஆனால், 10 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 45 நிமிடங்கள் கேட்டீர்கள், இங்கே 10 நிமிடங்கள்தான் இருக்கின்றன. சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** சென்னை நகரக் காவல் துறை சம்பந்தமாக சில தகவல்களை நான் இங்கே உங்களுடன் பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகின்றேன். சென்னை நகரைக் காவல் காப்பதற்காக, 1659–ல் பெத்தநாயக் என்பவர் தலைமையில் அவருடைய உதவியாளர்களுடன் காவல் ஆய்வகம் முதலில் உருவாக்கப்பட்டது. 1777–ல் ஜோசியோசூப்பர் என்ற கவர்னர் சென்னையில் Board of Police என்ற அமைப்பை உருவாக்கி, மக்களுக்காக சட்டம்–ஒழுங்கு பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளார்கள். 1806–ல் வால்டர்கிரன்ட் சென்னை நகர முதல் காவல் S.P.—ஆக நியமிக்கப்பட்டுள்ளார்கள். 1834–ல் மாம்பாக்கம் ராகவாச்சாரியார் என்பவர் இந்தியாவிலேயே முதலாவது இந்திய போலீஸ் அதிகாரியாக, அதாவது Deputy Superintendent of Police—ஆக தமிழ்நாட்டில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 1874–ல் Madras Presidency Police ரூ.20,000 கொடுத்து தனக்குச் சொந்த தலைமை அலுவலகக் கட்டடத்தை விலைக்கு வாங்கியிருக்கிறது. அதைப் பராமரிக்க ரூ.10,000 செலவழித்திருக்கிறார்கள். 1874–ல் சென்னை போலீஸ் சொந்தக் கட்டடத்திற்குச் சென்றிருக்கிறது.

அதேபோன்று 352 ஆண்டுகள் பாரம்பரியம் மிக்க தமிழகக் காவல் துறையில், இப்பொழுது சொந்தக் கட்டடத்தில் இயங்கும் காவல் நிலையங்கள் தவிர்த்து, மீதமுள்ள அனைத்து காவல் நிலையங்களும் ஐந்தாண்டுகளுக்குள் சொந்தக் கட்டடத்தில் இயங்கும் என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது.

முதலமைச்சரின் விரிவான ‘பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்’ என்ற புதிய திட்டத்தின்மூலம் மக்கள் பெரிதும் பயனடையப்போவது உறுதி. இலவசக் காப்பீட்டுத் திட்டத்தில்

[திரு. ரா. சரத்குமார்] [2011 ஆகஸ்ட் 11

மேலும் விடுபட்டிருந்த அனைத்து முக்கிய நோய்களுக்கும் சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுத்துள்ளதைப் பெரிதும் வரவேற்கின்றோம்.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் ஏழைப் பெண்களுக்கு வழங்கும் உதவித் தொகையை ரூ.6,000–லிருந்து ரூ.12,000 ஆக உயர்த்தியிருப்பது ஏழைத் தாய்மார்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்துள்ள பெரிய பரிசாகும். மருத்துவர், செவிலியர், உதவியாளர், ஆய்வுக்கூட வசதி உட்பட அமைக்கப்படவிருக்கும் நடமாடும் மருத்துவமனை தமிழக கிராமப்புற மக்களுக்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதமாகும்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட மாவட்டத் தலைமைப் பொது மருத்துவமனைகளில் காலியாக இருக்கும் மருத்துவர் பணியிடங்களை நிரப்பிட வேண்டும். காலியிடங்களை நிரப்புவதற்குப் போதுமான அளவில் மருத்துவர்கள் இல்லாத சூழ்நிலை இருந்தால், ஓய்வுபெற்ற அரசு மருத்துவர்கள்மூலம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற அரசு மருத்துவமனைகளிலுள்ள காலியிடங்களை நிரப்பலாம். அனுபவம் மிக்க அந்த மருத்துவர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கலாம். தனியார் மருத்துவமனைகளில் 70 வயதுவரைகூட மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதை இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

உயர்தர மருத்துவ உதவியை மக்கள் உடனடியாகப் பெறுவதற்கு நகர்ப்புறங்களில் இயங்கும் பிரபல தனியார் மருத்துவமனைகள் ஒவ்வொன்றும் தங்களுக்கு அருகிலுள்ள 50 கிராமங்களைத் தத்தெடுத்து, அவர்களுக்கு வேண்டிய மருத்துவ சேவை ஆற்றிட தமிழக அரசு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

‘108 ஆம்புலன்ஸ்’ சேவைமூலம் மருத்துவமனைகளுக்குக் கொண்டுவரப்படும் நோயாளிகளுக்கு அரசு மருத்துவமனைகளில் உடனடியாக சிகிச்சை தொடங்கிட வேண்டிய வழிகாட்டும் விதிகளை அரசு வகுத்திட வேண்டும்.

தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக அரசு மருத்துவமனைகளையும் படிப்படியாக மேம்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

அனைவருக்கும் கல்வி Right to education உலக அளவில் இயற்றப்பட்ட சட்டங்களும் நமது அரசியல் சாசனத்திற்கு



2011 ஆகஸ்ட் 11] [திரு. ரா. சரத்குமார்]

உட்பட்டது. United Nations International Covenant on Economic, Social, Cultural Rights of 1966 guarantees this right under Article 13 of the said Act. “The history of education is the history of man as since it’s the main occupation of man to pass knowledge, skills and attitude from one generation to another.”

பிற்பகல் 1–40

அனைவருக்கும் கல்வி என்ற பக்குவம், அனைவருக்கும் கல்வி என்ற நிலை, தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியாவில் மட்டுமல்ல; உலக அளவிலே அது ஒரு உரிமை என்ற அடிப்படையிலேதான் இந்தச் சட்டங்கள் இயற்றப்பட்டு இருக்கின்றன. ஆகவே, இதையெல்லாம் முழுமையாக உணர்ந்து கல்வி அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்திலே, நிதிநிலை அறிக்கையில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்த 2011–2012 ஆம் ஆண்டில் 498.24 கோடி ரூபாய் தமிழக பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்விமீது அரசு காட்டும் அக்கறையை இது எடுத்துக்காட்டுகிறது. பத்தாம் வகுப்பு, பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 மாணவர்களுக்கு அவர்கள் படிப்பைத் தொடர்வதற்கான ஊக்கத்தொகை அறிவித்திருப்பது பாராட்டத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே, கண்டனத் தீர்மானத்தை நான் வழிமொழிந்துகொள்கிறேன். காரணம் Headlines Today Channel–லிலே நான் பேட்டியில் கலந்துகொண்ட சமயத்திலே, இதே திரு. கோத்தபய ராஜபக்ஷேவை நான் கேள்வி கேட்டேன். Our Army is a dignified and disciplined army என்று சொன்னார்கள். Disciplined army என்று சொன்ன உங்கள் army தான் முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைக்கு விஜயம் செய்தபோது துப்பாக்கியில் அடித்தார்களா என்று கேள்வி கேட்டதற்கு திரு. கோத்தபய ராஜபக்ஷேவிடம் பதில் இல்லை. ஆகவே, Headlines Today–க்கு மீண்டும் கொடுத்திருக்கின்ற பேட்டி கண்டனத்திற்கு உரியது என்று சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் இங்கே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஈழத் தமிழ் மக்களைக் கொன்று குவித்த திரு. ராஜபக்ஷேவை (மணியடிக்கப்பெற்றது) போர்க் குற்றவாளியாக அறிவிக்கவேண்டுமென்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றி இலங்கைமீது

இந்தியா பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் கண்களுக்கு வீரமங்கை ஜான்சிராணியாகத்தான் திகழ்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

அடிக்கடி இந்தியாவின் சார்பில் இலங்கை அரசோடு பேச்சுவார்த்தை நடத்தச் செல்லும் குழுவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த அதிகாரிகளும், அமைச்சர்களும் இடம்பெறவேண்டும் என்று மத்திய அரசை நாம் வலியுறுத்த வேண்டும்.

1960 ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்தில் முதலமைச்சராக திரு. பி.சி. ராய் இருந்தபோது, மேற்கு வங்கத்தைச் சேர்ந்த பெருபாரி என்ற இடத்தை அப்போதைய மத்திய அரசு பங்களாதேசுக்குத் தாரைவார்க்க முயற்சித்தது. அதை எதிர்த்துப் போராடி, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார் திரு. பி.சி. ராய். இந்திய அரசியல் சாசனத்தின்படி இந்தியாவின் ஒரு அடி நிலத்தைக்கூட எவருக்கும் தாரை வார்க்க முடியாது என்பதை வலியுறுத்தி அன்றைய மத்திய அரசின் முயற்சியைத் தடுத்து நிறுத்தினார் திரு. பி.சி. ராய். (மணியடிக்கப்பெற்றது) அப்போது பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பிரதமராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சுப்ரீம் கோர்ட்டும் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்தால்தான் பெருபாரியை இன்னொரு நாட்டிற்குக் கொடுக்க முடியும் என்று தீர்ப்பு அளித்துவிட்டது.

ஆனால், கச்சத் தீவை மத்திய அரசு இலங்கைக்குத் தாரைவார்த்தபோது, திரு. பி.சி. ராய் எடுத்தது போன்ற முயற்சிகளை, ஆக்கபூர்வ நடவடிக்கைகளை அன்றைய மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசு எடுக்காத காரணத்தால்தான் கச்சத் தீவை நாம் இழந்தோம். அதை மீட்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பது வரவேற்கத்தக்கது என்று சொல்கிறேன். எனவே, தமிழ் மக்கள்மீது, ஈழத் தமிழராக இருந்தாலும் தொப்புள் கொடி உறவு உள்ள தமிழ் மக்களைப் பாதுகாக்கவேண்டுமென்ற அடிப்படையிலே, இங்கு வாழ்கின்ற தமிழ் மக்கள் ஈழத்திலிருந்து திரும்பிய அகதிகளுக்கு மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் அளித்திட முன்வந்திருப்பதை தமிழ் உலகமே பாராட்டுகிறது.

என் உரையை நிறைவு செய்வதற்கு முன் தென்காசி தொகுதியின் கோரிக்கைகளைப் பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். காரணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரிக்கைகளை நீங்கள்



சொல்வதற்கு உரிமையுண்டு என்று காலையிலே சொல்லிவிட்ட காரணத்தால் அந்தக் கோரிக்கைகளை உங்கள் முன்னால் வாசித்து அமர்ந்துவிடுகிறேன்.

தென்காசியைத் தலைநகராகக் கொண்டு நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்ற கோரிக்கை அப்பகுதி மக்களிடம் நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. தென்காசி தொகுதியில் மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி ஒன்றை ஏற்படுத்த வேண்டும். தென்காசியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் ஒன்றை அமைக்கவேண்டும். நெல்லை–தென்காசி சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றுவதற்குரிய பணிகளை விரைவில் தொடங்கிடவேண்டும். தென்காசித் தொகுதியைச் சேர்ந்த குலையனேரி புறக்கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும். தென்காசித் தொகுதியில் விவசாய உற்பத்திப் பொருட்களைப் பாதுகாத்து, நல்ல விலை கிடைக்குமாறு விற்பனை செய்ய ஏதுவாக குளிர் சாதனக் கிடங்கு (Cold Storage) அமைத்திடவேண்டும். சுரண்டை அரசுக் கலைக் கல்லூரியைத் தயாராக இருக்கும் சொந்தக் கட்டடத்தில் இயங்க உத்தரவிடவேண்டும். சுரண்டை பாதாள சாக்கடைப் பணிகளைத் தீவிரப்படுத்தி, சுரண்டை நகரின் மத்தியில் சென்னை கூவம் நதிபோல் ஓடிக்கொண்டிருக்கும் செண்பகக் கால்வாயைச் சீரமைக்கவேண்டும். குற்றாலத்தில் சித்த மருத்துவக் கல்லூரி ஒன்றை உருவாக்கிட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் நல்லரசு புதிய அறிவிப்பை வெளியிடவேண்டும். தென் மாவட்டங்களில் புதிய தொழிற்சாலைகளை உருவாக்க நாம் கவனம் செலுத்த வேண்டும். கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு அறிவிப்போடு நிறுத்திவிட்ட நாங்குனேரி தொழில்நுட்பப் பூங்கா பணிகளை விரைவுபடுத்திட வேண்டும். தமிழகத்தில் உள்ள நதிகளை இணைப்பதற்கான முயற்சிகளில் நாம் மிகுந்த கவனம் செலுத்திட வேண்டும். முல்லைப் பெரியாறு பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையைத் தொடர்ந்து நிலைநாட்டிட வேண்டும். ஆக மொத்தம், இந்த நிதிநிலை அறிக்கை சிறப்பான நிதிநிலை அறிக்கை என்று பாராட்டி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டு திருத்திய

வரவு—செலவுத் திட்டத்தின்மீது புதிய தமிழகம் கட்சியினுடைய கருத்துகளைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 2011—ல் ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்கு முன்பு, கடந்த அரசு ஒரு மிகப்பெரிய இக்கட்டான சூழ்நிலையிலே, ஏறக்குறைய ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட கடனோடு இந்த அரசுக்கு ஒரு பெரிய சுமையை விட்டுச் சென்று இருந்தாலும்கூட, அதையெல்லாம் சமாளிக்கக்கூடிய வகையில், எதிர்கொள்ளக்கூடிய வகையில், தேர்தல் நேரத்திலே அறிவித்த நலத் திட்டங்களையும், அந்த நலத் திட்டங்களிலேயிருந்து சிறிதுகூட வழுவாமல், தமிழ்நாட்டை அடுத்த தலைமுறைக்கு, நல்லதொரு நிலைக்கு இட்டுச் செல்வதற்குண்டான வளத் திட்டங்களிலேயும் உரிய கவனம் செலுத்தி, நல்லதொரு நிதிநிலை அறிக்கையைக் கொடுத்திருக்கக்கூடிய தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதற்கண் என்னுடைய வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1—45

இந்த நலத் திட்டங்களைப் பொறுத்தமட்டிலும், மிக முக்கியமான சில கருத்துகளை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். குறிப்பாக, முதியோர் உதவித் தொகை, விதவைகள் உதவித் தொகை, ஊனமுற்றோர், கணவனால் கைவிடப்பட்டோர் போன்ற சமூகத்தினுடைய நலிந்த பிரிவினர், இந்த உதவித் தொகைகளைப் பெறுவதற்குண்டான கட்டளைகள், விதிகள் இன்னும் தெளிவுபடுத்தப்படாமல் இருப்பது, அதன் காரணமாக ஏழையெளிய மக்கள் அரசு அலுவலகங்களுக்கு, தாலுகா அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் என்று அவர்கள் மாறி, மாறி மனு கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே ஆளுநர் உரையில், முதியோர் உதவித் தொகை பெறுவதற்கு 60 வயது என்று முதல்வர் அவர்கள் அறிவித்தபிறகும்கூட, அந்த அறிவிப்பினுடைய அடிப்படையில், 60 வயதை இலக்காகக் கொண்டு முதியோர் உதவித் தொகை கொடுப்பதற்குண்டான முறையான எந்த நடவடிக்கையும் இன்னும் அதிகாரிகளால் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்து, நான் தங்கள் வாயிலாக அரசினுடைய கவனத்தை ஈர்க்க விழைகின்றேன். (குறுக்கீடு) அதேபோல, இப்போது பல்வேறு...



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, முதியோர் உதவித் தொகைக்குத் தகுதியான நபர்கள் மனு கொடுத்தும்கூட கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன்—நான் ஏற்கெனவே ஆளுநர் உரையின்போது உங்களுக்குப் பதில் சொல்லியதைப்போல—தகுதியான நபர்கள் யார் விடுபட்டிருந்தாலும், அவர்களுக்கு உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். அதிலும், இப்போது எளிதாக, திங்கட்கிழமைதோறும், விரைவுப் பட்டா மாறுதல் கோருபவர்களிடமிருந்து மனு வாங்குகின்ற அன்றையதினம், இதற்கான மனுவையும் கொடுக்கலாம் என்று நாங்கள் அறிவுரைகள் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். அதை மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த ஆணையின்படி, இப்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பது நன்றாகத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதாவது குறிப்பிட்டுச் சொல்வார்களென்றால், நிச்சயமாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் அரசாணை அதிகாரிகளுக்குச் செல்லவில்லை என்று அவர்கள் தெளிவாகச் சொல்கிறார்கள். எனவே, தங்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோட்டாட்சித் தலைவர்களை அழைத்து, இரண்டு முறை அதற்குண்டான கூட்டத்தை நடத்தி, அவர்களிடத்திலே ஏற்கெனவே கொடுத்த அரசாணைகளையெல்லாம் நாங்கள் ஆராய்ந்து, அவற்றின்படி நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறோம். எந்த அதிகாரியாவது அரசாணை வரவில்லையென்று உங்களிடத்திலே சொல்லியிருப்பாரேயானால், அதுகுறித்து தெரியப்படுத்தினால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நன்றி. அடுத்தது, நம்முடைய அரசு பல்வேறு நலத் திட்டங்களை, குறிப்பாக, 60 ஆயிரம் இலவச கறவை மாடுகளை, 1 கோடிக்கும் மேற்பட்ட ஆடுகளை அடுத்த 5 ஆண்டுக் காலத்தில் வழங்குவதற்கு அறிவித்திருக்கிறது. ஆனால், அதற்குண்டான விதிமுறைகள் அமலுக்கு வருமேயானால், பெரும்பாலானவர்கள், ஏழையெளிய மக்கள் அதைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும். எனவே, அந்த விதிமுறைகள் நிச்சயமாகத் தளர்த்தப்படவேண்டும். குறிப்பாக, இலவச ஆடுகளையும், கறவை மாடுகளையும் பெறத் தகுதியுள்ளவர்களின் பட்டியலைச் சொல்கின்றபோது, அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் எவருமே ஒரு சிறு பதவியிலேகூட இருக்கக்கூடாது என்று சொன்னால், அந்தத் திட்டம் நிச்சயமாகப் பெரும்பாலான மக்களைச் சென்றடையாது. எங்களைப் பொறுத்தமட்டிலும், இந்த அரசினுடைய எந்தத் திட்டங்களும் மக்களுக்குப் போய்ச் சேராமல் இருந்துவிடக் கூடாது என்ற அக்கறையில் நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம். எனவே, கறவை மாடுகள், இலவச ஆடுகள், அதேபோல், முதியோர் உதவித் தொகை போன்ற எந்தச் சமூகத் திட்டங்களும் முறையாக மக்களைச் சென்றடைவதற்கு, ஏற்கெனவே இருக்கக்கூடிய விதிமுறைகளை மட்டும் கணக்கிலே கொள்ளாமல், இந்த மாமன்றத்திலே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றை நியமித்து, அந்தக் குழுக்களும் இன்றைய காலக்கட்டத்தினுடைய தேவைகளை அனுசரித்து, அந்தக் குழு என்ன அறிவுரைகளை இந்த அரசுக்குச் சொல்கிறதோ அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் இந்த அரசு அதைக் கணக்கிலே கொள்ள வேண்டும். ஏன் என்று சொன்னால், பல திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன. ஆனால், அவற்றை நடைமுறைப்படுத்துகின்றபோது செயல்படும் மட்டத்தில் அவை தோல்வி அடைந்துவிடும். எனவே, அந்தத் தோல்வி நம் அரசினுடைய எந்தத் திட்டங்களுக்கும் வந்துவிடக்கூடாது. (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கொண்டுவருகிற திட்டங்கள் தோல்வி அடைந்துவிடக்கூடாது என்று



ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்தத் திட்டங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல தொலைநோக்குப் பார்வையோடு கொண்டுவருகின்ற திட்டம் யாருக்காகக் கொண்டுவரப்படுகிறதோ, அவர்களுக்குச் சென்றடைய வேண்டுமென்பதற்காகத்தான் இந்தச் சட்ட திட்டங்களையெல்லாம் நுணுக்கமாக ஆய்ந்து, அறிந்து நேற்று அவையிலே அறிவித்திருக்கிறார்கள். எனவே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில் நிச்சயமாகப் பாதிக்கப்பட்ட ஏழைக்கு இந்தத் திட்டம் சென்றடையும் என்பதை மாண்புமிகு துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த விதிமுறைகள் மிகக் கடுமையாக இருக்கின்றன. அந்த விதிமுறைகளின்படி நம்மால் 1 கோடி ஆடுகளும் நிச்சயமாகக் கொடுக்க முடியாது. 60 ஆயிரம் கறவை மாடுகளும் கொடுக்க முடியாது. எனவேதான், மக்கள் பிரதிநிதிகளினுடைய கருத்துகளையும் அறிவதற்கு ஒரு குழு நியமிக்க வேண்டுமென்பதை இந்த அவையின் வாயிலாக...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று பார்ப்பீர்கள் என்று சொன்னால், இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய, கொடுக்கக்கூடிய அளவிற்கு நிறைய குடும்பங்கள் இருக்கின்றன. அதனடிப்படையிலேதான், இந்தத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். வேலையிலே இருக்கின்றவர்கள் வீட்டுக்குக் கொடுப்பது எந்த வகையிலும் தர்மம் இல்லை. ஆனால், கிராமப்புறங்களில், குக்கிராமங்களில் சென்று பார்ப்பீர்கள் என்று சொன்னால், நிறைய தாய்மார்கள் அனாதைகளாக ஒதுங்கி இருக்கின்ற குடும்பங்களே நிறைய இருக்கின்றன. அதுபோன்றவர்களுக்குத்தான் இந்தத் திட்டம் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்கள்.

ஆடு கொடுக்கின்ற திட்டத்திற்கு வயது வரம்பைக்கூட அவர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். வயது முதிர்ந்தவர்களுக்குக் கொடுத்தால்

நிச்சயமாக அந்த ஆட்டைக் கவனித்துக்கொள்ள முடியாது என்பதற்காகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வயது வரம்பைக்கூட நிர்ணயித்து இந்தத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களுடைய சிந்தனை கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஏழைகளிடத்திலே எப்படிச் சென்றிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று மாண்புமிகு துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்தது, அரசினுடைய வளர்ச்சித் திட்டங்களில் மிக முக்கியமாக விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்தினுடைய முக்கியத்துவங்கள், அதாவது விவசாயம் நன்கு வளரவேண்டும் என்று சொன்னால், நிலம் பண்பட்டதாக இருக்க வேண்டும்; நீர் வளம் இருக்க வேண்டும்; இடு பொருட்கள் குறைந்த விலையில் கிடைத்திட வேண்டும்; அதைவிட மிக முக்கியமாக விளைச்சலுக்குப் பிறகு நல்ல விலை கிடைத்தால்தான் விவசாயம் இலாபகரமானதாக இருக்க முடியும். நம்முடைய அரசைப் பொறுத்தமட்டிலும் விதைகள், உரங்கள் மானிய விலையிலே கொடுப்பதற்கும், அதுமட்டுமன்றி, ஏறக்குறைய 3 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலாக வட்டியில்லாக் கடன் கொடுப்பதற்கும் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகள் பாராட்டக்கூடியவை.

அதேபோல், நம் நாட்டினுடைய நீர் வளம் போதுமான அளவுக்கு இல்லையென்பதைக் கருத்திலே கொண்டு, நீர் வளத்தைப் பெருக்குவதற்குண்டான நடவடிக்கைகளையும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, ஒரு கருத்தை நான் இந்த அவைக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 385 ஒன்றியங்களில், 137 ஒன்றியங்களில் நிலத்தடி நீர் அபாயகரமான நிலைக்குக் கீழே போய்விட்டது. அந்த அபாயகரமான நிலைக்குச் சென்றுவிட்ட அந்த ஒன்றியங்களில் உடனடியாகக் கவனம் செலுத்தி, அந்த ஒன்றியங்களில் வேறு எந்தவிதத்திற்கும் அதாவது, குடிநீருக்கும், விவசாயத்திற்கும் அல்லாத பயன்களுக்கு நீர் எடுப்பதைத் தடை செய்யாமல் விட்டால் அந்தப் பகுதிகளிலே நிச்சயமாக விவசாயம் செய்ய இயலாது. எனவே, ஏற்கெனவே 2003 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது



நிலத்தடி நீர்ப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், அந்தச் சட்டம் இன்னும் அமலுக்கு வரவில்லை. எனவே, அந்தச் சட்டத்தை குறைந்தபட்சம், எந்த ஒன்றியங்களில் நிலத்தடி நீர் அபாயகரமான நிலைக்குச் சென்றுவிட்டதோ, அந்த ஒன்றியங்களிலாவது உடனடியாக அமலாக்குவதற்குண்டான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 1–55

குறிப்பாக, தூத்துக்குடி மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம் தொகுதியில், ஒட்டப்பிடாரம், விளாத்திகுளம், புதூர், கயத்தாறு, கோவில்பட்டி, தூத்துக்குடி, உடன்குடி, சாத்தான்குளம் என்ற 8 ஒன்றியங்களிலே 100 சதவிகிதத்திற்கு மேல் தண்ணீர் எடுத்துக்கொண்டார்கள். ஆனால் இப்பொழுதும் அங்கே இருக்கக்கூடிய தனியார் மின் உற்பத்தி நிறுவனங்கள் ஆயிரக்கணக்கான லாரிகளிலே தண்ணீரை எடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். அங்கே எப்படி விவசாயிகள் விவசாயம் செய்ய முடியும்? ஒட்டப்பிடாரத்திற்கு அருகேயுள்ள குனியமுத்தூர் என்ற கிராமத்தில் 5 ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்றன. 10 போர் வெல்களைத் தனியார்கள் அமைத்துக்கொண்டு ஒரு நாளைக்கு ஆயிரம் லாரிகள் தண்ணீர் எடுக்கிறார்கள். ஏறக்குறைய 100–க்கும் மேற்பட்ட பம்ப் செட்கள் அத்தனையும் dry ஆகிவிட்டன. நாம் என்னதான் விவசாயத்திற்கு உதவி செய்தாலும்கூட தண்ணீர் இல்லாதபோது அந்த விவசாயிகளால் எந்தவிதமான விவசாயமும் செய்ய முடியாது. எனவே, இதையும் கருத்திலே கொள்ளவேண்டும். எனவே, உடனடியாக 2003 ஆம் ஆண்டு நிலத்தடி நீர்ப் பாதுகாப்புச் சட்டத்தை அமலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

அடுத்தது, நிலத்தடி நீரை அதிகரிப்பதினுடைய ஒரு நோக்கமாக தமிழகத்திலே இருக்கக்கூடிய நதிகளை எல்லாம் இணைப்பதற்கு தமிழ்நாடு அரசு ஒரு நல்ல அறிவிப்பை இந்த நிதி நிலை அறிக்கையிலே கொண்டு வந்திருக்கிறது. இதிலே நான் வலியுறுத்த விரும்புவது, தென் மாவட்டங்கள் ஏற்கெனவே வறட்சிக்கு இலக்காகக்கூடிய மாவட்டங்கள். இப்பொழுது குண்டாறு வரையிலும் இந்த நதி நீர் இணைப்புத் திட்டம் வந்திருக்கிறது. அதை வைப்பாறு மற்றும் மலட்டாறு வரையிலும் விரிவுபடுத்தினால் விருதுநகர் மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி

மாவட்டங்கள் நிச்சயமாகப் பயன்பெறும். எனவே, அந்த நதி நீர் இணைப்புத் திட்டத்தை மலட்டாற்றோடும், வைப்பாற்றோடும் இணைப்பதற்குண்டான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்துகிறேன்.

அடுத்து, விவசாயத்தை முன்னிலைப்படுத்தக்கூடிய வகையில் தமிழ்நாடு அரசு நுண்ணீர்ப் பாசனத்திற்கு இன்றைக்கு ஏழை எளிய விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியம் கொடுத்திருப்பது, நடுத்தர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியம் கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது.

அடுத்து, கல்வியில் ஏறக்குறைய 2 ஆயிரம் ஆண்டு காலத்திற்கு மேலாக இந்த நாட்டிலே வர்ணாசிரம் நிலை கொண்டிருந்த காரணத்தினாலே எண்ணற்ற, 98 சதவிகிதத்திற்கு மேற்பட்ட மக்கள் கல்வி கற்க முடியாமல் இருந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆயிரக்கணக்கான பள்ளிகளைத் திறந்து தமிழ் மக்கள் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக நடவடிக்கை எடுத்தார். 1977–லே தமிழகத்தினுடைய முதல்வராக பொறுப்பேற்ற புரட்சித் தலைவர் அவர்கள் சத்துணவைத் தந்து கல்விக்கூடங்களுக்குப் பிள்ளைகள் வருவதற்குண்டான ஊக்கத்தை ஊட்டினார். இன்று பள்ளிக்கு வரக்கூடியவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் இடையிலே நிற்கக் கூடாது என்பதற்காக +1 மற்றும் +2 மாணவர்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் அளித்து ஊக்குவிக்கக்கூடிய இந்தச் செயலை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

அதேபோல, பசுமை வீடு திட்டத்தில் தமிழக அரசு சார்பாக ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயில் வீடுகள் கட்டப்படுகின்றன. இதே தமிழகத்தில் ஒரு இடத்திலே ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயும், மத்திய அரசினுடைய நிதியுதவியிலே ஒரு இலட்சம் ரூபாயில் இந்திரா வீடு கட்டும் திட்டத்தில் கொடுப்பதும் இருக்கிறது. இந்த ஏற்றத்தாழ்வுகளை நிச்சயமாக நாம் அனுமதிக்கக்கூடாது. அப்படி அனுமதிப்பது நாமே வேறுபாடான ஒரு நிலைக்கு அனுமதிப்பது போன்றாகிவிடும். எனவே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வினாவிற்கு நேற்றே மாண்புமிகு



உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள் கூறிய கருத்திற்குப் பதில் கூறினேன். பசுமைக் குடில் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட உன்னதத் திட்டம். தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய மனது விசாலமாக இருக்கிறது. அதற்காக 300 சதுர அடியில் வளமாக வாழ வேண்டும், வசதியாக வாழ வேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மத்தியிலே இருக்கின்றவர்கள் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம் என்ற திட்டத்தில் 200 சதுர அடி இருந்தால் போதும், 34 ஆயிரம் ரூபாய் இருந்தால் போதும், அவர்களுக்கு வீடு கொடுத்தோம் என்ற கடமையை அவர்கள் முடித்திருக்கிறார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த இந்த உன்னதத் திட்டம், அவர்கள் வளமாக, வசதியாக இருக்க வேண்டும் என்பதற்காகதான் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் கொடுத்து வீடு கொடுக்கிறார்கள். அதோடு நிற்காமல், இந்த இடைவெளி வரக்கூடாது என்பதற்காகதான்; இந்தத் திட்டமே வேறு, இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டமே வேறு. அது மத்திய அரசால் கொண்டுவரப்படுகிற திட்டம். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நாட்டினுடைய பிரதம அமைச்சரானால் நிச்சயமாக இந்த 300 சதுர அடி பசுமைக் குடில் உன்னதத் திட்டம்மூலம் இந்தியா முழுவதும் இருக்கின்ற கோடிக்கணக்கான ஏழை மக்கள் பயன்பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–00

எனவே, அந்தத் திட்டத்திற்குச் சரி சமமாக இந்தத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கூடுதலாக இந்த ஆண்டில் ரூபாய் ஒரு இலட்சம் நிதியை இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். வெறும் ரூ.34,000/– தான் மத்திய அரசு கொடுக்கிறது. மீதித் தொகை முழுவதையுமே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுக்கிறார்கள். நீங்கள் இங்கே நன்றாக சற்று யோசித்துப் பார்த்தீர்கள் என்று சொன்னால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வருகிற திட்டத்திற்கு ஒரு சதுர அடிக்கு ரூ.500, மத்திய அரசு கொண்டு வந்த திட்டத்திற்கும் ஒரு சதுர அடிக்கு ரூ.500 ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 500 சதுர அடி கொடுத்து 300 சதுர அடியில், ரூ.1,50,000/– வீடு கட்டுவதற்கு——அதேபோல, மத்திய அரசாங்கம் ஒதுக்கிய அந்த வீட்டிற்கும் விலை குறையாமல் அந்த 200 சதுர அடிக்கு ரூ.500 என்று ரூபாய் ஒரு இலட்சம் கொடுத்தும் இருக்கிறார்கள். இதிலே கூடுதலாக பசுமைக் குடில் திட்டத்திற்கு சூரிய ஒளியுடன்கூடிய விளக்குகளை வைப்பதற்கு ரூ.30,000/– மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். எனவே, தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஏழை எளிய மக்கள் அனைவரையும் தன்னுடைய இரண்டு கண்களாகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாவிக்கிறார்களே அல்லாமல், பிரித்துப் பார்க்கின்ற நிலை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் இல்லை. அது கடந்த ஆட்சியிலிருந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி இருந்த காலத்தில்தான் அந்த அவல நிலை இருந்தது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள். ஏற்கெனவே 17 நிமிடங்கள் நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். மூன்று உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையோடு ரூ.1,80,000/—ஐ எப்படி பசுமை வீடு திட்டத்திற்கு ஒதுக்கியுள்ளாரோ, அதேபோல், மத்திய அரசுத் திட்டத்திற்கு ரூ.70,000/– ஒதுக்கி இருக்கிறார், மேலும் கூடுதலாக ரூ.80,000/– ஒதுக்கி எல்லா வீடுகளையும் பசுமை வீடுகளாக இருந்தால், உலகத்திற்கே இது ஒரு முன்மாதிரியாக இருக்கும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன்;



இதற்கு மனதுதான் காரணம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நம்முடைய மக்கள் வளமாக இருக்க வேண்டுமென்று பெரிய மனதோடு, இவ்வளவு பெரிய நிதி நெருக்கடி இருக்கின்ற நிலையில், இவ்வளவு பெரிய திட்டத்தைத் தந்திருக்கின்றார்கள். பல இலட்சக்கணக்கான கோடி ரூபாய் வருவாய் வரக்கூடிய மத்திய அரசுக்கு மனம் வரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டோர்களுக்காக 5,700 கோடி ரூபாய் Special Components, சிறப்பு உட்கூறு திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தினுடைய வரலாற்றில் இவ்வளவு பெரிய நிதி ஒதுக்கப்பட்டது இதுதான் முதல் முறை. இதற்காக புதிய தமிழகம் கட்சியின் சார்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேசமயத்தில் மற்றொரு கருத்தையும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். குறிப்பாக, இதுபோன்று ஒதுக்கப்படக்கூடிய நிதிகள், பல துறைகளில் அதை எப்படிச் செலவழிப்பது என்று தெரியாமல், ஆண்டினுடைய இறுதியில் அந்த நிதியைத் திருப்பி அனுப்பி விடுகிறார்கள். எனவே, என்னுடைய கருத்து என்னவென்று சொன்னால், தொழில், கல்வி, விவசாயம் என்று ஒவ்வொரு துறைக்கும் ஆலோசனைக் குழுக்களைத் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலே நியமித்து, 3, 6 மாதங்களுக்கு அந்தக் குழுக்களோடு கலந்து, இந்த வளர்ச்சித் திட்டங்கள் எந்த அளவிற்குச் செயல்முறைப்படுத்தப்படுகின்றன என்பதைக் கண்காணிக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அப்பொழுதுதான் இந்த 5,700 கோடி ரூபாய் உண்மையாக அந்த மக்களுக்குச் சென்றடையும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி, சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் மத்தியிலேயே ஆதி திராவிடர்,

ஆதி திராவிடர் அல்லாதோர்—ஆதி திராவிடர் பள்ளிகள், ஆதி திராவிடர் விடுதிகள் என்று குறிப்பிடாமல் அனைத்துப் பள்ளிகளையும் அரசுப் பள்ளிகள், அரசு விடுதிகள் எனக் குறிப்பிட வேண்டும். அப்போதுதான் நாம் தமிழர்கள் என்ற உணர்வை உருவாக்க முடியும். எனவே, இனிமேலாவது அந்த ஆதி திராவிடர் பள்ளிகள், விடுதிகள் என்ற நிலையை மாற்றி, அனைத்துமே அரசுப் பள்ளிகள், அரசு விடுதிகள் என்று மாற்ற இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று, உள் இட ஒதுக்கீட்டால் தமிழ்நாட்டில் 15 சதவிகிதத்திற்கு மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் மிகப் பெரிய அளவில் பாதிப்புக்கு ஆளாகிறார்கள். கருணாநிதி அரசால் ஒரு அரசியல் நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட அந்த உள் இட ஒதுக்கீடுச் சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, தொகுதியினுடைய பிரச்சினையை வேறு சமயத்தில் பேசிக்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்து, இந்த அவையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கு நன்றி கூறி உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

*பிற்பகல் 2—05*

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணி வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றதுபோல, அ.தி.மு.க. அரசு தாக்கல் செய்துள்ள 2011—2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை வரலாற்றுச் சிறப்புமிக்கதாக அமைந்துள்ளது. கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டு தமிழகத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பலனளிக்கும் வகையில், ஒரு சிறந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அளிப்பதற்கு அச்சாரமாக இருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மனித நேய மக்கள் கட்சியின் சார்பில் எனது நெஞ்சார்ந்த பாராட்டுகளை, நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நேர்த்தியுடன் சமர்ப்பித்த இந்த நிதிநிலை அறிக்கை வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று நான் வெறும் வார்த்தை ஜாலத்திற்காகச் சொல்லவில்லை.



முதன்முறையாக நமது மாநிலத்தின் வரவு—செலவுத் திட்டத்தின் அளவு ரூபாய் ஒரு இலட்சம் கோடியை மிஞ்சும் அளவு வரலாற்றுச் சாதனை புரிந்துள்ளது என்பதற்காக மட்டும் நான் இந்த நிதிநிலை அறிக்கையை வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று குறிப்பிடவில்லை. இந்தியாவில் உள்ள பிற மாநில முதலமைச்சர்களும், கடந்த தி.மு.க. ஆட்சியாளர்களும் நினைத்துப் பார்க்காத அற்புதமான திட்டங்களை, விவசாயிகள் முதல் பள்ளிக்கூட மாணவர்கள் வரை அனைவரும் பலன் பெறும் வகையிலே நலத் திட்டங்களை, இந்த அரசு சமர்ப்பித்துள்ளதால், இதை வரலாற்றுச் சிறப்புமிக்க வரவு—செலவுத் திட்டம் என்று சொல்வதற்குப் போதுமானதாகும்.

இருப்பினும், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையிலே இடம் பெற்றுள்ள சில வியக்கத்தக்க அறிவிப்புகளைக் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். முதலாவதாக, இதுவொரு மத சார்பற்ற அரசு; மத ரீதியாக பாரபட்சம் காட்டாத அரசு என்பதைப் பறைசாற்றும் வகையில், கோயில் அர்ச்சகர்கள், ஓதுவார்கள், இசைவாணர்கள், கிராமப் பூசாரிகளுக்கான ஓய்வூதியத்தை ரூ.750/— லிருந்து ரூ.1,000/— ஆக உயர்த்தியுள்ள அதேநேரத்தில், முஸ்லிம் மத ஊழியர்களான உலமாக்களுக்கும் இதே அளவு ஓய்வூதியத்தை இந்த அரசு உயர்த்தியுள்ளதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உலமாக்களுக்கு முதன்முதலாக ஓய்வூதியம் அளிக்கப்பட வேண்டுமென்ற திட்டம் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியில்தான் நடந்தது என்பதை நான் நன்றியுடன் இத்தருணத்திலே நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளேன். இதுபோல, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் தலைமையகம் தற்போது அமைந்துள்ள சென்னை ஜாபர்சாராங் தெருவில் உள்ள இடத்தை வாங்கியதும் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான். அதேபோல, அந்த இடத்தில் வக்ஃபு வாரியத்திற்குச் சிறந்த வசதிகளுடன் கட்டடம் கட்டுவதற்காக 52 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதும், கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் தற்போதைய முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கடந்த அ.தி.மு.க. ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதைப்பற்றி மறைந்த இந்திய தேசிய லீக் கட்சியின் தலைவரும், முன்னாள் வக்ஃபு வாரியத் தலைவருமான திரு. அப்துல் லத்தீப் ஒருமுறை குறிப்பிடும்போது, 'தி.மு.க. ஆட்சியாளர்களிடம் நான் பலமுறை முறையிட்டும் வக்ஃபு வாரியத்திற்குச் சொந்தக்

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2011 ஆகஸ்ட் 11

கட்டடம் கட்டுவதற்கு அவர்கள் மறுத்துவிட்டார்கள். ஆனால் ஒருமுறை முறையிட்டதும் அ.தி.மு.க. முதலமைச்சர் பணத்தை ஒதுக்கி, கட்டடமும் கட்டிக் கொடுத்துவிட்டார்' என்று பெரிதும் நெகிழ்வுடன் குறிப்பிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த தி.மு.க. ஆட்சியாளர்களின் பாராமுகத்தின் காரணமாக கடும் நிதிப் பற்றாக்குறையால் தட்டுத்தடுமாறிச் செயல்படும் நிலை வக்ஃபு வாரியத்திற்கு ஏற்பட்டது. இதன் விளைவாக, மாண்புமிகு நிதி அமைச்சர் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டதுபோல, வாரியம் தனது ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதிய நிலுவைத் தொகை மற்றும் இதர பயன்களை அளிப்பதற்கு இயலாத நிலை ஏற்பட்டது. இந்த அவல நிலையைப் போக்க, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் வரலாற்றில் முதன் முறையாக இந்த அரசு ஒருமுறை மானியமாக மூன்று கோடி ரூபாய் வழங்க முன்வந்துள்ளது நிச்சயமாக வரலாற்றுச் சிறப்புமிக்கதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) இதுமட்டுமின்றி, சென்ற தி.மு.க. ஆட்சியைப்போல் கருமியாக இல்லாமல், ஆண்டுதோறும் நிர்வாக மானியமாக வழங்கப்பட்டுவரும் 45 இலட்சம் ரூபாய் ஒரு கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதை நெஞ்சாரப் பாராட்டுகிறேன். வக்ஃபு வாரியத்தைச் சீரமைத்து ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வக்ஃபு சொத்துக்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிப்பை மனமார வரவேற்கிறேன். கருணை உள்ளம் நிறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பள்ளி வாசல்களில் மேற்கொள்ளப்படும் பெரிய அளவிலான மராமத்துப் பணிகளுக்கு—major repairs and renovation—தற்போது அரசு வழங்கிவரும் மானியமான 60 இலட்சம் ரூபாயை உயர்த்தி வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும், சிறிய மராமத்துப் பணிகளுக்கு மற்றும் பள்ளிவாசல் அடக்கத் தலங்களுக்கான சுற்றுச்சுவர் எழுப்புவதற்காக அரசு தற்போது அளித்துவரும் மானியமான ரூ.10 இலட்சத்தையும் உயர்த்தித் தர வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2—10

அரசுப் பணிகளில் மதவழிச் சிறுபான்மை மக்களுக்கு மத்திய அரசுப் பணிகளில் 15 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும். இதில் 10 விழுக்காடு முஸ்லீம்களுக்கு அளிக்க வேண்டுமென்று நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா தலைமையிலான மதம் மற்றும் மொழி சிறுபான்மையினர்களுக்கான ஆணையம் கடந்த மே 21, 2007-லே பரிந்துரை அளித்தது. இருந்தபோதிலும், காங்கிரஸ்,



2011 ஆகஸ்ட் 11] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

தி.மு.க உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் சிறுபான்மை மக்களைத் தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. ஆனால், நமது தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான 69 விழுக்காடு இட ஒதுக்கீடு அளவைக் கடைப்பிடிக்க வழிவகை செய்து, சமூக நீதி காத்த மாபெரும் வீராங்கனையாகத் திகழும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு வழி வகுத்திருக்கிறார்கள். சமூக நீதியைக் காத்து வாழ்வின் விளிம்பிலுள்ள மக்களை உயர்த்துவதற்கு டெல்லியில் ஆட்சியில் இருப்பவர்களுக்கு, நமது மாண்புமிகு முதலமைச்சருக்கு இருப்பதுபோல மன வலிமையும் துணிச்சலும் இல்லை. இந்த மன வலிமையும் துணிச்சலும் இல்லாததன் காரணமாகத்தான், மிஸ்ரா ஆணையத்தினுடைய அறிக்கையை அவர்கள் கிடப்பிலே, போட்டிருக்கின்றார்கள். சமூக நீதியை நிலை நாட்டுவதிலும், சிறுபான்மையினர் நலனில் அக்கறை உள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் வாக்களித்ததுபோல, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கான இட ஒதுக்கீடு அளவைக் குறைந்தது 5 விழுக்காடாகவோ அல்லது அதற்கு மேலும் உயர்த்துவதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோல, தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கு நடைமுறையில் உள்ள இட ஒதுக்கீடு எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதைக் கண்காணிக்க அரசு அலுவலர்கள் மட்டுமின்றி, சமூக ஆர்வலர்களும் இடம் பெறும் கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிற்றலைக் குறைப்பதற்காக ரூபாய் 394.04 கோடி ஒதுக்கீட்டில், 24 இலட்சத்து 94 ஆயிரத்து 649 மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில், பத்தாம் வகுப்பு, மேல்நிலை முதலாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க முடிவு செய்திருப்பது இந்த நிதிநிலை அறிக்கையிலே இடம் பெற்றிருக்கக்கூடிய இன்னொரு வரலாற்றுச் சிறப்புமிக்க

அம்சமாகும். ஒரு கல்வியாளர் என்ற முறையில் இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அமெரிக்கா போன்ற வளர்ந்து வரும் நாடுகள், ஏழை நாடுகள் என அனைத்து நாடுகளிலும் மேல்நிலைப்பள்ளி அளவிலே மாணவர்கள் இடையிலே பள்ளிப் படிப்பை நிறுத்திவிடுவதால் பெரும் பிரச்சினையாக உள்ளது. இதுகுறித்து விரிவாக பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ள வாஷிங்டனைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகின்ற National Educational Association என்ற ஒரு தன்னார்வ அமைப்பு, உயர் அளவில் இன்றைக்கு மாணவர்கள் படிப்பை நிறுத்துவது தனி நபருக்கும் சமூகத்திற்கும் மிகப் பெரும் தீய விளைவுகளை ஏற்படுத்துகிறது. ஒரு நாடு இந்த இடைநிற்றலைக் குறித்து அக்கறை கொண்டு செயல்படாவிட்டால், அது எதிர்காலத்தில் மிகப் பெரும் விலையைக் கொடுக்க நேரிடும். ஆனால், இந்த இடைநிற்றலைத் தடுப்பதற்காக அதில் முதலீடுகளைச் செய்தால், அது மிகப்பெரும் நன்மையைப் பெற்றுத் தரும். ஆனால் இது இவ்வளவு சுலபமானதுதான். ஆனால் மிக முக்கியமான கேள்வி என்னவெனில், இடைநிற்றலைக் குறைத்து, இனக் குழுக்களுக்கு இடையிலான வேறுபாடுகளைக் களைவதற்கான முதலீட்டைச் செய்வதற்கு அமெரிக்க அரசிடம் அரசியல்ரீதியான துணிச்சல் உள்ளதா என்றால், இல்லை என்பதுதான் பதிலாக வருகிறது என National Educational Association தெரிவிக்கிறது. ஆனால், நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சரிடம், அமெரிக்க அரசியல்வாதிகளிடம் இல்லாத துணிச்சல் உள்ளதால்தான், (மேசையைத் தட்டும் ஒலி) இடைநிற்றலைக் குறைத்து, 394.04 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கி, எதிர்காலத்தில் தமிழகம் மிகப் பெரும் பலனைப் பெறுவதற்கு வழி வகுத்துள்ளார். இப்போது புரிகிறதா? இந்தியாவில் 28 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்கள் இருந்தபோதிலும், ஏன் ஹிலாரி கிளிண்டன் நமது மாநிலத்தை மட்டும் தேர்ந்தெடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சரைச் சந்திக்க வந்தார் என்பது!

இத்தகைய துணிச்சல்மிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு நீண்டகால கோரிக்கையைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். தமிழகத்தில் 1991–1992–க்குப் பிறகு அரசு மானியம் நிதியுதவி இன்றி அங்கீகரிக்கப்பட்டு, தொடங்கப்பட்ட, நிலை உயர்த்தப்பட்ட மற்றும் கூடுதல் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்ட, பகுதி மானிய உதவியின்றியும், முழுமையாக மானிய உதவியின்றியும்





தனியார் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய பள்ளிகளுக்கு அரசின் மானிய உதவியுடன் பணியிடங்கள் அனுமதிக்கப்பட வேண்டுமென்று பல்வேறு தரப்பினராலும் தொடர்ந்து கோரிக்கைகள் எழுப்பப்பட்டு வந்துள்ளன.

பிற்பகல் 2–15

இதற்காகப் பல்வேறு போராட்டங்களும் கடந்த ஆட்சியின்போது நடைபெற்றுள்ளன. நானும் அதில் பங்கேற்றுள்ளேன். அரசு மானியம் இல்லாத வகுப்புகளில் முதுகலைப் பட்டம் மட்டுமல்ல; முனைவர் பட்டம் பெற்றவர்கள்கூட ரூபாய் 1,500/– முதல் ரூபாய் 3,000/- வரை என மிகக் குறைந்த ஊதியத்தில் பணியாற்றும் அவல நிலை நிலவுகிறது. இந்த ஊதியத்தைக் கொண்டு வாழ்வை நடத்த இயலாமல் கடுமையான மன உளைச்சலுக்கு சுயநிதிப் பள்ளி ஆசிரியர்கள் ஆளாகியுள்ளனர். இச்சூழலில் கடந்த தி.மு.க. அரசு தனது இறுதி நாட்களில் ஒரு அரசாணையை Tamil Nadu Ordinance No. 1 of 2011 என்று கடந்த பிப்ரவரி 1, 2011–ல் பிறப்பித்தது. தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் சட்டம் 1973–க்குத் திருத்தம் செய்து இந்த அரசாணை வெளியிடப்பட்டது. இந்த அரசாணை 1999 ஆம் ஆண்டு வரை தொடங்கப்பட்ட பள்ளிகளுக்கு 11,307 ஆசிரியர் பணியிடங்களும், 648 ஆசிரியர் அல்லாத பணியிடங்களும், மொத்தம் 331 கோடி ரூபாய் செலவில் அனுமதி வழங்கப்பட்டது. 1–6–2011 முதல் இது நடைமுறைக்கு வரும் என்று ஆணை வெளியிடப்பட்டது. உண்மையிலேயே இதை நடைமுறைப்படுத்துவதற்கு அவர்களுக்கு விருப்பமில்லை. எனவேதான், அவர்கள் ஆட்சிக்கு வரமாட்டார்கள் என்று நினைத்து, 1–6–2011 முதல் இது நடைமுறைக்கு வரும் என்று அந்த அரசாணையில் குறிப்பிட்டார்கள். இந்த அரசாணையை 1999–க்குப் பிறகும் தொடங்கப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கும் பொருந்தும் என்று விரிவுப்படுத்தி, அதனைச் சட்டமாக இந்த மாமன்றத்தில் இயற்றி, தமிழகத்தின் பள்ளிக் கல்வி வரலாற்றில் மற்றொரு மாபெரும் புரட்சியை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏற்படுத்த வேண்டுமென பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக்க வேண்டுமென்ற முதல்வரின் குறிக்கோளையும், தொலைதூரப் பார்வையையும் பிரதிபலிக்கும் வகையில், இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது. இந்த நிதிநிலை அறிக்கை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை ஓர் அரசியல் தலைவர் என்ற நிலையிலிருந்து,

எதிர்காலச் சந்ததியினரின் நலனையும் கருத்தில்கொண்டு செயல்படும் Statesman–ஆக உயர்த்தி உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனெனில், இன்றைய மக்களின் தேவைகள் மட்டுமின்றி, எதிர்காலத் தமிழகமும் வாழ்வாங்கு சிறக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அமைக்கப்பட்டுள்ளது இந்த நிதிநிலை அறிக்கை.

இத்தகைய சீர்மிக்க முதல்வரிடம் தமிழக மக்கள் சார்பாக இறுதியாக ஒரு கோரிக்கை வைக்க விரும்புகிறேன். இலட்சாதிபதிகளாவோம் என்ற கனவுடன் பிச்சாதிபதிகளாக தமிழர்கள் மாறும் அவலநிலையை நீக்க, அரசிற்கு வருவாய் இழப்பு ஏற்பட்ட போதினும், சென்ற அ.தி.மு.க. ஆட்சியின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் துணிச்சலுடன் லாட்டரி என்ற சூதாட்டத்தைத் தடைசெய்து, பல கோடி குடும்பங்களின் நலனைக் காத்தார். இதே துணிச்சலுடன் பூரண மதுவிலக்கைத் தமிழகத்தில் அமல்படுத்த வேண்டுமென மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். மதுவைப் பற்றி ஆய்வு செய்த டாக்டர் எம். ராபர்ட் சென் என்ற அமெரிக்க அறிஞர், "If half the pubs and bottle stores were closed, I guarantee that half of the hospitals and jails will remain closed" என்று குறிப்பிடுகிறார். அதாவது, "மதுக் கடைகளையும், pub–களையும், மதுபானம் அருந்தும் இடங்களில் பாதியை மூடினால், நாட்டிலுள்ள மருத்துவமனைகள் மற்றும் சிறைச்சாலைகளில் பாதியை மூடிவிடலாம் என்பதற்கு நான் உத்தரவாதம்" என்று குறிப்பிடுகிறார். கர்நாடகத்திலே மது விற்பனையினால் வரக்கூடிய வருவாயை வைத்து செய்யப்பட்ட ஓர் ஆய்வு, இந்தக் கூடுதல் வருவாயிலே 60 சதவீதம் அந்த மக்களினுடைய நல்வாழ்வுக்காகவும், மதுவினால் ஏற்படக்கூடிய தீமையைக் களைவதற்காகவுமே செலவு செய்ய வேண்டிய ஒரு அவலநிலை ஏற்பட்டிருக்கின்றது என்று குறிப்பிடுகின்றது.

லாட்டரியைத் தடை செய்த அதே துணிச்சலுடன், பல்லாயிரம் கோடி ரூபாய் வருவாயை ஈட்டினாலும், மிகப் பெரும் சமூகக் கேடுகளை விளைவிக்கும் மதுவை முழுமையாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தடைசெய்து, கோடானுகோடி தமிழக, குடும்பங்களில் நிம்மதி ஏற்பட வழிவகை செய்ய வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் ஈழத் தமிழர்கள் வாழும் முகாம்களில் உள்ள வீடுகளையும், அடிப்படை வசதிகளையும் மேம்படுத்தும் பொருட்டு, இருபத்தைந்து கோடி ரூபாய் ஒதுக்கப்படும்; குடும்பத் தலைவருக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உதவித் தொகை ஆயிரம் ரூபாயாக





உயர்த்தப்படும்; இதேபோல், இதர குடும்ப உறுப்பினர்களுக்கான உதவித் தொகையும் உயர்த்தப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதை மனமார வரவேற்கிறேன். எனது தொகுதியில்தான் ஈழத் தமிழர்களுக்கான மிகப் பெரும் முகாம் 'மண்டபத்தில்' உள்ளது. மண்டபம் முகாமில் அடிப்படை வசதிகளை அதிகரித்துத் தருவதுடன், அங்குள்ள ஆண்கள், பெண்கள் பயன்பெறும் வகையில், தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்படுத்தப்பட்ட, வறட்சி மிக்க எனது இராமநாதபுரம் தொகுதி தொடர்பாக சில கோரிக்கைகளைச் சுருக்கமாக வைத்து அமருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இராமநாதபுரம் நகரில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், 2005-ல், ரூபாய் 30 கோடி மதிப்பில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. கடந்த தி.மு.க. ஆட்சியினரின் அலட்சியப் போக்கினால், 6 ஆண்டுகள் சென்ற பிறகும் இந்தத் திட்டம் இன்னும் செயலுக்கு வரவில்லை.

பிற்பகல் 2–20

விரைந்து இராமநாதபுரம் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்முறைக்கு வருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இராமநாதபுரம் நகரில் வாழும் மக்களில் பெரும்பாலானவர்கள் ஏழை மற்றும் நடுத்தர மக்களே. இதைக் கருத்தில்கொண்டு, தர்ம உள்ளம் படைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், பொது மக்களிடமிருந்து இந்தத் திட்டத்திற்காக வசூல் செய்ய உத்தேசித்துள்ள 9 கோடியே 87 இலட்சம் ரூபாயை அரசே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து அதிகமான மக்கள் வந்துசெல்லும் யாத்ரீக மற்றும் சுற்றுலாத்தலமாக விளங்கும் இராமேஸ்வரம் நகரத்திலும், கீழக்கரை நகரத்திலும் பாதாள சாக்கடைத் திட்டம் அமையப்பெற இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள 3 நகராட்சிகளான இராமநாதபுரம், இராமேஸ்வரம் மற்றும் கீழக்கரையில் எங்கு நோக்கினும் குப்பைகளைப் பார்க்கலாம். மிக மோசமான 'குப்பை மேலாண்மை', தி.மு.க.-வினர் வசம் உள்ள இந்த நகராட்சிகளில் நிலவுகிறது.

அதேபோல, கழிவுநீர் ஆறாக ஓடுவதையும் பார்க்கலாம். வெளிமாநிலத்தவர்கள் அதிகம் வந்து போகும் இந்தப் பகுதிகளில், இதுபோன்ற மோசமான சுகாதார நிலை நிலவுவது என்பது தமிழகத்தைப் பற்றிய ஒரு தவறான கருத்தை ஏற்படுத்தும். இந்த மூன்று நகராட்சிகளிலும் போர்க்கால அடிப்படையில் குப்பைகளை அகற்றுவதற்கும், கழிவுநீர் வடிகால் அமைப்பதற்கும் இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமேஸ்வரம் முதல் மதுரை வரையிலான சுமார் 120 கிலோ மீட்டர் தொலைவிலான நெடுஞ்சாலையிலே, நேற்று நான் கேள்வி நேரத்தில் குறிப்பிட்டதுபோல, சாலை விபத்துகள் அதிகம் ஏற்படுகின்றன. இராமநாதபுரம் மாவட்டச் சுற்றுவட்டாரத்தில் பெரும் விபத்து ஏற்பட்டால், மாவட்டத் தலைமை மருத்துவமனையில் உரிய வசதிகள் இல்லாததால், விபத்தில் காயம் அடைந்தவர்களை 120 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மதுரைக்குக் கொண்டு செல்லவேண்டிய நிலையுள்ளது. இதனால் உயிரிழப்புகளும் அதிகம் ஏற்படுகின்றன. இந்த அவல நிலையை நீக்க, இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் 24 மணி நேரமும் இயங்கும் Ortho Trauma Care மற்றும் Casualty Services உட்பட, முழுமையான விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவை Accident and Trauma Care Center-ஐ ஏற்படுத்தித் தரவேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

இராமநாதபுரத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்று வெறும் வாய்ச்சவடால் அறிவிப்பு மட்டும் தி.மு.க. ஆட்சியிலே செய்யப்பட்டது. டாக்டர் எம்ஜி.ஆர். அவர்களால் மாவட்டத் தலைநகர் அந்தஸ்து பெற்ற இராமநாதபுரம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** முடித்துவிடுகிறேன். இராமநாதபுரத்தில் அவரது உண்மையான அரசியல் வாரிசான மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அரசினர் மருத்துவக் கல்லூரியை அடுத்த கல்வி ஆண்டிலேயே தொடங்க ஆவன செய்ய வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வைகை அணையிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீர், இராமநாதபுரம் பெரிய கண்மாய் வழியாக எனது தொகுதிக்குட்பட்ட பெருங்குளம் கிராமத்தில் கடலில் கலக்கிறது.



அவற்றைத் தடுத்து நிறுத்தி, இராமநாதபுரம் சர்க்கரைக்கோட்டை கண்மாயைத் தூர்வாரி, தண்ணீரைச் சேமிக்க இன்றைய தமிழக முதலமைச்சர் அவர்கள் 1991 முதல் 1996 வரை ஆட்சியிலிருந்தபோது, இந்தத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டது. ஆட்சி மாற்றத்தால் இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாம் பசுமைப் புரட்சிக்கும், இரண்டாம் வெண்மைப் புரட்சிக்கும் வித்திட்டுள்ள அடுத்த ஐந்தாண்டுகளில், உழவர்களின், தனி நபர் வருமானத்தை 2 முதல் 3 மடங்கு அதிகரிக்க வழிவகுக்கும், அனைத்துத் தரப்பினரையும் திருப்திப்படுத்தும், அருமையான சீரிய நிதிநிலை அறிக்கையை வரவேற்று, அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது, 1991-1992–க்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட சுயநிதிப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளித்து, மானியத்துடன் கூடிய ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்க வேண்டும் என்று கூறினார்கள். சென்ற ஆட்சியிலே அதற்கு அவசரச் சட்டம் போடப்பட்டு, சட்டமன்றத்திலே சட்டம் இயற்றப்பட்டதாகச் சொன்னார்கள். அது தவறு. 28–2–2011 அன்று அவசரச் சட்டம் போட்டார்கள். கடந்த ஆட்சியாளர்கள் இருந்தபோதே 1998 ஆம் ஆண்டு ஒரு சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். 1991-1998-க்கு இடைப்பட்ட காலத்திலே ஆரம்பிக்கப்பட்ட சுயநிதிப் பள்ளிகளிலே, பகுதி சுய நிதியிலே ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளுக்கு அரசு மானியம் கிடையாது என்று, அன்றைக்கு முதலமைச்சராக இருந்தவரே சட்டம் போட்டிருக்கின்றார்கள். ஆனால், நீங்கள் சொன்னதுபோலவே, தேர்தலை மனதிலே வைத்துக்கொண்டே, உள்நோக்கத்தோடு மட்டுமல்ல; வேறு ஒரு காரணத்திற்காகவும், அரசாங்கப் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கின்ற காலக்கட்டத்திலே, அரசாங்கப் பள்ளிகளுக்கே கூடுதல் ஆசிரியர்கள் தேவைப்படும் நிலையில் இருக்கின்ற காலியிடங்களுக்கே ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கிற நிலையில் கூடுதலாக ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்ற நிலையில்

[திரு. சி.வி. சண்முகம்] [2011 ஆகஸ்ட் 11

பிற்பகல் 2—25

தனியார் பள்ளிகளுக்கு உள்நோக்கத்தோடு அந்த அரசு ஆணை போடப்பட்டது ஒன்று.

அதுமட்டுமல்ல; இன்னும் ஒன்று. அரசாணை 5, அரசாணை 6, அரசாணை 4 போன்றவற்றில் என்ன சொல்லப் பட்டிருக்கிறதென்றால், தனியார் பள்ளிகளுக்கு—குறிப்பாகக் கவனிக்க வேண்டும். தனியார் பள்ளிகளுக்கு—இருக்கின்ற கூடுதல் ஆசிரியர் பணியிடங்களோடு, கூடுதலாக 6,400 ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவித்து, 200 கோடி ரூபாய் ஒதுக்கி 28-2-2011 அன்று அரசாணை போடப்பட்டது அதுவும் ஒரே தேதியிலே இந்த அரசாணை மூலம், அந்த அவசரச் சட்டத்தைப் போட்டு, தேர்தலை மனதிலே கொண்டு மட்டுமல்ல; வேறு ஓர் உள்நோக்கத்திற்காக, அரசாங்கத்திற்கு 350 கோடி ரூபாய் இழப்பை ஏற்படுத்தி, தனியார் பள்ளிகளுக்குச் சாதகமாக கடந்த ஆட்சியிலே அந்த அரசு ஆணை போடப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்களுக்கு உண்மையிலேயே அக்கறை இருந்திருந்தால், முதலிலே அரசுப் பள்ளிகளுக்கும், அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும்தான் அவர்கள் இந்த ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவித்திருக்க வேண்டும். ஆனால், அவர்களுக்குத் தேர்தல் நோக்கம் மட்டுமல்ல; வேறு ஒரு முக்கியமான நோக்கத்திற்காக, மிகப் பெரிய முறைகேடு நடைபெற்றிருக்கிறது. ஆகவே, இதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலை மனதிலே கொண்டது மட்டுமல்ல; கடந்த ஆட்சியாளர்கள் அனைத்துத் துறைகளிலுமே கிடைத்தவரைக்கும் இலாபம் என்ற நோக்கத்திலே சுருட்டிக்கொண்டு போகிற நேரத்திலே, இதையும் வாரிக்கொண்டு, சுருட்டிக்கொண்டுப் போய்விட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

***திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகச் சட்டமன்றத்தில் 2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கைமீது உரையாற்ற வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத்



2011 ஆகஸ்ட் 11] [திரு. ம. கலை அரசு]

தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தச் சட்டமன்றப் பேரவையில் சாதாரண தொண்டனாகிய என்னைச் சட்டமன்றப் பேரவை உறுப்பினராக்கி அழகு பார்த்த பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர், மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், கட்சிப் பாகுபாடின்றி வாக்களித்த அணைக்கட்டு தொகுதி மக்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை மீண்டும், மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழக மக்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை மூன்றாவது முறையாக மிகப் பெரிய ஒரு எதிர்பார்ப்போடு முதல்வராகத் தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள். இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, 234 தொகுதிகளையும், தன்னுடைய ஸ்ரீரங்கம் தொகுதிபோல் பார்த்து, எல்லோரும் எல்லாமும் பெற்றிட ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

கல்வியில் ஏற்றத்தாழ்வுகளைப் போக்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட சமச்சீர் கல்வித் திட்டத்தை நடப்பாண்டிலேயே செயல்படுத்திட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. இது சமச்சீர் கல்வித் திட்டத்திற்காக பா.ம.க. நடத்திய போராட்டங்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்று, சமச்சீர் கல்வித் திட்டம் நடப்பு ஆண்டிலேயே செயல்படுத்தப்படும் என்று அறிவித்ததற்காக, better late than never என்று சொல்லுகின்ற வகையில், அரசுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை அவர்களுக்கும், இந்த நேரத்திலே நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாணவர்களுக்கு அதிக எண்ணிக்கையில் இலவசச் சீருடைகள் வழங்கப்படும் என்ற அறிவிப்பும், மாணவர்கள் இடைநிற்றலைத் தவிர்ப்பதற்காக ஊக்கத் தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பும் வரவேற்கத்தக்கவை. அதேநேரத்தில், தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகளில் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றை நிரப்புவதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மதுவிலக்கைப் பொறுத்தமட்டில், ஒருபுறம் அரசு மதுக்கடைகளில் விற்பனை அதிகரித்துக்கொண்டிருக்கும் நிலையில், இன்னொருபுறம் கள்ளச் சாராயம் கரைபுரண்டு ஓடுகிறது. எங்களது வேலூர் மாவட்டத்தில், ஆந்திராவிலிருந்து கொண்டுவரப்படும் கள்ளச்

சாராயம் பெருமளவில் விற்பனை செய்யப்படுகிறது. தெருவுக்குத் தெரு மதுக்கடைகள் திறக்கப்படுவதால், பள்ளி, கல்லூரி மாணவர்கள்கூட மது குடிக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது. திண்டுக்கல்லில் கடந்த வாரம் ஒரு தந்தை தனது 4 வயது மகனை மதுக்கடைக்கு அழைத்துச்சென்று, மது குடிக்க வைத்ததாக அதிர்ச்சியான செய்தி நாளிதழ்களில் வெளியாகியிருக்கிறது. மதுவால் இளைய தலைமுறையினர் சீரழிவது ஒருபுறம் இருக்க, கூலித் தொழிலாளர்கள் தாங்கள் ஈட்டும் வருமானத்தை மதுக்கடைகளில் தொலைத்துவிடுவதால், அவர்களின் குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அமைச்சரைப் பேசுவதற்குக் கூப்பிட்டுவிட்டேன் இல்லையா!

பிற்பகல் 2—30

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல, கடந்த ஆட்சிக் காலத்திலே ஆட்சியாளர்களுடைய உதவியோடு அந்த மது கடத்தல் தொழில் வெற்றிகரமாக நடைபெற்றது. இப்போது புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சி வந்ததற்குப் பின்பு, கடும் நடவடிக்கை எடுத்து, மக்களுடைய உயிரோடு விளையாடிக் கொண்டிருக்கிற இந்தக் கள்ளச் சாராயம் எல்லாம், ஏறத்தாழ முழுமையாக ஒழிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலை உருவாகி இருக்கிறது. கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவர்கள் அதற்குக் கட்டுப்படவில்லையென்றால், அவர்கள் குண்டர் தடுப்புச் சட்டத்தில்கூட கைது செய்யப்பட்டு அடைக்கப்படுகிறார்கள். எனவே, கள்ள மதுபானத்தையும் கடத்தல் மதுபானத்தையும் தடுப்பதற்கு அம்மாவினுடைய அரசு மிகக் கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** கள்ளச் சாராயம் விற்பனையைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் பெருமகனாருக்கு நன்றி கூறுகிறேன். அதேநேரத்தில்



நாம் மதுவை முழுவதுமாக அறவே ஒழிக்க வேண்டும். அப்பொழுதுதான் இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் நாட்டில் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மருத்துவர் அய்யா அவர்கள் வலியுறுத்துகின்ற முழுமையான மதுவிலக்கை நடைமுறைப்படுத்தினால்தான் இந்த நாடு செழிப்பாக இருக்கும் என்பதை இந்த நல்ல நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுந்து நின்று பதில் சொல்லும்போது உறுப்பினர் உட்கார வேண்டும்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மனித நேய கட்சித் தலைவர்கூட அதை வலியுறுத்தினார்கள். மதுவின் தீமையை புரட்சித் தலைவி அம்மாவின் அரசு உணராமல் இல்லை; முழுமையாக உணர்ந்திருக்கிறார்கள். அதிலே மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் ஒரு மாநிலத்திலே மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்றால், பக்கத்திலே இருக்கிற மாநிலங்கள் எல்லாம் அங்கே மதுவை அனுமதிக்கின்றபொழுது, தனியாக ஒரு தீவு போல தமிழகம் மட்டும் அதை அமல்படுத்தினால், நடைமுறையில் அது வெற்றி பெறாது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; மதுவிலக்கை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று சொன்னால், பக்கத்திலே இருக்கிற மாநிலங்கள் எல்லாம் அதை அமல்படுத்தினால் மட்டுமே, தமிழகத்தில் அதை அமல்படுத்தும்போது அது வெற்றிகரமாக அமையும். ஆகவே, ஒரு மாநிலத்தில் மட்டும் அனுமதிப்பது கள்ளச் சாராயத்திற்குத்தான் வழிவகுக்கும். சமூக விரோதிகளுடைய வளர்ச்சிக்குத்தான் அது பயன்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மதுவை முதன்முதலாக அமல்படுத்தியதும் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள்தான் என்பதையும் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

[2011 ஆகஸ்ட் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அடுத்து நில அபகரிப்புக் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க காவல் துறையில் தனிப் பிரிவு ஏற்படுத்தப்படும் என்று தமிழக அரசு அறிவித்த பிறகு, இதுவரை 2,491 நில பறிப்புப் புகார்கள் வந்திருப்பதாக பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது. உண்மையாகவே நடந்த நில பறிப்புகள் மீது நடவடிக்கை எடுப்பதை நாங்கள் வரவேற்கிறோம்; மக்களும் வரவேற்கிறார்கள். ஆனால் அண்மைக் காலத்தில் நில மதிப்பு அதிகரித்துவிட்டதால், கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு நிலங்களை விற்பனை செய்தவர்கள், இப்போது விற்றால் அதிக இலாபம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் நிலங்களை வாங்கியவர்கள்மீது *உண்மைக்கு மாறான புகார்களைக் கொடுக்கும் வழக்கம் அதிகரித்து வருகிறது. எனவே அப்படிப்பட்ட புகார்கள்மீது விசாரணை நடத்தி, அதற்கான முகாந்திரம் இருந்தால் மட்டுமே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

அரிசிக் கடத்தல் என்பது தொடர் கதையாக உள்ளது. அதிலும் நியாய விலைக் கடைகளில் இலவச அரிசி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்ட பின்னர், இந்தக் கடத்தல் அதிகரித்துள்ளது. கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் அரிசிக் கடத்தலில் ஈடுபட்டவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உபயோகித்த ** என்ற அந்த வார்த்தைக்குப் பதில் உண்மைக்கு மாறான தகவல் என்று குறிப்பிடப்பெறலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரிசிக் கடத்தல் பற்றிக் கூறினார்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தியத் துணைக் கண்டம் மட்டுமல்ல; எந்த மாநிலத்திலும், எந்த நாட்டிலும் ஏழையெளியவர்களுக்கு 20 கிலோ அரிசி, 30 கிலோ அரிசி ஒரு குடும்பக் கார்டுக்கு யாரும் இலவசமாகக் கொடுத்ததாகச் சரித்திரம் இல்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2011 ஆகஸ்ட் 11] [திரு. செல்லூர் கா. ராஜு]

கொடுத்திருக்கிறார்கள். இப்படிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றபோது, இந்த அரிசி, இதற்கு முன்பாக இருந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு போட்ட அரிசியைக் காட்டிலும் தரமானதாகவும், சிறப்பானதாகவும், மக்கள் உபயோகிக்கக்கூடிய அளவிற்கும் இருப்பதால், அனைத்து மக்களும் வாங்கி இன்றைக்கு அனுபவிக்கிறார்கள். ஒருசில இடங்களைத் தவிர, எல்லா இடங்களிலும் இன்றைக்கு இந்த விலையில்லா அரிசி மிகச் சிறப்பான முறையில் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. அது மட்டுமல்ல, தமிழகத்திலே இதற்கு முன்பாக இருந்த அரிசி வாங்கும் நிலையை மாற்றி அரிசி இன்றைக்கு அதிகமாக ஒவ்வொரு ரேஷன் கடையிலும் வாங்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 2–35

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு அரிசிக் கடத்தலைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே அப்படிப்பட்ட சம்பவங்கள் ஒரு சில இடங்களில் நடந்துள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதில் தீவிர கவனம் செலுத்தி, இன்றைக்கு அத்தனை பேரையும் குண்டர் சட்டத்திலே போட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; பெயருக்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. யார் இதில் தலையிட்டாலும், அவரோடு மட்டுமல்லாமல்; அவர் சொத்தின்மீதும் இன்றைக்கு நடவடிக்கை எடுக்க அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவரின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, நான் சொல்ல வந்தது, இலவச அரிசி வழங்குவதை எங்கள் கட்சி பாராட்டுகிறது; வரவேற்கிறது. கடந்த இரண்டு மாதங்களில் மட்டும், அரிசிக் கடத்தலில் ஈடுபட்டவர்கள்மீது 1,519 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், 6,227 குவிண்டால் கடத்தல் அரிசி பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும், 67 பேர்மீது குண்டர் சட்டம் பாய்ந்திருப்பதாகவும் பட்ஜெட்டில் கூறப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

இதையும் தெரிந்துகொள்ளவேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, இந்தத் திட்டம் சிறப்பாக நடக்க வேண்டும் என்பதற்காக எவ்வளவு தூரம் முனைப்பாக செயல்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சியிலே, அவர்களுடைய கட்சிக்காரர்களே, கட்சிப் பொறுப்பிலே இருப்பவர்களே வண்டியிலே கடத்திக்கொண்டிருந்தார்கள்; லாரியிலே கடத்திக் கொண்டிருந்தார்கள்; அதுமட்டுமல்ல; தொடர்வண்டிகள் மூலமாகக் கடத்தினார்கள்; கப்பல் மூலமாகக் கடத்தினார்கள். எனவே, இது மட்டுமல்ல சகோதரர்களே, போன ஆட்சிலே நடந்த அத்தனைக்கும், பெயருக்குச் சட்டம் போட்டார்கள்; பெயருக்குக் கைது செய்தார்கள். அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான், அம்மா அவர்கள்தான் இந்தச் சட்டத்தை நிலைநிறுத்தி, இன்றைக்குச் சரியான அதிகாரிகளைக் கொண்டு, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே எங்கும் ரேஷன் அரிசியைக் கடத்தக் கூடாது என்ற அளவுக்கு இன்றைக்கு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய பகுதியிலே எங்காவது இதுமாதிரி அரிசிக் கடத்தல் நடக்குமேயானால், அதுகுறித்து தகவலைக் கொடுப்பாரேயானால், நிச்சயமாக அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலும், அன்றைய தமிழ்நாட்டு முதலமைச்சரிடத்திலேயே பல பத்திரிகையாளர்கள் கேட்டார்கள். இப்படி உங்கள் ஆட்சியிலே தொடர்ந்து அரிசிக் கடத்தல் நடந்துகொண்டிருக்கிறதே, என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள் என்று. ஆனால் ஒரு நடவடிக்கைகூட 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை எடுக்கவில்லை. ஆனால் இப்போதைய அரிசிக் கடத்தல்காரர்கள்மீது இரண்டு மாத கால அளவில் ஆயிரம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதைப் பாராட்ட வேண்டுமே தவிர, அதில் குறை காணக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலே அரிசிக் கடத்தப்படும்போது ஆட்கள் பிடிபடமாட்டார்கள், கடத்தப்படுகின்ற லாரி பிடிக்கப்படும்; இல்லையென்றால், டிரைவர் பிடிபடுவார்; இல்லையென்றால், கிளீனர் பிடிபடுவார். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல டிக்கெட் இல்லாமலேயே பெங்களூருக்கு ரேஷன் அரிசி கடத்தப்பட்டது. ஆனால் இரயில் நிலையத்தில் அரிசி பறிமுதல் செய்யப்பட்டதே தவிர, அங்கு ஆட்கள் பிடிபடவில்லை. அதேபோல, கப்பல்மூலம் வெளிநாடுகளுக்குக் கடத்தப்பட்டது. ஆனால் இந்த ஆட்சியிலே அரிசி கடத்தியவர்கள் பிடிபட்டு, வழக்குகள் பதிவு செய்து, 69 பேர் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பாராட்ட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** நான் ஆட்சிக்குக் கெட்ட பெயர் வரக்கூடாது என்கிற நோக்கத்தில்தான் இதைத் தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்தில், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் யாரும் அரிசிக் கடத்தலில் ஈடுபடவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பாட்டாளி மக்கள் கட்சியினர் கடத்தியதாகச் சொல்லவில்லை. சென்ற மைனாரிட்டி தி.மு.க. அரசிலே இருந்த நிருவாகிகள் கடத்தினார்கள் என்பதைத்தான் சொன்னேன். அன்றைக்கும் துணையிருந்தார்கள்; இன்றைக்கும் துணை இருந்து கொண்டிருக்கிறார்கள். அதுதான் இன்றைக்கு இருக்கிற நிலைப் பாடு. நான் பாட்டாளி மக்கள் கட்சி என்று சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** சாலை விபத்துகளைப் பொறுத்தவரையில், உலகிலேயே அதிக அளவில் சாலை விபத்துகள் நடக்கும் நாடு இந்தியாதான். இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையில் சாலை விபத்துகள் நடக்கும் மாநிலம் தமிழகம்தான். தமிழகத்தில் 2005 ஆம் ஆண்டில் 74.04 இலட்சமாக இருந்த ஊர்திகளின் எண்ணிக்கை, தற்போது 1 கோடியே 36 இலட்சத்து 60 ஆயிரமாக உயர்ந்துவிட்டது.

பிற்பகல் 2–40

அந்த அளவுக்குச் சாலை வசதியை மேம்படுத்தாததுதான் விபத்துகளுக்குக் காரணம் ஆகும். விபத்துகளைத் தடுக்க சாலை வசதிகளை மேம்படுத்துவதுடன், சாலை விதிகளையும் கடுமையாகச் செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கின்றேன்.

உள்ளாட்சித் தேர்தலை அக்டோபர் மாதத்தில் நடத்த இருப்பதாக அறிவிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஊரக, உள்ளாட்சி, ஊராட்சிகளில் பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்ற முடிவெடுத்திருப்பதைப்போல, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் தலைவர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையை அரசு கொண்டுவர வேண்டும். அதற்கானச் சட்டத் திருத்தத்தை இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் அக்டோபரில் நடைபெறும் உள்ளாட்சித் தேர்தலில் உள்ளாட்சித் தலைவர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க முடியும்.

தேசிய நெடுஞ்சாலைகளில் வசூலிக்கப்படும் வாகனக் கட்டணத்தை வசூலிக்கக் கூடாது என்கின்ற ஒரு நியதியைக் கொண்டுவர மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் பள்ளிகளில் பெற்றோர்–ஆசிரியர் கழகப் பொறுப்பிற்கும், நீதிமன்றங்களில் அரசு வழக்கறிஞர்களாகவும் நியமனம் செய்யப்படுகிறார்கள். அதேபோல, கோயில்களில் அறங்காவலர்களாகவும் நியமிக்கப்படுகிறார்கள். பொது மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று சொன்னால், அந்தந்தப் பகுதிகளிலுள்ள பள்ளியின்பால் அக்கறையுள்ளவர்கள்,



தலைசிறந்த நிர்வாகிகள், அதேபோல அரசு வழக்கறிஞர்களாக அனுபவம் பெற்று நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய மூத்த வழக்கறிஞர்களையெல்லாம் நியமித்தால் நிர்வாகம் சிறப்பாக இருக்கும் என்ற காரணத்தினால், அப்படிப்பட்ட ஒரு நிலையைக் கொண்டுவர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்திலேயுள்ள சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்காக, நடப்பாண்டில் 53 கோடி ரூபாய் செலவில் 9 திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டம், அரியூரில் ஸ்ரீ சக்தி அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீபுரம் பொற்கோவிலுக்கு நாள்தோறும் இலட்சக்கணக்கான மக்கள் இந்தியாவிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வந்து செல்கிறார்கள். அங்கும் சுற்றுலாக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடவுள் நம்பிக்கைமிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தப் பொற்கோவிலுக்கும் ஒருமுறை வருகை தந்து, அதனுடைய சிறப்பம்சங்களைத் தரிசித்துச் செல்ல வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

104 அணைகளைப் புனரமைக்க 745 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. முந்தைய, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அணைக்கட்டுப் பகுதிக்குட்பட்ட மேலரசம்பட்டு அணையைக் கட்ட ஆணை பிறப்பித்து, நிதி ஒதுக்கியும்கூட, இதுநாள்வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொதுவாகக் கூறுவார்கள்; 234 தொகுதிகளுக்கும் அம்மாதான் சட்டமன்ற உறுப்பினர் என்று. ஆகவே, தனது தொகுதியாக அணைக்கட்டுத் தொகுதியையும் கருதி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வேலூர் மாவட்டத்தில் தோல் பதனிடும் ஆலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர், நிலத்தடி நீரையும், வேளாண்மை விளை நிலங்களையும் பாழடித்துள்ளது. திருப்பூர் மற்றும் ஈரோடு சாயப்பட்டறைக் கழிவுநீர்ச் சிக்கலுக்குத் தீர்வு காண அரசு நடவடிக்கை எடுத்ததைப்போல, வேலூர் மாவட்டத்தில் தோல் பதனிடும் ஆலைகளிலிருந்து வெளியாகும் கழிவுநீரைச் சுத்திகரித்து கடலில் விடும் திட்டத்தை ரூபாய் 400 கோடி அளவில்

செயல்படுத்த வேண்டும். அதற்காக நடப்பு நிதிநிலை அறிக்கையிலேயே நிதி ஒதுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்தில் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் மாவட்டங்களில் முதன்மையானது வேலூர் மாவட்டமாகும். வேலூரிலுள்ள அல்லாபுரம், தொரப்பாடி பேரூராட்சிகளில் மாதத்திற்கு ஒருமுறைதான் குடிநீர் வழங்கப்படுகிறது. தாராபடவேடு பகுதியில் 22 நாட்களுக்கு ஒருமுறைதான் குடிநீர் கிடைக்கிறது. இன்னும் பல பகுதிகளில் இதேநிலைதான். ஆம்பூர், வாணியம்பாடி, பேரணாம்பட்டு, மேல்விஷாரம், ராணிப்பேட்டை ஆகிய பகுதிகளில் மாசடைந்த குடிநீர் வழங்கப்படும் கொடுமை நிகழ்கிறது. (குறுக்கீடு) ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே ஒரு கேள்விக்குப் பதிலளிக்கின்றபோது, நம்முடைய திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, குடியாத்தம், அரக்கோணம், வாலாஜா, ராணிப்பேட்டை ஆகிய நகராட்சிகளுக்கு 1,295 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு பெரும் திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்தவிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தத் திட்டம் நிறைவடைந்தவுடன், நகராட்சிமூலம் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 90 லிட்டர் தண்ணீர் முழுமையாக அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2—45

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அந்தத் திட்டத்தை அணைக்கட்டுப் பகுதிக்கும் நிறைவேற்றித் தரவேண்டும் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோள். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள். பிறகு பதில் சொல்லிவிடுவார்.

**திரு. ம. கலை அரசு:** மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூபாய் 4,761 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வேலூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் இல்லை. அதே நேரத்தில் அங்கு பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய பயிற்சி மருத்துவர்களுக்கு, தமிழ்நாட்டிலே பயிற்சி மருத்துவர்களுக்கு வழங்கக்கூடிய மாதச் சம்பளத்தை ரூபாய் 30,000/—ஆக உயர்த்தித் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.



வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் டையாலிசிஸ் யூனிட் ஒன்று செயல்பட்டால் மிகவும் சிறப்பாக இருக்கும். அதற்காக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அதே நேரத்தில், அங்கு வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரினால் சுற்றுப்புறம் மிகவும் சுகாதாரக் கேடு அடைகிறது. அதனால், அந்தக் கழிவுநீரை சுத்திகரிப்புச் செய்யும் பணியினையும் மேற்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** வேலூர் மாவட்டத்தில் அணைக்கட்டு தொகுதியில் மணல் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அந்த மணல் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்கின்றேன். நேற்றையதினம் வேலூரில் பத்திரப் பதிவு அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புப் போலீசார் நடத்திய சோதனையில் 4,80,000/- ரூபாய் கைப்பற்றப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் மாற்றினால்தான் அரசுக்கு நல்ல பெயர் உண்டாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் வேலூர் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலே நடைபெற்ற சோதனையின்போது, யார் தவறு செய்திருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், யார், தவறு செய்திருந்தாலும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்காது என்பதைப் பேரவையினுடைய தகவலுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள். (குறுக்கீடு) அப்படியென்றால் நன்றிகூறி ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள். ஒரே ஒரு நிமிடம்தான்.

**திரு. ம. கலை அரசு:** வாய்ப்பு நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், ஏனைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மற்றவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு திருத்தம். அவர் பேசுகின்றபொழுது, எங்கள் பாட்டாளி மக்கள் கட்சி சமச்சீர் கல்வியை அமல்படுத்த போராட்டம் நடத்தியாகச் சொன்னார். ஆனால், அதனுடைய நிறுவனர் சமச்சீர்க் கல்வி என்று சொல்லவில்லை. இதை சமரசக் கல்வி என்றுதான் சொல்லியிருக்கிறார் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபொழுது சாலை விபத்துகளைப் பற்றிச் சொன்னார்கள். கடந்த கால ஆட்சியில் சாலை விபத்துகளைத் தடுப்பதற்கு மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மூன்றாவது முறையாகத் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சாலைகளில் தேவையான அளவு அடையாளக் குறியீடுகள், மேம்பட்ட ஒளிர் விளக்குகள் உள்ளிட்ட சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கின்றார் என்பதை அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன். 10 நிமிடங்களில் பேசிவிடுங்கள். Round–ஆக 3–00 மணிக்கு முடித்துவிடுங்கள்.



***திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசி நேரத்திலே பவளக்கொடி நாடகத்திலே பாடும் பாகவதரைப்போல இந்த நேரத்திலே கொண்டுவந்து நிறுத்திவிட்டீர்கள். (சிரிப்பு) இருந்தாலும்கூட என்னுடைய வணக்கத்தை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாம் முறையாக என்னை இந்த அவைக்கு அனுப்பிய எங்களுடைய அன்பிற்குரிய தலைவி அன்னை சோனியா காந்தி அவர்கள், இளந்தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்கள், என்னுடைய அரசியல் வழிகாட்டி, அன்புத் தலைவர் திரு. ஜி.கே. வாசன் அவர்கள், பட்டுக்கோட்டை வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பேச வாய்ப்பளித்தத் தங்களுக்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு வரி இல்லா பட்ஜெட், மத்திய அரசினுடைய திட்டங்களையும் இணைத்து அறிவித்துள்ளீர்கள், வாழ்த்துக்கள்.

தேர்தல் காலங்களிலே கொடுத்த வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றக்கூடிய முயற்சியின் ஆரம்பமாக இந்த பட்ஜெட் உள்ளது என்பதைப் பிரதிபலிக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. காங்கிரஸ் பேரியக்கத்தைப் பொறுத்தவரையில், நாங்கள் எண்ணிக்கையிலே குறைவாக இருந்தாலும்கூட, ஒரு ஆட்சி என்று சொல்லும்போது, அது செய்யக்கூடிய நல்ல காரியங்களைப் பாராட்டுவதிலும், குற்றங்களை நாகரிகமான முறையில் எடுத்து வைப்பதிலும் நாங்கள் ஆக்கபூர்வமான ஒரு இயக்கமாகச் செயல்பட வேண்டுமென்ற ஒரு நோக்கத்தோடுதான் நாங்கள் இங்கு வந்திருக்கின்றோம். அந்த வகையிலே எந்தக் காலத்திலும் நல்ல திட்டங்களைப் பாராட்டுவதிலும், குற்றம் குறைகளை எடுத்துக் கூறுவதிலும் நிச்சயமாக நல்லமுறையிலே செயல்படுவோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–50

பட்ஜெட்டைப் பொறுத்தவரையில், இன்றைக்குப் பல்வேறு நல்ல திட்டங்கள் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், முதியோர் உதவித் தொகை வழங்குவது; இன்றைக்கு எத்தனையோ ஏழையெளிய மக்கள் எல்லாம் ஒருவேளை கஞ்சிக்குக் கஷ்டப்படுகிற நேரத்திலே 500 ரூபாய்

என்று இருந்ததை இன்றைக்கு 1,000 ரூபாயாக உயர்த்தியிருக்கின்றீர்கள். திருமண உதவித் தொகை உயர்த்தப்பட்டிருக்கின்றது. அதேபோன்று மாணவர்களுக்குச் சீருடை வழங்குவது போன்ற நல்ல திட்டங்களெல்லாம் கொடுத்திருக்கின்றீர்கள். ஆனால், இந்தத் திட்டங்களை மக்களுக்குச் சென்று சேர்க்கக்கூடிய பணிகள் அதிகாரிகளினுடைய கையில்தான் முழுவதுமாக இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ரூ.1,000 கொடுக்கின்ற இந்தத்திட்டத்திற்காக இன்றைக்கு எத்தனையோ ஏழையெளிய முதியோர்கள் எல்லாம் மனதிலே ஏக்கத்தோடு கண்களிலே ஆர்வத்தோடும் எங்களையெல்லாம் வந்து பார்த்து, சட்டமன்ற உறுப்பினர் அவர்களே, விரைவாக அதைப் பெற்றுத் தரவேண்டும் என்று கேட்கும்பொழுது, அந்தப் பணிகள் நல்லமுறையிலே நடக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய ஆசை. அதற்கான முழுப் பொறுப்பும் வருவாய்த் துறை கையில்தான் இருக்கிறது. ஆனால் வருவாய்த் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு மிகக் குறைவான ஆட்கள், எந்த வேலையாக இருந்தாலும், ஒரு பைபாஸ் திட்டமென்று சொன்னாலும் அந்தத் திட்டத்திற்கு நிலம் எடுக்க வேண்டுமென்று சொன்னாலும், வருவாய்த் துறையைக் கூப்பிட வேண்டியிருக்கிறது. ரேஷன் கார்டுகளை ஆய்வு செய்ய வேண்டுமென்று சொன்னாலும், வருவாய்த் துறைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, வருவாய்த் துறையினுடைய காலிப் பணியிடங்களையெல்லாம் மதிப்பிற்குரிய தமிழக முதல்வர் அவர்கள் முழுமையாக நிரப்பினார்கள் என்று சொன்னால், இதுபோன்ற திட்டங்களெல்லாம் வெகு விரைவாக மக்களைச் சென்று, ஏழையெளிய மக்களைச் சென்று அடைவதற்கான வாய்ப்புகள் நிச்சயமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோன்று, இன்றைக்கு நமது காவல் துறையைப் பொறுத்தவரையிலே, இந்தியாவிலேயே, தமிழ்நாடு காவல் துறை என்பது எந்தக் காலத்திலும் பெருமைபெற்ற ஒரு காவல் துறையாகத்தான் நல்லமுறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. பல்வேறு நிகழ்வுகளிலே பார்த்தீர்கள் என்று சொன்னால், நல்ல முறையில் பணியாற்றுவது தெரியும். ஆனால், போக்குவரத்துக் காவல் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்குச் சென்னையிலோ, கோயம்புத்தூரிலோ, மதுரையிலோ இருக்கக்கூடிய அளவிற்கு municipality level-ல் இருக்கக்கூடிய இடங்களிலே போக்குவரத்துக் காவலர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவாக



இருக்கின்றது. குறிப்பாக தஞ்சை, பட்டுக்கோட்டை, கும்பகோணம் போன்ற பகுதிகளிலெல்லாம் இந்தப் போக்குவரத்துக் காவலர்களுடைய எண்ணிக்கை என்பது மிக, மிகக் குறைவாக இருக்கின்றன. நாளுக்கு நாள் இரண்டு சக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டிருக்கிற காரணத்தினால்தான், இந்த விபத்துகள் அதிகரித்திருப்பதாக நமது நண்பர்கள்கூட சொன்னார்கள். அது தடுக்கப்பட வேண்டுமானால், போக்குவரத்துக் காவலர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். குறிப்பாக பட்டுக்கோட்டை போன்ற பகுதிகளில் எல்லாம், ஒரு சாலை இருக்கிறதென்று சொன்னால், அங்கே No Parking-லே காரை நிறுத்தி விடுகின்றார்கள். இங்கே மெட்ராசில் நிறுத்தினால் பயமாக இருக்கிறது. Recovery Van மூலமாக எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். அதற்கான சிறிய வசதிகள்கூட எங்கள் ஊரிலெல்லாம் கிடையாது. எனவே, போக்குவரத்துக் காவலர்களுடைய எண்ணிக்கையை இதுபோன்ற பகுதிகளிலே எல்லாம் நல்ல முறையிலே அதிகரித்து, அதன்மூலமாகப் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டு, விபத்துகள் தவிர்க்கப்பட வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரையிலே, 2011–2012 ஆம் ஆண்டிலே 115 இலட்சம் மெட்ரிக் டன் உயர் இலக்கினை அடைவதற்கு முழு முயற்சி எடுக்கப்படுமென்று சொல்லியிருக்கின்றீர்கள். கரும்பைப் பற்றிச் சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால், எங்கள் மனதிலே ஒரு சிறிய குறைபாடு என்னவென்று சொன்னால், தஞ்சை மாவட்டம் மட்டுமல்ல; இன்றைக்குத் தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய தென்னை விவசாயிகளினுடைய நலனுக்காக இந்த அரசு எதையும் அறிவிக்கவில்லை என்ற வருத்தம் எங்களுக்கு இருக்கிறது. வருங்காலத்திலே அதை நிச்சயமாக அறிவிப்பீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. தென்னையைப் பொறுத்தவரையிலே, அதன் ஆதார விலை என்பது கிட்டத்தட்ட 2 வருடங்களுக்கு முன்பு ஒரு தேங்காய் 2 ரூபாய், 2½ ரூபாய் என்று விற்றுக் கொண்டிருந்தது. இன்றைக்கு அது நன்றாக இருக்கிறது. அது 6 ரூபாய், 6½ என்று விற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், என்றைக்கு விலை வீழ்ச்சியடையும் என்பது எங்களுக்கே தெரியாத ஒரு புதிராக இருக்கிறது. இன்றைக்கு 8 ரூபாயும் விற்கிறது. 4 ரூபாயும் விற்கிறது. இன்னும், 2, 3 மாதங்கள் போனால், தேங்காய் எண்ணிக்கைக் கூடினால், 4 ரூபாயிலிருந்து 2 ரூபாயாகக்கூட வந்து விடும். 1983–லும்

[திரு. என்.ஆர். ரெங்கராஜன்] [2011 ஆகஸ்ட் 11

2½ ரூபாய்; 2011–லும் 2½ ரூபாய். அன்றைக்கு 2½ என்று விற்ற காலங்களிலே வாழ்க்கை வசதிகளை அனுபவித்த விவசாயிகள், இன்றைக்கு அதில் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த ஆதார விலையில் விற்க வேண்டுமென்று சொன்னால், இந்த விலை குறைந்தபட்சம் 6 ரூபாயோ அல்லது 7 ரூபாயோ விற்க வேண்டுமென்று சொன்னால், தேங்காயினுடைய உபயோகம் அதிகமாக வேண்டும். கடந்த காலங்களிலும் நான் கேட்டுக் கொண்டிருந்ததுபோல், இன்றைக்கு மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தத் தேங்காய் உபயோகம் அதிகமாக வேண்டுமென்று சொன்னால், சத்துணவிலே இளநீர் கொடுக்கும் திட்டத்தைத் தயவுசெய்து அறிவிக்க வேண்டும். இளநீர் என்பது மிக அருமையான ஒரு உணவுப் பொருள். யாருக்கும் ஒத்துக்கொள்ளக்கூடியது. நாம் சத்துணவிலே தினமும் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் நிதியாதாரத்தைக் கட்டுப்படுத்த முடியாது. அது கிடைக்காது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். வாரம் ஒரு முறையோ, 15 தினங்களுக்கு ஒரு முறையோ, இல்லை மாதம் ஒரு முறையோ அந்தக் குழந்தைகளுக்கு ஒரு இளநீர் கொடுத்தீர்கள் என்று சொன்னால், குழந்தைகளும் நன்றாக இருப்பார்கள்; தென்னை விவசாயிகளும் நன்றாக இருப்பார்கள் என்பதை உணர்ந்து இந்த அரசு நிச்சயமாக அதைக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, இந்த சொட்டுநீர்ப் பாசனத்தைப் பற்றி நான் காலையில் கேள்விகளைக் கேட்டுவிட்டேன். அதனால் அதைப்பற்றி அதிகமாகப் கேட்க விரும்பவில்லை. அதேபோன்று, இன்றைக்கு தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களிலே ஒரு மிகப் பெரிய தொழிலாக அன்னியச் செலாவணியை ஈட்டுத் தரக்கூடிய தொழிலாக நடந்து கொண்டிருப்பது இறால் பண்ணை.

பிற்பகல் 2–55

இறால் பண்ணைகளை அமைப்பதன் மூலமாக இன்றைக்கு அரசே அதற்கு அனுமதி அளித்து லைசென்ஸ் எல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு திருவாரூர் மற்றும் தஞ்சை மாவட்டங்களினுடைய கடலோரப் பகுதிகளிலே சுமார் 1,500 ஹெக்டேருக்கு மேல் இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டு, அந்த இறால் பண்ணைகள் நல்லமுறையிலே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட



2011 ஆகஸ்ட் 11] [திரு. என்.ஆர். ரெங்கராஜன்]

தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். கடந்த ஆண்டிலே மட்டும் சுமார் 300 கோடி ரூபாய்க்கு மேல் இறால் விற்கப்பட்டு, அவை ஏற்றுமதி செய்யப்பட்டு, கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் அன்னியச் செலாவணியாகப் பெறப்பட்டு இருக்கின்றது. ஆனால், அரசைப் பொறுத்தவரையிலே, மீன் வளத்திற்குக் கொடுக்கக்கூடிய உதவிகள் இறால் பண்ணைகளுக்குக் கொடுக்கப்படுவது இல்லை. எனவே, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இறால் பண்ணைகளுக்குக் கொடுக்கக்கூடிய வங்கிக் கடனை agriculture base–ல் கொடுக்கிறார்கள். அதேபோன்று, மற்ற எல்லா வசதிகளும் விவசாயத்தைச் சார்ந்தே வருகின்றது. ஆனால், மின்சாரம் கொடுக்கும்போது மட்டும் தொழிற்சாலை என்ற category-ன்கீழ்தான் கொடுப்போம் என்று சொல்லும்போது, மிக அதிகமான அளவிலே பணம் கட்டப்பட வேண்டியிருக்கிறது. எனவே, இந்த இறால் பண்ணைத் தொழிலை ஊக்குவிப்பதற்கு விவசாயத் துறையின்கீழ் எடுத்து அதை முழுவதுமாக ஊக்குவிப்பீர்கள் என்று சொன்னால், அதனால் பல குடும்பங்கள் வாழும்; அன்னியச் செலாவணி பெருகும்; அதேநேரத்தில் விவசாயத்தைச் சார்ந்திருக்கக்கூடிய இந்தப் பகுதியில் நல்ல முறையில். . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் point of order கேட்கிறார்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உரையாற்றிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இறால் ஏற்றுமதியில் அதிக வருவாய் கிடைப்பதால் அதை அரசு ஊக்குவிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், தமிழகத்தினுடைய அனுபவம், நாடு முழுவதும் இருக்கின்ற அனுபவம், இறால் பண்ணைகளாலே பல இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உப்பு நீராக மாறி, அது பலனற்றுப் போயிருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக அவர் சார்ந்திருக்கிற தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களிலேயே இறால் பண்ணைகளாலே வெள்ள நீர் வடியாமல் அங்கு மிகக் கடுமையான பாதிப்பு ஏற்பட்டு, அதனாலே அந்த மாவட்ட விவசாயிகள் இறால் பண்ணைகளை ஒழிக்க வேண்டுமென்று பல போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியிலே கிள்ளையிலே நடைபெற்ற போராட்டத்தில் கடந்த ஆட்சியிலே 17 மீனவர்கள் பெண்கள் உட்பட கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

எனவே, ஏற்றுமதி வருமானம் கிடைக்கிறது என்கிற ஒரே காரணத்தினால்— இப்பொழுது எவ்வளவு வருமானம் கிடைக்கிறது என்கிற விவரங்கள் தெரியவில்லை. அப்படி ஒன்றும் பெரிய வருமானம் இல்லை— ஏற்றுமதிக்காக நம்முடைய சொந்த விவசாயத்தையும், சொந்த மக்களையும் அழித்துக்கொள்கிற, விளை நிலங்களை அழித்துக்கொள்கிற இறால் பண்ணைகளை ஊக்குவிப்பது ஆபத்தானது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறால் பண்ணைகள் விளைநிலங்களைக் களர் நிலங்களாக மாற்றிவிடுகின்றன. இதன் காரணமாக உப்பு நீர் ஏறக்குறைய 10 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டருக்கு உள்ளாகச் சென்றுவிடுகிறது. நிலத்தடி நீர் பாழ்படுகிறது என்ற கருத்துகள் தொடர்ந்து எழுப்பப்படுகின்ற வேளையிலிருந்து, இறால் பண்ணைகளை எந்த காரணத்தைக் கொண்டும் ஊக்குவிக்க கூடாது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறால் பண்ணைகளை நடத்திக்கொண்டு வருபவர்கள் எல்லாம் மிகப் பெரிய கம்பெனிகள் அல்ல, சிறிய விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்தான். அவர்களுடைய சொந்தப் பணத்திலிருந்து 20 பேர், 30 பேர், 40 பேர், 50 பேர் என்று கூட்டமைத்துக் கொண்டுதான் இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, எதைச் செய்தாலும் 'Every plus has a minus' என்று சொல்வார்கள். ஒரு திட்டத்தை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், அதிலே நல்லதும் இருக்கும், கெட்டதும் இருக்கும். அதை அரசு ஆராய்ந்து, அதிலே ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், அவர்கள் கூறுவதுபோல வெள்ளம் தடுக்கப்படுவதாக இருந்தாலும், வெள்ள நீர் வடியவில்லை என்று சொன்னாலும், அதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்துவிட்டு, இந்தத் தொழிலை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அதிலே இருப்பவர்களெல்லாம் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்களாகத்தான் இருக்கின்றார்கள் என்ற காரணத்திற்காக அதை நான் கூறுகின்றேன்.



அடுத்ததாக, பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரையிலே இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, குறிப்பாக பட்ஜெட்டிலே ரூபாய் 245.49 கோடியிலே பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று கூறியிருக்கின்றீர்கள். தஞ்சை மாவட்டத்திலே காட்டாறுகள் இருக்கக்கூடிய பகுதிகளையெல்லாம் ஆய்வு செய்து, அந்தப் பகுதிகளில் எல்லாம் Check Dam அமைப்பதன் மூலமாக—இப்பொழுது உப்புத் தண்ணீராக மாறிக் கொண்டிருக்கிறது என்று. அவர்கள் கூறினார்கள், அதுபோன்ற நிகழ்வுகள் எல்லாம் ஏற்படாத வண்ணம் Check Dam–களை அமைத்தோம் என்று சொன்னால்—நிச்சயமாக அந்தப் பகுதிகளினுடைய நீராதாரம் தஞ்சை மாவட்டத்தினுடைய கடைமடைப் பகுதிகளில் இருக்கக்கூடிய நீராதாரம் அதிகப்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, எங்கள் பகுதியிலே இருக்கக்கூடிய பல்வேறு வாய்க்கால்கள் எல்லாம் நபார்டு வங்கியின் மூலமாக தூர்வாரப்பட்டு, கரைகளெல்லாம் கடந்த காலங்களிலே பலப்படுத்தப்பட்டன. ஆனால் வடகாடு வாய்க்கால் என்ற வாய்க்கால் மட்டும் விடுபட்டு, இன்று வரை அந்த வாய்க்காலைப் பழுதுநீக்கம் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, நபார்டு வங்கியின் மூலமாக அந்த வடகாடு வாய்க்காலைப் பழுதுநீக்கம் செய்வதற்கு திட்ட மதிப்பீடு ஏற்கெனவே அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, நபார்டு வங்கியின் மூலமாக அந்த வடகாடு வாய்க்காலை மேம்பாடு செய்வதற்காக நிதி பெற்றுத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–00

அதேபோன்று, Highways சாலைப் பணிகளைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு பட்டுக்கோட்டை bye pass திட்டம் என்பது எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்களுக்குக்கூட தெரியும். பட்டுக்கோட்டையிலே நடந்து செல்வதற்குக்கூட முடியாத அளவிற்கு மிகக் கடுமையான போக்குவரத்து இருக்கக்கூடிய நேரத்திலே, bye pass சாலையை மிகவும் சிரமப்பட்டு நாங்கள் அந்த நேரத்திலே, ஆரம்பித்தோம். அதற்குக் கடந்த அரசைப் பொறுத்தவரையில், 10 கோடி ரூபாய் பாதி பணம் மட்டும் ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, பாதியிலே நிற்கின்றன. எனவே, நமது அரசைப் பொறுத்தவரையிலே, ஏழு கிலோ மீட்டர் நீளமுள்ள அந்த bye pass சாலைக்கு நிதி தேவைப்படுகின்றது.

அதற்கான நிதியொதுக்கீடு செய்து, அந்த bye pass சாலைத் திட்டத்தினை விரைவிலே முடித்து வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, மருத்துவத் துறையைப் பொறுத்தவரையிலே, தஞ்சை மாவட்டத்தில் நிறைய கோரிக்கைகள் இருக்கின்றன, அவற்றை நேரிலே நான் கொடுத்துவிடுகிறேன். காலத்தின் அருமை கருதி நான் பேச விரும்பவில்லை. ஒன்றிய மருந்தகங்கள் என்று District Board காலத்திலிருந்து 1950–களிலே Union Dispensary என்று ஆரம்பிக்கப்பட்டு, இன்றுவரை அதை விடாமல் வைத்திருக்கின்றார்கள். ஒன்றியத்தினுடைய control–லிலே வைத்துக்கொண்டு, வருடத்திற்கு ரூபாய் 50,000/–க்கு மருந்து மட்டும் கொடுக்கப்படுகின்றது. ஒரேயொரு மருத்துவர் மட்டும்தான் எல்லா இடங்களிலுமே இருக்கிறார்கள். அந்தக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டவை. ஏன் வைத்துக்கொண்டிருக்கிறோம் என்பது இதுவரை தெரியவில்லை. எனவே, அந்த ஒன்றிய மருந்தகங்களை Union Dispensary–களை மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் எடுத்து, அதை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும். ஏனென்றால், தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், 4, 5 இடங்களில் மட்டும்தான் இருக்கிறது; அதிகம் கிடையாது. இதேமாதிரி தமிழ்நாடு முழுவதும் பலர் பணி புரிகின்றார்கள். எனவே, அந்த Union Dispensary–ஐ மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று என்னுடைய இரண்டு, மூன்று கோரிக்கைகளை மட்டும் கூறி, முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிக்கிறேன் என்கிறது மாதிரி இருக்கிறது. ஆனால் முடிக்கமாட்டேன் என்கிறீர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** Court–களிலே–நீதிமன்றங்களில் வெளியே வரும்பொழுது மக்கள் எல்லோரும் நின்று கொண்டிருக்கக்கூடிய காரணத்தினாலே, நீண்ட நாட்களாக எல்லா நீதிமன்றங்களிலும் ஒரு Waiting Hall கட்டவேண்டும் என்ற ஒரு proposal இருந்தது. அது தற்போது எல்லா இடங்களிலும் மதிப்பீடு செய்யப்பட்டு அப்படியே இருக்கின்றது. எனவே, சட்டத் துறையின்கீழ் எடுத்து அந்த Waiting Hall–ஐ கட்டிக் கொடுப்பதற்குத் தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.





அதேபோன்று, பட்டுக்கோட்டை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நபார்டு வங்கியின் உதவியோடு கிட்டத்தட்ட 2¼ கோடி ரூபாயில் புதிய கட்டடம் கட்டப்பட்டு முடிக்கக்கூடிய சூழ்நிலையில், கடந்த நான்கு மாத காலமாக அந்தப் பணி சற்றுக் காலதாமதமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. அது ஏன் என்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, அந்தக் கட்டடப் பணிகளை விரைவிலே முடித்துக் கொடுக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொண்டு, நல்ல வாய்ப்பினை அளித்தத் தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 12–8–2011 அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ 12–8–2011, வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்
மறுப்போரே இல்லை,
தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

12–8–2011 அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12–8–2011) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

–ஏதுமில்லை–

*******